**உள்ளடக்கம்** **பக்க எண்**


ஆணைக்குழுத் தகவல்கள் 123

தொலைநோக்கு மற்றும் செயற்பணி 124

தலைவரின் செய்தி 125

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி 127

அறிமுகம் 130

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அமைப்புக் கட்டமைப்பு 130

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதவியணி 133

நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவு 134

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு 150

பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு 162

தேசிய தேர்ச்சித் தரம், பாடவிதானம் மற்றும் தேசிய தொழிற்திறன் தகுதிகள் பிரிவு 168

தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு 173

கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு 190

தகவல் முறைமைகள் பிரிவு 201

சர்வதேச ஒத்துழைப்பு 216

நிதிக் கூற்று 218 - 247

நிதி நிலைமைக் கூற்று அறிக்கை 218

நிதிநிலைக் கூற்று 219

தேறிய சொத்து வேறுபாடு தொடர்பான அறிக்கை 220

நிதிநிலைக் கூற்று 221

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 222

நிதி செயற்பாட்டு கூற்றுஇறிப்பு 224

தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய உப குறிப்புகள் 225

தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய உப குறிப்புகள் 231

நிதி வெளிப்படுத்தல்கள் 238

கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை 248

கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கைக்கான விளக்கம் மற்றும்விடைகள் 266

## ஆணைக்குழுவின் தகவல்கள்

| | |
|---|---|
| நிறுவனம் | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு |
| அமைச்சு | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு |
| முகவரி | 03 ஆம் மாடி,<br>“நிபுணதா பியச”, 354/2,<br>எல்விட்டிகல மாவத்தை,<br>கொழும்பு - 05 |
| மின்னஞ்சல் | info@tvec.gov.lk |
| இணையத்தளம் | www.tvec.gov.lk |
| தொலைபேசி | 011 - 7608000 |
| தொலைநகல் | 011 - 2555007 |
| கணக்காய்வாளர்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி,<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்,<br>பத்தரமுல்லை. |
| வங்கி | மக்கள் வங்கி<br>வை. எம். பி. ஏ கிளை<br>பொறளை |

**தொலைநோக்கு**

தொழிற் சந்தைக்கு பொருந்தும் வகையில் தரமான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வியை சகலருக்கும் வழங்குவதே எமது தொலைநோக்காகும்.

**செயற்பணி**

மாறுகின்ற உலக சந்தையின் தேவைப்பாடுகள் மற்றும் சமூக - பொருளாதார குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் பயனுறுதியும் வினைத்திறனும் மற்றும் தர உத்தரவாதமும் வாய்க்கப்பெற்ற தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி முறைமையை தாபித்தலும் மற்றும் அதனைப் பேணுதலுமே எமது செயற்பணியாகும்.

## தலைவரின் செய்தி

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவானது தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி பயிற்சித் துறையின் ஒழுங்குபடுத்தும் நிறுவகம் என்ற வகையில் 2017 ஆம் ஆண்டில் பாரிய சீர்த்திருத்தங்களை மேற்கொண்டது. கௌரவ அமைச்சரினால் ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்களை நியமிக்கும் போது ஆணைக்குழுவின் பங்கு, எதிர்ப்பார்ப்புக்கள் மற்றும் அவசரமாக தேவைப்படும் மாற்றங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட மீள் ஒழுங்குபடுத்தல்களினூடாக தொழிநுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சியை அர்த்தமுள்ளதாக்குவதனூடாக பயிலுநர்களுக்கு இலகுவாக தொழில்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அதனூடாக தொழிற் சந்தை நிலைத்திருத்தலை ஏற்படுத்துவதற்கும் எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது. இதற்காக திறன் துறை மன்றங்கள் உருவாக்கப்பட்டிருப்பினும் அவர்களது பூரணமான பங்களிப்பினை பெற்றுக்கொள்ள முடியாமைக்கான காரணியாக அவற்றின் ஆற்றல்களை ஒழுங்கான முறையில் இனங்காணாமையை குறிப்பிட முடியும். கௌரவ அமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ் இத்திறன் துறை மன்றங்களை மேற்பார்வை செய்வதனை ஆணைக்குழு மேற்கொண்டதோடு இந்த ஆண்டிற்கான கட்டுமான துறைக்கான பாடவிதானங்களுக்கான நடைமுறை மாற்றங்களை அத்திறன் துறை மன்றங்களின் வழிகாட்டுதல்களின் கீழ் மேற்கொள்ள முடிந்தது.

மாணவ, மாணவிகள் பாடநெறிகளை விட்டு இடைவிலகுவது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டதோடு பாடநெறிகளுக்கான கால எல்லை அதிகரித்தல் அதில் தாக்கத்தினை செலுத்துவது கண்டறியப்பட்டது. ஏற்கனவே முடிவு செய்யப்பட்டதன்படி ரத்துச் செய்யப்பட்ட 3 மாதத்திற்கு குறைவான பாடநெறிகளுக்கு தொழிற் பயிற்சி கட்டாயப்படுத்தப்பட்டது. எவ்வாறிருப்பினும் தொழிற் பயிற்சியினை சரியான விதத்தில் இனங்காணல் முக்கியமாவதோடு அதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட செயல்முறையினை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

தொழிற் துறையில் நீண்ட காலமாக இனங்காணப்பட்டிருந்தும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதிருந்த மென் திறன்களின் அவசியப்பாடுகளுக்கிணங்க வல்லுநர்களின் பங்களிப்போடு வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு இவ்வருடத்திற்குள் முடியுமானது. தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 245 நிலையங்களுள் ஆங்கிலம் கற்பித்தல் அவசியமாவதோடு அதற்காக 14 ஆசிரியர்கள் உள்ளனர். எவ்வாறிருப்பினும் தேவையான ஆசிரியர்களை வெளிவாரியாக சேவையில் இணைத்துக் கொள்வதற்கு தொழிற் பயிற்சி அதிகாரசபை ஊக்குவித்ததோடு இதில் மாணவ, மாணவிகள் தொடர்ந்தேர்ச்சியாக பங்குபற்றுவதில் ஆர்வம் செலுத்தினர்.

இயற்கையில் தொழிநுட்பத் பிரிவுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த தொழிற் பயிற்சித் துறைக்கு புதிய கொள்கைகளை அறிமுகப்படுத்துவதனூடாக சேவைத்துயின் தொழில்களுக்கு தொடர்ச்சியான பங்களிப்பு எதிர்ப்பார்க்கப்பட்டது. இதற்காக சுற்றுலா மற்றும் பராமரிப்புத் துறைகளுக்கான புதிய பாடவிதானங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

இவ்வருடத்தினுள் தேசிய தொழிற் தகைமைகள் முறையின் செயல்திட்டக் கையேடு நாளதுவரையாக்கப்பட்டதோடு கணிப்பீடுகளின் நிலைமையை முன்னேற்றுவதற்காக தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் என்ற புதிய பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் துறை மன்றங்களை ஒருங்கிணைப்பதற்காக கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவும்

ஸ்தாபிக்கப்பட்டது.

இவ்வருடத்தில் சமூக சந்தைப்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டத்தினை மேற்பார்வை செய்யும்படி திறன்கள் துறை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவிடம் வேண்டப்பட்டுள்ளது. இதற்கான அடிப்படை ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக வெவ்வேறு பயிற்சி நிறுவகங்கள் தனித் தனியாக வேலைத்திட்டங்களை நடாத்தல் மற்றும் ஒரே வேலைத்திட்டம் பல்வேறு நிறுவகங்களினூ டாக நடாத்துவதனை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்கு பொறுப்பு கூறும் அனைவரதும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் இலக்கு அவசியமாகின்றது.



பேராசிரியர் ரஜிவ் விஜேசிங்க
தலைவர்

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி என்பனவற்றை கண்காணிக்கும் நிறுவனமான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் நோக்கங்களுள் இலங்கையின் சகல விதமான தொழிற் பயிற்சிகளுடன் தொடர்புபட்ட விடயங்களுக்கான கொள்கை வகுத்தல், தர ஒழுங்குபடுத்தல், தேர்ச்சித் தரங்களின் நிலைத்திருப்பு, சான்றுறுதிப்படுத்தல் போன்றன முக்கியமாகின்றன.

2016 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட அலுவலர்கள் 116 ஆக இருந்த அதேவேளை 95 பேர் மாத்திரமே தொழிலில் அமர்த்தப்பட்டிருந்தனர். 2016 ஆம் ஆண்டில் கட்டமைப்புச் செலவுகளுக்காக 120 மில்லியன் ரூபாவும் மூலதனச் செலவுகளுக்காக 14.35 ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளதுடன் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானமான 10 மில்லியன் ரூபாவுக்கு பதிலாக 13.5 மில்லியன் ரூபா வருமான உயர்வினைப் பெற முடிந்தது.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டமானது திருத்தங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்த அதேவேளை சட்டவரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வரைஞர் குழுவின் பரிந்துரைப்புக்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு மற்றும் கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு ஆகிய இரு புதிய துறைகள் ஸ்தாபிக்கப்பட்டதுடன் அவற்றிற்கான ஆளணியினை சேர்த்துக் கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, அதனூடாக தொழிற் பயிற்சியின் தரத்தினை அதிகரித்தல் மற்றும் கைத்தொழில் துறையிலுள்ள தொடர்புளை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவானது அத்துறைக்கான கொள்கைகளை வகுப்பதற்கு தொடர்ச்சியான பங்களிப்பினை நல்குகின்ற அதேவேளை தொழிற் பயிற்சியை முன்னேற்றமடையச் செய்வதற்கு திட்டங்களை வகுத்தல், பாடநெறி தராதர அங்கீகாரத்திற்காக நிதி விருதளித்தல், மேம்பாட்டினை பதிவு செய்தல் போன்ற செயற்பாடுகள் 2016 ஆம் ஆண்டில் திட்டமிடல், ஆராய்ச்சிப் பிரிவினால் புரியப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் தனியார் துறைக்கான நிதியுதவியாக 13 இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டதுடன் அச்சுத் துறை, மின்னியல், இலத்திரனியல் துறை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை என்பனவற்றிற்கு 8.56 இலட்ச ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு வரையில் 20 தொழிற்கல்வி பயிற்சி திட்டங்கள் (VET Plans) உருவாக்கப்பட்டதோடு அவற்றுள் 14 புதுப்பிக்கப்பட்டுள்ளது. சூழல் பாதுகாப்பு தொடர்பான தொழிற் பயிற்சி திட்ட அறிக்கைகளானது பசுமை தொழிநுட்பவியல் மேம்படுத்தலுக்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய படிமுறையாகும். மேலும் வளர்ச்சியடைந்து வரும் துறையான தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலுக்கு (ICT) தொழிற் பயிற்சி திட்டத்தினை தயாரிப்பதற்காக 23 இலட்ச ரூபா வேறாக்கப்பட்தோடு 2017 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 5 இலட்ச ரூபாவுக்கான வேலைகளை முடித்து வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழில், தொழில்நுட்ப பயிற்சி துறையின் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் அவற்றின் முடிவுகளை நடைமுறைப்படுத்தவும் உருவாக்கப்பட்ட பொறிமுறையின் மூலம் 2016 ஆம் ஆண்டு 12 ஆராய்ச்சிகளுக்காக 20 இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டதோடு அதில் 6 இலட்ச

ரூபா 2016 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்டது. மேலும் இரு ஆராய்ச்சி செயலமர்வுகள் நடாத்தப்பட்டு ஆராய்ச்சியாளர்களின் திறன்கள் மேம்பாடடையச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில் 326 பயிற்சி நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு அதனுள் 102 தனியார் நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன. மேலும் 355 பயிற்சி நிலையங்களின் பதிவு புதுப்பிக்கப்பட்டுள்ளது. தராதர ஒழுங்குபடுத்தலின் அடுத்த கட்ட நடவடிக்கையாக 527 பாடநெறிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக 15 பாடநெறிகள் மற்றும் 450 அதிகாரிகளை இணைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய தேர்ச்சித் தர மற்றும் பாடவிதான அபிவிருத்தியின் அளவுசார் விருத்தியை 2016 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ள முடிந்ததோடு NVQ 1 முதல் 4 ஆம் மட்டம் வரை 14 தேர்ச்சித் தரங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதோடு டிப்ளோமா மட்டத்தில் 4 தேர்ச்சித் தரங்கள் உருவாக்கப்பட்டது. மேலும் தேர்ச்சித் தரங்கள் 1-4 மட்டங்களின் தேர்ச்சித் தரங்கள் 16 ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட தேர்ச்சித் தரம் 5 இன் பாடவிதானமானது புதுப்பிக்கப்பட்டுள்ளதோடு சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கு தேர்ச்சித் தரங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் கணிப்பீட்டாளர்களின் தேசிய அணியொன்று பராமரிக்கப்படுவதனூடாக NVQ ஐ மதிப்பீடு செய்வதற்கான வழிவகைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கணிப்பீட்டாளர்களை பதிவு செய்தல், பயிற்சி மற்றும் கணிப்பீட்டிற்காக நியமித்தல் தராதர உத்தரவாதம், கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவின் மூலம் TVET துறையின் கைத்தொழில் பிணைப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் கீழ் திறன் துறை மன்றங்களை (Sector Skills Councils) உருவாக்கல் இலங்கை தொழிற்பயிற்சியின் பண்புசார் மேம்படுத்தலுக்கு மேற்கொள்ளப்பட்ட பாரியதொரு நடவடிக்கையாகும். 2016 ஆம் ஆண்டில் கட்டுமானத்துறை, தகவல் தொழினுட்பவியல், உற்பத்தி, பொறியியல் மற்றும் சுற்றுலா கைத்தொழில் போன்ற துறைகளுக்கு திறன் துறை மன்றங்களை (Sector Skills Councils) உருவாக்குவதற்கு வழிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனூடாக தேர்ச்சித் தரங்களை உருவாக்கல், பாடநெறி அபிவிருத்தி, பயிற்சியாளர்களுக்கான கைத்தொழில் பயிற்சிகளை வழங்குதல், தொழில் வாய்ப்புக்களை விருத்தி செய்தல் போன்ற முக்கிய பல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தகவல் முறைமைகள் பிரிவின் மூலம் TVET துறையின் செயற்பாடுகள், திட்டங்கள் மற்றும் தீர்மானமெடுத்தலுக்கு தேவையான தகவல்கள் இலத்திரனியல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக நடாத்துவதற்காக 2016 ஆம் ஆண்டில் முதன்மையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் தொழிற் சந்தை தகவல் கையேட்டினை வெளியிடுதல் மிக முக்கியமான விடயமாகும். அதன் மூலம் தொழிற் சந்தையில் நிலவும் கேள்வி, விநியோகம், வேலைவாய்ப்பு, வேலையின்மை மற்றும் ஆராய்ச்சி என்பனவற்றிற்கு கவனம் செலுத்தப்பட்டு தேவையான தகவல்களை உள்ளடக்கி தொழிற் சந்தை தொர்பான 2 வெளியீடுகள் வெளியீடு செய்யப்பட்டன. மேலும் 2017ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள 3000 பாடநெறிகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய TVET வழிகாட்டி 2017 என்ற கையேடு வெளியிடப்பட்டது. தகவல் முறைமை பிரிவின்

மூலம் Online Registration முறை மூலம் பதிவுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு அலுவலக வேலைகளை புரிவதற்கு தேவையான மென்பொருட்கள் (Software) மேம்படுத்தப்பட்டன. தகவல்களையும் வெளியீடுகளையும் விநியோகிப்பதற்காக வாசிகசாலை தகவல் முறைமை பிரிவின் கீழ் செயற்படுவதோடு அதன் மூலம் பல வாசிகசாலை சேவைகள் வழங்கப்படுகின்றன.

2016ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் சர்வதேச மற்றும் தெற்காசிய கூட்டுறவினை மேம்படுத்துவதற்காக வேண்டி TVET-UNESCO-UNEVOC நிலையத்தின் மூலம் பல சிறப்பு செயற்திட்டங்கள் நடாத்தப்பட்டது. இதற்கமைவாக இலங்கையின் தொழில்நுட்ப தொழிற்கல்வி பயிற்சி முறைமையினை கற்பதற்கு பாகிஸ்தான் மற்றும் நேபாளத்திலிருந்து இரு குழுக்கள் வருகை தந்தன. மேலும் 2016ஆம் ஆண்டில் UNESCO-UNEVOC இன் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகளுக்காக ஜேர்மன், அவுஸ்திரேலியா, ஈரான், தென் கொரியா போன்ற நாடுகளுக்கு அலுவலக ஊழியர்களை அனுப்ப முடிந்தது.

2016ஆம் ஆண்டில் ஆங்கில மொழி, மென் திறன்கள், வாழ்க்கைத்தொழில், தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையினை அறிமுகப்படுத்துவதற்கு பாரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் www.buildingcareerskills.gov.lk இணையத்தள நிர்மாணம், தொழிற் திறன்கள் (Career Skills) தொடர்பான 3 வெளியீடுகள் வெளியிடப்படல், ஆங்கில மொழியினை கற்றல் மற்றும் கற்பித்தலுக்காக உள்நாட்டு, வெளிநாட்டு வெளியீடுகளை அறிமுகப்படுத்தல் மற்றும் விநியோகித்தல், பாடசாலையிலிருந்து இடைவிலகும் மாணவர்களுக்கு 3 மாத கால பாடநெறிகளை அறிமுகப்படுத்தல், தர முகாமைத்துவத்திற்கான ஒரு வெளியீட்டினை அறிமுகப்படுத்தல் மற்றும் NVQ 5 ஆம் மட்டத்திலான ஆங்கில பாடநெறியினை அறிமுகப்படுத்தல் போன்றன முக்கியமானவையாகும்.



மல்காந்தி ஜெயவர்தனா
பணிப்பாளர் நாயகம்

## 1.0 அறிமுகம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்விச் (திருத்தம்) சட்டத்தின் கீழ் ஓர் நியதிச்சட்ட அமைப்பாக 1999 ஆம் ஆண்டு திசெம்பர் 16 ஆம் திகதி தொடக்கம் தொழிற்படுகின்றது.

எமது ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு:

(அ) பொருளாதாரத்தின் மனிதவளத் தேவைகளுக்கு இசைவாக சகல மட்டங்களிலும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை முறைமையை திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்

(ஆ) சான்றிதழ் அடங்கலாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி விருதுகளை வழங்குவதற்காவும் மற்றும் ஏனைய கல்விசார் தகைமைகளை அளிப்பதற்காவும் தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும்

(இ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை வழங்கும் நிறுவகங்கள், முகவர் நிறுவகங்கள் மற்றும் ஏனைய சகல ஸ்தாபனங்களினதும் கல்வி மற்றும் பயிற்சி தராதரங்களைப் பேணல்.

## 2.0 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அமைப்புக்கட்டமைப்பு

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கும் இவ்வாணைக்குழு 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நியமிக்கப்பட்ட தலைவர் ஒருவரையும் உறுப்பினர்கள் 17 பேரையும் கொண்டுள்ளது. தற்போது தலைவர் ஒருவரையும் 14 உறுப்பினர்களை உள்ளடக்கி உள்ளதோடு 3 உறுப்பினர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2016ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் கட்டமைப்பு

சட்டமூலத்தின் சரத்து 6 (1) (ஊ) இற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் (2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆந் திகதி வரை)

1) பேராசிரியர் ரஜீவ் விஜேசிங்க அவர்கள் - தலைவர்
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2) கமல் பீ சிரிவர்தன அவர்கள் - உறுப்பினர்
கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி

3) ஆர்.ஏ.டீ.ஆர்.மாலனி பீரிஸ் அவர்கள் - உறுப்பினர்
கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி

4) கலாநிதி அதி வணக்கத்திற்குரிய கிரிந்தை அஸ்ஸபி தேரர் - உறுப்பினர்
கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி

5) நிர்மலீ வீ ஹெட்டிஆரச்சி அவர்கள் - உறுப்பினர்
கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி

6) புத்திக ருவன் மடிஹஹேவா அவர்கள் - உறுப்பினர்
கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி

7) டீ. மஹிந்த கம்மன்பில அவர்கள் - உறுப்பினர்
கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
(2015.12.23 முதல் 2016.10.05 வரை)

8) மதிப்பிற்குரிய அந்தனி கியுமர் பின்டோ அருட்தந்தை - உறுப்பினர்
கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி

9) வடிவேல் புத்திரசிகாமனி அவர்கள் - உறுப்பினர்
கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
(2016.01.16 முதல்)

10) ஜே தேவபிரான் அவர்கள் - உறுப்பினர்
கௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
(2016.12.07 முதல்)

**சட்டமூலத்தின் 6 (1) (அ) தொடக்கம் (உ) வரையான சரத்துகளிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்**

அ) மல்காந்தி ஜெயவர்த்தனா அவர்கள் - உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம்

ஆ) ஜே.ஏ.பீரிஸ் - உறுப்பினர்
தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
(2016.01.28 முதல் 2016.02.16 வரை)

கலாநிதி ஏ.யூ.சீ.அதுகோரால அவர்கள் - உறுப்பினர்
தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
(2016.05.11 முதல்)

இ) மேஜர் ஜெனரால் காமினி ஹெட்டிஆரச்சி அவர்கள் - உறுப்பினர்
தலைவர்
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

ஈ) ஜே.ஏ.ரன்ஜித் அவர்கள் - உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம்
தொழில்நுட்பக் கல்வி, பயிற்சி திணைக்களம்

உ) கலாநிதி ஹிலரி ஈ சில்வா அவர்கள் - உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம்
இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்

ஊ) ஜீ.டபிள்யூ.டி.பி.சேனாநாயக்கா அவர்கள் - உறுப்பினர்
நிதி அமைச்சு
திறைசேரி பிரதிநிதி
(2015.12.31 முதல் 2016.05.11)

டீ.எம்.ஏ.எம்.டீ.என்.என்.ஜே.அந்திராடி அவர்கள் - உறுப்பினர்
நிதி அமைச்சு
திறைசேரி பிரதிநிதி
(2016.07.04 முதல்)

## 3.0 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதவியணி

இவ்வாணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணிப்பாளர் நாயகம் கடமையாற்றுகிறார். அவரது உதவிக்காக பிரதி பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் அறுவர் (06) மற்றும் பிரதி பணிப்பாளர்கள் நால்வர் (04) அடங்கலாக 95 பேர்களைக் கொண்ட பதவியணியொன்றினூடாக ஆணைக்குழுவின் பணிகள் 2016 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டன. அதற்கமைய, இவ்வாணைக்குழுவின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எய்தும் நோக்கில் பின்வரும் பிரிவுகளின் கீழ் அதன் செயற்பாடுகள், இலக்குகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

- நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவு
- திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு
- பதிவு தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு
- தேசிய தேர்ச்சித் தரம், பாடவிதானம் மற்றும் தேசிய தொழிற்திறன் தகுதிகள் பிரிவு
- தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல்
- கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு
- தகவல் முறைமைகள் பிரிவு

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒதுக்கங்களுக்கமைய இவ்வாணைக்குழுவிற்காக 116 பேர் கொண்ட பதவியணி அனுமதிக்கப்பட்டிருப்பினும் 2016.12.31 அன்று இவ்வாணைக்குழுவில் 95 பேர் கொண்ட பதவியணியொனறு இருந்தது. பதவியணியினரின் விபரங்கள் வருமாறு:

அட்டவணை 3.1 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதவியணி விபரம் - 2016

| பதவியின் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | 31.12.2016 ஆம் தியதியன்று பணியிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 2 பிரதிப் பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 3 பணிப்பாளர் | 06 | 05 |
| 4 பணிப்பாளர் நிர்வாகம் | 01 | 01 |
| 5 தொழிற்சந்தை பகுப்பாய்வாளர் | 01 | 01 |
| 6 பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | 29 | 26 |
| 7 பிரதிப் பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு மற்றும் விசாரணை) | 01 | 01 |
| 8 உதவிப் பணிப்பாளர் (சட்டம்/ பணிப்பாளர் சபைச் செயலாளர்) | 01 | 01 |
| 9 பிரதிப் பணிப்பாளர் (நிதி) | 01 | 01 |
| 10 புள்ளிவிபரவியலாளர் | 01 | 01 |
| 11 பிரதி பணிப்பாளர் (தகவல் முறைமை) | 01 | 01 |
| 12 நிர்வாக அலுவலர் | 01 | - |

| பதவியின் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | 31.12.2016 ஆம் தியதியன்று பணியிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 13 செயற்திட்ட இணைப்பு அலுவலர் | 06 | 06 |
| 14 மொழிபெயர்ப்பாளர் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) | 01 | - |
| 15 அபிவிருத்தி அலுவலர் | 17 | 09 |
| 16 தகவல் தொழில்நுட்ப அலுவலர் | 01 | - |
| 17 தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 02 | 01 |
| 18 கணனி பிரயோக உதவியாளர் | 06 | 06 |
| 19 முகாமைத்துவ உதவியாளர் (தரம் I/ தரம் II/ தரம் III) | 17 | 14 |
| 20 சாரதி (தரம் I/ தரம் II/ தரம் III) | 14 | 13 |
| 21 அலுவலக உதவியாளர் | 07 | 06 |
| **மொத்தம்** | 116 | 95 |

## 4.0 நிர்வாகம் மற்றும் நிதி பிரிவு

ஆணைக்குழுவின் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் மற்றும் செயற்திறன் மிக்கதாகவும் மேற்கொள்வதற்கு அவசியமான மனிதவளங்கள் மற்றும் நிதிவளங்கள் ஆகியவற்றை முகாமை செய்தல் உள்ளடங்கலாக உள்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் செயற்பாடுகள் போன்றவற்றை நிறைவேற்றிவருகின்றது. மனிதவள முகாமைத்துவத்திற்கமைவாக பதவி வெற்றிடங்களை நிரப்பும் முகமாக 2016 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் இவ்வாணைக்குழுவில் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

2016ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் தொடர்பான விடயங்கள்

| பதவி | நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்ட திகதி | இணைக்கப்படும் எண்ணிக்கை |
|---|---|---|
| பணிப்பாளர் (தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல்) | 2016.05.04 | 01 |
| பணிப்பாளர் (கைத்தொழிற்துறை உறவுகள்) | 2016.10.05 | 01 |
| உதவிப் பணிப்பாளர் | 2016.08.02 | 09 |
| உதவிப் பணிப்பாளர் | 2016.08.30 | 06 |
| செயற்திட்ட இணைப்பு அலுவலர் | 2016.10.05 | 06 |
| முகாமைத்துவ உதவியாளர் | 2016.05.18 | 01 |

### 4.1 2016 ஆம் ஆண்டின் புதிய நியமனங்கள்

| பெயர் | பதவி | திகதி |
|---|---|---|
| டுபிள்யூ.ஏ.டபிள்யூ.சீ.பேமரத்ன | பணிப்பாளர் | 2016.06.10 |
| பி.கே.சுனில் அவர்கள் | பணிப்பாளர் | 2016.06.10 |
| சதுரி உபேக்'ா குணதுங்க அவர்கள் | உதவிப் பணிப்பாளர் | 2016.09.01 |
| வஜிர பண்டார விஜேசிங்க அவர்கள் | உதவிப் பணிப்பாளர் | 2016.10.03 |
| கே.டீ.ஹசன்தி லக்மினி அவர்கள் | உதவிப் பணிப்பாளர் | 2016.09.02 |
| நிலூகா ராஜபக்' அவர்கள் | உதவிப் பணிப்பாளர் | 2016.09.01 |
| டுபிள்யூ.பி.சமன் குமார அவர்கள் | உதவிப் பணிப்பாளர் | 2016.10.03 |
| பீ.எஸ்.மல்லிகாரச்சி அவர்கள் | உதவிப் பணிப்பாளர் | 2016.11.01 |
| எஸ்.என்.பீ.டுபிள்யூ.என்.மன்திரிபால அவர்கள் | உதவிப் பணிப்பாளர் | 2016.11.01 |
| டீ.என்.ஐ.டீ.தி சில்வா அவர்கள் | உதவிப் பணிப்பாளர் | 2016.09.01 |
| பீ.சீ.ஹதபான்கொட அவர்கள் | உதவிப் பணிப்பாளர் | 2016.09.01 |
| ஐ.பி.கல்ப உதார அவர்கள் | உதவிப் பணிப்பாளர் | 2016.09.01 |
| பீ.எஸ்.ஜே.விபுல்ஸி அவர்கள் | உதவிப் பணிப்பாளர் | 2016.09.01 |
| எச்.பீ.இன்திக சம்பத் அவர்கள் | செயற்திட்ட இணைப்பு அலுவலர் | 2016.10.06 |
| என்.டபிள்யூ.நதீக ஜீவன்த அவர்கள் | செயற்திட்ட இணைப்பு அலுவலர் | 2016.10.06 |
| வை.பி.எஸ்.உதயகாந்தி அவர்கள் | செயற்திட்ட இணைப்பு அலுவலர் | 2016.10.06 |
| டீ.பீ.ஆர்.மஞ்சுலா அவர்கள் | செயற்திட்ட இணைப்பு அலுவலர் | 2016.10.06 |
| பி.ஜே.உடவத்த அவர்கள் | செயற்திட்ட இணைப்பு அலுவலர் | 2016.10.06 |
| பிரஸங்க முதுகுமாரன அவர்கள் | செயற்திட்ட இணைப்பு அலுவலர் | 2016.10.06 |
| எஸ்.எஸ்.கல்பகே அவர்கள் | முகாமைத்துவ உதவியாளர் | 2016.06.10 |

### 4.2 2016 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் பதவிகளிலிருந்து இராஜினாமா செய்தவர்கள்

| பெயர் | பதவி | திகதி |
|---|---|---|
| டீ.டீ.ராஜவசம் அவர்கள் | அபிவிருத்தி அலுவலர் | 2016.08.25 |
| லிலான் சன்திம அவர்கள் | அபிவிருத்தி அலுவலர் | 2016.09.01 |
| என்.ஏ.சமிந்த குமார அவர்கள் | சாரதி | 2016.11.30 |

### 4.3 2016ஆம் ஆண்டில் ஆணைக்குழுவிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்

| பெயர் | பதவி | திகதி |
|---|---|---|
| டீ.என்.நிமல் குணசிரி அவர்கள் | அலுவலக உதவியாளர் | 2016.12.29 |

**4.4 2016 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட தற்காலிக/பதில் கடமை புரிதல் தொடர்பான பதவிகளுக்காக ஆணைக்குழு அலுவலகத்தில் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம்**

| பெயர் | பதவி | திகதி |
|---|---|---|
| திரு. சுமிந்த அருணகீர்த்தி அவர்கள் | நிர்வாக அலுவலர் பதில் கடமை புரிதல் | 2016.09.01 |
| டபிள்யூ.ஜே.எல்.ஏ.தமயன்தி அவர்கள் | தொழிற்சந்தை பகுப்பாய்வாளர் பதில் கடமை புரிதல் | 2016.09.09 |

தகவல் முறைமைகள் பிரிவில் கடமையாற்றும் பணிப்பாளர் அவர்கள் கலாநிதி பட்டப்பின் படிப்பினை மேற்கொள்வதற்கு வெளிநாடு சென்றுள்ளமையினால் அப்பதவிக்கு தற்காலிகமாக புள்ளிவிபரவியலாளர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிர்வாக அலுவலராக கடமைபுரிந்த உத்தியோகத்தர் உதவிப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி

ஆணைக்குழுவில் கடமையாற்றும் அலுவலர்களின் விடயம் தொடர்பான அறிவினை அதிகரிக்கும் நோக்கில் அலுவலர்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள்/ மாநாடுகள் என்பவற்றுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. அதற்கிணங்க 2016 ஆம் ஆணடு ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு பயிற்சிகள் மாநாடுகளில் பங்குபற்றிய அலுவலர்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**4.5 வெளிநாட்டு மாநாடுகளில் பங்குபற்றல்**

2016 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு கிடைத்த அழைப்புக்களின் பிரகாரம் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கீழே தரப்பட்டுள்ள சர்வதேச மாநாடுகளில் பங்குபற்றியுள்ளனர்.

| பெயர் | பிரிவு | பதவி | பயிற்சியின் தலைப்பு | நாடு | காலப் பகுதி |
|---|---|---|---|---|---|
| திருமதி மல்காந்தி ஜயவர்தன அவர்கள் | பணிப்பாளர் நாயகம் | பணிப்பாளர் நாயகம் | International Return on investment in TVET | Australia | 09/04/2016 to 13/04/2016 |
| | | | An International TVET fourm on the occasion of World skills day | Jerman | 2016/07/13 - 2016/07/16 |

அட்டவணை 4.1 - உள்நாட்டு பயிற்சி வேலைத்திட்டம்

| பெயர் | பிரிவு | பதவி | பயிற்சியின் தலைப்பு | நிறுவனம் | காலப் பகுதி |
|---|---|---|---|---|---|
| திரு.டுபிள்யூ. பி.எம். பி.பிரேமசந்திர அவர்கள் | நிர்வாகப் பிரிவு | பணிப்பாளர் (நிர்வாகம்) | Visioning Sri Lanka -2030 Now | UNDP | 2 Days |
| திரு. வஜிர பெரேரா அவர்கள் | பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு | பணிப்பாளர் (பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு) | Certified HR Auditor | IPM | 5 Days |
| | | | Postgraduate Diploma in diplomancy & word affairs | BIDTI | |
| திரு.ஆர்.ஜே. சமரவீர அவர்கள் | உள்ளகக் கணக்காய்வு மற்றும் விசாரணை பிரிவு | பிரதிப் பணிப்பாளர் | "HR - for Non HR" - Awareness Pro-gram | Human Resource Advanc-ment | One Day |
| திரு. மஞ்சுள விதானபத்-திரண அவர்கள் | கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு | பிரதிப் பணிப்பாளர் (பதில் கடமையாற்றல்) | Transition of ISO 9001:2008 to 9001:2015 | SLSI | 2 Days |
| திரு.டி.செந்தூரன் அவர்கள் | பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு | பிரதிப் பணிப்பாளர் (பதில் கடமையாற்றல்) | Transition of ISO 9001:2008 to 9001:2015 | SLSI | 2 Days |
| திரு.பி.ஏ.எம். யூ.கனேபொல | திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | பிரதிப் பணிப்பாளர் (பதில் கடமையாற்றல்) | "HR - for Non HR" - Aware-ness Program | Human Resource Advanc-ment | One Day |
| திருமதி.பி.பி. நானாயக்கார அவர்கள் | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு | பிரதிப் பணிப்பாளர் (பதில் கடமையாற்றல்) | Transition of ISO 9001:2008 to 9001:2015 | SLSI | 2 Days |
| | | | Visioning Sri Lanka 2030 Now | UNDP | 2 Days |
| பி.எம்.சீ.பி. குணதிலக அவர்கள் | தகவல் முறைமைகள் பிரிவு | பிரதிப் பணிப்பாளர் (பதில் கடமையாற்றல்) | "HR - for Non HR" - Aware-ness Program | Human Resource Advanc-ment | One Day |

| பெயர் | பிரிவு | பதவி | பயிற்சியின் தலைப்பு | நிறுவனம் | காலப் பகுதி |
|---|---|---|---|---|---|
| எச்.பி.கே. என்.பண்டார அவர்கள் | திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | உதவிப் பணிப்பாளர் | "HR - for Non HR" - Awareness Program | Human Resource Advanc-ment | One Day |
| | | | "HR - for Non HR" - Awareness Program | Human Resource Advanc-ment | One Day |
| | | | project Concept & project Cycle | NILS | 01 Day |
| | | | Addressing Social Equity Gender Equality concerns in the Skills Sector Enhancement Program | SSDP | 2 Days |
| திரு.ஆர்.மதன் அவர்கள் | கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு | உதவிப் பணிப்பாளர் | Human Resourse Management | IPM | |
| | | | The HR Role in Improvin Public Sector Delivery Programme | NHRDC | One Day |
| கே.டீ.எல். பி.கருணாதாச அவர்கள் | தகவல் முறைமைகள் பிரிவு | உதவிப் பணிப்பாளர் | MIT (E Learning Programme | Colombo university | 2 Years |
| ஐ.பி. கே.உதார அவர்கள் | பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு | உதவிப் பணிப்பாளர் | Lead Auditor (ISO 9001:2015) | SLSI | 5 Days |
| | | | The HR Role in Improvin Public Sector Delivery Programme | NHRDC | One Day |
| பிரசங்க முதுகுமாரண அவர்கள் | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு | அபிவிருத்தி அலுவலர் | project Concept & project Cycle | NILS | 01 Day |

| பெயர் | பிரிவு | பதவி | பயிற்சியின் தலைப்பு | நிறுவனம் | காலப் பகுதி |
|---|---|---|---|---|---|
| பி.ஜே. உடவத்த அவர்கள் | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு | அபிவிருத்தி அலுவலர் | Internal & External Customer Care | NILS | 2016 /08/ 02,03 |
| டி.ஏ.டபிள்யூ. மதுசானி அவர்கள் | திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | அபிவிருத்தி அலுவலர் | Project Concept & Project Cycle | NILS | 01 Day |
| எஸ்.என்.வேர-கல அவர்கள் | தேசிய தேர்ச்சித் தரம், பாடவிதானம் மற்றும் தேசிய தொழிற்திறன் தகுதிகள் பிரிவு | அபிவிருத்தி அலுவலர் | Office Management for Higher labour Productivity | NILS | 3 Days |
| ஏ.எச்.என். சதமாலி அவர்கள் | கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு | அபிவிருத்தி அலுவலர் | Internal & External Customer Care | NILS | 2016 /08/ 02,03 |
| கே.எச்.ஏ.ஈ. தீப்தி அவர்கள் | உள்ளகக் கணக்காய்வு மற்றும் விசாரணை பிரிவு | அபிவிருத்தி அலுவலர் | Internal & External Customer Care | NILS | 2016 /08/ 02,03 |
| | | | Office Management for Higher labour Productivity | NILS | 3 Days |
| | | | "HR - for Non HR" - Awareness Program | Human Resource Advanc-ment | One Day |
| செல்வி எல். கே.கொ ஹொம்பன் அவர்கள் | தேசிய தேர்ச்சித் தரம், பாடவிதானம் மற்றும் தேசிய தொழிற்திறன் தகுதிகள் பிரிவு | அபிவிருத்தி அலுவலர் | Office Management for Higher labour Productivity | NILS | 3 Days |
| என்.எச்.எஸ். தர்சன அவர்கள் | பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு | அபிவிருத்தி அலுவலர் | Lead Auditor (ISO 9001:2015) | SLSI | 5 Days |

| பெயர் | பிரிவு | பதவி | பயிற்சியின் தலைப்பு | நிறுவனம் | காலப் பகுதி |
|---|---|---|---|---|---|
| செல்வி. எச்.ஏ.டீ.தர்‘னிகா | நிதிப் பிரிவு | அபிவிருத்தி அலுவலர் | Office Management for Higher labour Productivity | NILS | 3 Days |
| | | | "HR - for Non HR" - Awareness Program | Human Resource Advanc- ment | One Day |
| சுமிந்த அருணகீர்த்தி அவர்கள் | நிர்வாகப் பிரிவு | முகாமைத்துவ உதவியாளர் | "HR - for Non HR" - Awareness Program | Human Resource Advanc- ment | One Day |
| டீ.பீ.ருவினி மஞ்சுலா அவர்கள் | தேசிய தேர்ச்சித் தரம், பாடவிதானம் மற்றும் தேசிய தொழிற்திறன் தகுதிகள் பிரிவு | முகாமைத்துவ உதவியாளர் | IHR -Dgree | Univer- sity of Colombo | for 2016 year |
| எச்.பீ.இந்திக சம்பத் அவர்கள் | நிர்வாகப் பிரிவு | செயற்திட்ட இணைப்பு அலுவலர் | Msc in Service Management | Univer- sity of colombo | 2 Years |
| என்.டபிள்யூ. பி.நதீக ஜீவன்த அவர்கள் | தேசிய தேர்ச்சித் தரம், பாடவிதானம் மற்றும் தேசிய தொழிற்திறன் தகுதிகள் பிரிவு | செயற்திட்ட இணைப்பு அலுவலர் | Executive Di- ploma in Service Management | Univer- sity of colombo | 1 Year |
| | | | "HR - for Non HR" - Aware- ness Program | Human Resource Advanc- ment | One Day |
| நிசன்சலா தில்ருக்சி விஜேசேகர அவர்கள் | நிர்வாகப் பிரிவு | முகாமைத்துவ உதவியாளர் | Office Manage- ment for Higher labour Produc- tivity | NILS | 3 Days |
| செல்விஎஸ். சதுரங்கனி | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு | முகாமைத்துவ உதவியாளர் | Office Manage- ment for Higher labour Produc- tivity | NILS | 3 Days |
| சீ.எச்.விமுக்தி தர்‘னிகா அவர்கள் | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு | முகாமைத்துவ உதவியாளர் | Office Manage- ment for Higher labour Produc- tivity | NILS | 3 Days |
| ஆர். பி.ஏ.டி.குமார அவர்கள் | நிதிப் பிரிவு | முகாமைத்துவ உதவியாளர் | IHR - Dgree Registration Fee | Unversity of Co- lombo | for 2016 year |

| பெயர் | பிரிவு | பதவி | பயிற்சியின் தலைப்பு | நிறுவனம் | காலப் பகுதி |
|---|---|---|---|---|---|
| செல்வி விந்தியா ஹன்சனி | நிதிப் பிரிவு | முகாமைத்துவ உதவியாளர் | Office Management for Higher labour Productivity | NILS | 3 Days |
| எஸ்.எஸ். கல்பகே அவர்கள் | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு | முகாமைத்துவ உதவியாளர் | IHR Registraion fee | University of colombo | for 2016 Year |
| பி.சீ.ஜனகந்த சில்வா அவர்கள் | உள்ளகக் கணக்காய்வு மற்றும் விசாரணை பிரிவு | முகாமைத்துவ உதவியாளர் | Office Management for Higher labour Productivity | NILS | 3 Days |
| செல்வி பீ.எல். கே.சந்தீபனீ | நிதிப் பிரிவு | முகாமைத்துவ உதவியாளர் | Office Management for Higher labour Productivity | NILS | 3 Days |
| எஸ்.பீ.கருணாநாயக்கா அவர்கள் | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு | கணனி பிரயோக உதவியாளர் | Internal & External Customer Care | NILS | 2016 /08/ 02,03 |
| செல்வி எச். எம்.வீ.எம். ஹேரத் | நிர்வாகப் பிரிவு | கணனி பிரயோக உதவியாளர் | Office Management for Higher labour Productivity | NILS | 3 Days |
| நி'ாந்த கமல்பிரிய அவர்கள் | நிர்வாகப் பிரிவு | சாரதி | Vocational Development of OES & Driver | NILS | 1 Day |
| கே.சிறிசேனா அவர்கள் | நிர்வாகப் பிரிவு | சாரதி | Vocational Development of OES & Driver | NILS | 1 Day |
| பீ.கே.சிறியந்த தினே' அவர்கள் | நிர்வாகப் பிரிவு | சாரதி | Vocational Development of OES & Driver | NILS | 1 Day |
| எஸ். விஜேசேகர அவர்கள் | நிர்வாகப் பிரிவு | சாரதி | Vocational Development of OES & Driver | NILS | 1 Day |
| டீ.கே.வீ.சத்தா மங்கல அவர்கள் | நிர்வாகப் பிரிவு | சாரதி | Vocational Development of OES & Driver | NILS | 1 Day |

| பெயர் | பிரிவு | பதவி | பயிற்சியின் தலைப்பு | நிறுவனம் | காலப் பகுதி |
|---|---|---|---|---|---|
| பீ.பந்துல அவர்கள் | நிர்வாகப் பிரிவு | சாரதி | Vocational Development of OES & Driver | NILS | 1 Day |
| கமல் சம்பத் குமார அவர்கள் | நிர்வாகப் பிரிவு | சாரதி | Vocational Development of OES & Driver | NILS | 1 Day |

வெளிநாட்டு பயிற்சி

| பெயர் | பிரிவு | பதவி | பயிற்சியின் தலைப்பு | நாடு | காலப் பகுதி |
|---|---|---|---|---|---|
| எஸ்.யூ.கே. ரூபசிங்க அவர்கள் | தேசிய தேர்ச்சித் தரம், பாடவிதானம் மற்றும் தேசிய தொழிற்திறன் தகுதிகள் பிரிவு | பணிப்பாளர் | 2016 Training Program on Vocational Education for officials from South Asia | China | 2016/05/15 to 2016/05/26 |
| எம்.எல்.என்.எஸ். எதிரிசூரிய அவர்கள் | தகவல் முறைமைகள் பிரிவு | பணிப்பாளர் (பதில் கடமையாற்றுதல்) | UNEVOC Regional Meeting in Tehran | Iran | 2016/05/22 to 2016/05/25 |
| செல்வி.பி.ஜே. யூ.உடவத்த | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு | அபிவிருத்தி அலுவலர் | Study Tour | China | 2016/05/11 to 2016/05/17 |
| வை.பி.எஸ். உதயகாந்தி அவர்கள் | தகவல் முறைமைகள் பிரிவு | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | Study Tour | China | 2016/05/10 to 2016/05/18 |
| டபிள்யூ.ஏ.ட பிள்யூ. சீ. பேமரத்ன அவர்கள் | தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு | பணிப்பாளர் | Seminar | Pillipine | 2016/07/23 - 2016/08/01 |

| பெயர் | பிரிவு | பதவி | பயிற்சியின் தலைப்பு | நாடு | காலப் பகுதி |
|---|---|---|---|---|---|
| வஜிர பெரேரா அவர்கள் | பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு | பணிப்பாளர் | Seminar | China | 2016/09/21-09/29 |
| திரு.பி.ஏ.எம். யூ.கனேபொல | திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | பிரதிப் பணிப்பாளர் (பதில் கடமையா ற்றுதல்) | Seminar | Australia | 2016/09/30 - 2016/10/23 |
| திரு.மஞ்சுல விதானபதிரன அவர்கள் | கைத்தொழிற்து-றை உறவுகள் பிரிவு | பிரதிப் பணிப்பாளர் (பதில் கடமையா ற்றுதல்) | Seminar | Australia | 2016/09/30 - 2016/10/23 |
| திரு.ஜே.ஏ.டீ.ஜே. ஜயலத் அவர்கள் | தகவல் முறைமைகள் பிரிவு | பணிப்பாளர் | International TVET Conference | Pakistan | 2016/10/02 - 2016/10/05 |
| திரு.பி.எம். சீ.பி.குணதிலக அவர்கள் | தகவல் முறைமைகள் பிரிவு | பிரதிப் பணிப்பாளர் (பதில் கடமையா ற்றுதல்) | TVET Leadership Programme | German | 2016/10/17 - 28 |
| திரு.பி.கே.சுனில் அவர்கள் | கைத்தொழிற்து-றை உறவுகள் பிரிவு | பணிப்பாளர் | Seminar | South Korea | 2016/10/23 - 28 |

**மேலதிக கல்வி நடவடிக்கைகளை வெளிநாடுகளில் தொடருதல்**

கீழே தரப்பட்டுள்ள அலுவலர்கள் இருவர் மேலதிக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக திறன்கள் அபிவிருத்தி திட்டத்திலிருந்து நிதியுதவியினை பெற்று சம்பளத்துடன் கூடிய விடுமுறையினை பெற்று வெளிநாடுகளில் படிப்பினை மேற்கொண்டுவருகின்றனர்.

1. அஜித் பொல்வத்த அவர்கள் (கலாநிதி பட்டப்பின் படிப்புக்காக சீனாவிற்கு சென்றுள்ளார்)
2. ஜே. ஏ. டீ. ஜே. ஜயலத் அவர்கள் (கலாநிதி பட்டப்பின் படிப்பினை மேற்கொள்வதற்காக தாய்லாந்து நாட்டிற்கு சென்றுள்ளார்)

மேலும், திருமதி M.L.N.S. எதிரிசூரிய அவர்கள் கலாநிதி பட்டப்பின் படிப்பினை மேற்கொள்வதற்காக அமெரிக்காவின் Southern Mississippi பல்கலைக்கழகத்திற்கு மூன்று வருடங்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறையினை பெற்று சென்றுள்ளார்.

1. திருமதி எம்.எல்.என்.எஸ்.எதிரிசூரிய (கலாநிதி பட்டப்பின் படிப்பினை மேற்கொள்வதற்காக அமெரிக்கா நாட்டிற்கு சென்றுள்ளார்)

### 4.7 வருடாந்த அங்கத்துவக் கட்டணத்தை மீளச் செலுத்தல்

இவ்வாணைக்குழுவில் பணியாற்றும் கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர்களினால் தொழில்சார் நிறுவகங்களுக்கு செலுத்தப்பட்ட வருடாந்த அங்கத்துவக்கட்டணமானது இவ்வாணைக்குழுவால் மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

1. திரு.டபில்யூ.பி.எம்.பி.பிரேமசந்திர அவர்கள்
   பணிப்பாளர் (நிர்வாகம்)
   இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம்,சான்றளிக்கப்பட்ட வியாபார கணக்காளர் அங்கத்துவ கட்டணம்

2. திரு.எஸ்.யூ.கே.ரூபசிங்க அவர்கள்
   பணிப்பாளர் (தேசிய தேர்ச்சித் தரம், பாடவிதானம் மற்றும் தேசிய தொழிற்திறன் தகுதிகள் பிரிவு)
   இலங்கை பட்டய பொறியிலாளர் நிறுவகம்

3. திரு.ஜே.ஏ.டீ.ஜே.ஜயலத் அவர்கள்
   பணிப்பாளர் (தகவல் முறைமைகள் பிரிவு)
   பட்டய கணனி நிறுவகம் பிரித்தானியா

4. திருமதி எம்.எல்.என்.எஸ்.எதிரிசூரிய அவர்கள்
   தொழிற் சந்தைப் பகுப்பாய்வாளர்
   இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம் சான்றளிக்கப்பட்ட வியாபார கணக்காளர் அங்கத்துவ கட்டணம்

5. திருமதி.ஏ.ஏ.அமரசிங்க அவர்கள்
   பிரதிப் பணிப்பாளர் (நிதிப் பிரிவு)
   இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம் சான்றளிக்கப்பட்ட வியாபார கணக்காளர் அங்கத்துவ கட்டணம்

6. திரு.ஆர்.ஜே.சமரவீர அவர்கள்
   பிரதிப் பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு மற்றும் விசாரணை பிரிவு)
   இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம் சான்றளிக்கப்பட்ட வியாபார கணக்காளர் அங்கத்துவ கட்டணம்

### 4.6 நிதி வளர்ச்சி

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு அவசியமான நிதி ஏற்பாடுகள் திறைசேரியினூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டின் செலவினங்களுக்காக இவ்வாணைக்குழுவினால் உத்தேசிக்கப்பட்ட தொகைகள் வருமாறு:

மீண்டுவரும் செலவினம் ரூபா 120 மில்லியன்கள் ஆகும்.
மூலதன செலவினம் ரூபா 14.350 மில்லியன்கள் ஆகும்.

இவ் ஒதுக்கங்களில் 2016 ஆம் ஆண்டிற்காக திறைசேரியினால் மீண்டுவரும் செலவினத்திற்காக ரூபா 104 மில்லியன் நிதித்தொகையும், மூலதனச் செலவினத்திற்காக ரூபா 11.788 மில்லியன் நிதித்தொகையும் விடுவிக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டின் உத்தேசிக்கப்பட்ட செலவின தொகையை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீண்டுவரும் செலவில் 27% அதிகரிப்பு காணப்பட்டதுடன், மூலதன செலவின மதிப்பீட்டில் 43.5மூ அதிகரிப்பு காணப்பட்டது.

2016 ஆம் ஆண்டிற்காக பொது திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட நிதித்தொகையானது முன்னைய வருடத்துடன் பின்வருமாறு ஒப்பீடு செய்யப்படுகின்றது.

மீண்டுவரும் செலவினத்தினை ஒப்பிடுகையில் 26.5% அதிகரிப்பு காணப்பட்டதுடன், மூலதனச் செலவினத்தினை ஒப்பிடுகையில் 78% குறைவும் காணப்பட்டது. இவ்வாணைக்குழு 2016 ஆம் ஆண்டிற்கான உத்தேசத் தொகையைத் தயாரிக்கும் போது, ரூபா 10 மில்லியன் நிதித்தொகையானது வருவாயாக எதிர்பார்க்கப்பட்ட அதேவேளை உண்மையான வருமானம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | உத்தேச வருமானம் (ரூபா) | உண்மையான வருமானம் (ரூபா) |
|---|---|---|
| தொழிற் பயிற்சித் துறை வெளியீடு விற்பனை | 2830000.00 | 4071850.00 |
| பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்வதற்காக அறவிடப்படும் கட்டணம் | 1800000.00 | 1901300.00 |
| நிறுவகளை தராதர அங்கீகாரம் செய்வதற்காக அறவிடப்படும் கட்டணம் | 1700000.00 | 1881900.00 |
| தேசிய தொழிற் திறன் தகுதிச் சான்றிதழ்கள் வெளியிடல், கணக்காய்வுக் கட்டணம், கணிப்பீடு மற்றும் பரீட்சை கட்டணங்கள் | 3595000.00 | 5632165.00 |
| கணிப்பீட்டாளர்களிடமிருந்து கட்டணம் அறவிடல் | 75000.00 | 56500.00 |
| **மொத்தம்** | **10000000.00** | **13543715.00** |

### 4.7 உள்ளகக் கணக்காய்வு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்குரிய உள்ளகக் கணக்காய்வு மற்றும் பணி ஆய்வு ஆகிய அலுவல்கள் இவ்வாணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. முன்னைய வருடங்களில் இதன்

உள்ளக நிர்வாக முறைகள் போதுமானதாக காணப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் வருடங்களில் இவ்வாணைக்குழுவின் கணக்காய்வு அலுவல்கள் சுற்றறிக்கைகள், ஆணைக்குழுச் சட்டம் மற்றும் ஏனைய உரிய சட்ட திட்டங்கள் என்பவற்றுக்கு அமைவாக முன்நோக்கிக் கொண்டு செல்லப்படும். கணக்காய்வு அலுவல்கள் மற்றும் புதிய கொள்கைகளை பிரேரணை செய்தல் அல்லது கொள்கைகளை மாற்றம் செய்தல் என்பவை இவ்வாணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மூலம் நிறைவேற்றப்படுவதுடன், இவ்வாணைக்குழு முறைமைகளிலுள்ள குறைபாடுகள் மற்றும் இழப்புக்களை மிகக் குறைந்த மட்டத்தில் பேணுவதற்கு தேவையான ஆலோசனைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்வதற்கு அவசியமான அலுவல்கள் சம்பந்தப்பட்ட வருடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 1. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2016ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது ஆறு சந்தர்ப்பங்களில் கூடியதோடு அச்சந்தர்ப்பங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் ஆணைக்குழுவுக்கு கீழுள்ள விடயங்கள் தொடர்பாக பின்வரும் சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டன.

i உள்ளக கணக்காய்வு திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

ii நிதி அறிக்கைகளின் சுருக்கம் மற்றும் அவை தொடர்பான முகாமைத்துவ முடிவுகள்

iii ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை தொடர்பாக முகாமைத்துவ முடிவுகள்

iv உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணைகளின் செயலாற்றுகை

v ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை தொடர்பான சுருக்கம் மற்றும் முகாமைத்துவ முடிவுகள்

vi கணக்காய்வாளர் அறிக்கையின் சுருக்கம்

vii Enterprises Resourse Plan (ERP) முறைமையினை ஆணைக்குழுவினுள் நாளதுவரையாக்கலின் முக்கியத்துவத்தினை அறிமுகப்படுத்தல்

viii ஏனைய பணித்திட்டங்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் சம்பந்தமான வெவ்வேறு முகாமைத்துவ முடிவுகள்

இதன்படிஇ கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது மேற்கூறப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பின்வருமாறு கட்டமைக்கப்பட்டிருந்தது. 2016 ஜனவரி மாதம் 01ஆந் திகதி தொடக்கம் 2016 டிசெம்பர் மாதம் 31ஆந் திகதி வரையான காலப்பகுதியில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பின்வரும் ஆணைக்குழு அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

i. 2016 ஜனவரி மாதம் 19இ 2016 பெப்ரவரி மாதம் 23 மற்றும் 2016 ஏப்ரல் மாதம் 29ஆந் திகதிக-ளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பின்வரும் ஆணைக்குழு அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

- ◊ திரு.ஜீ.டபிள்யூ.டீ.பீ.சேனாநாயக்கா - குழுத் தலைவர்
- ◊ கலாநிதி டபிள்யூ.ஹிலரி ஈ சில்வா - குழு அங்கத்தவர்
- ◊ திரு.புத்திக மடிஹஹேவா - குழு அங்கத்தவர்
- ◊ திருமதி.டி.பி.ஐ.பத்மினி - மேற்பார்வையாளர்

ii. 2016 ஜுன் மாதம் 19ஆந் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பின்வரும் ஆணைக்குழு அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

- ◊ கலாநிதி டபிள்யூ.ஹிலரி ஈ சில்வா - குழுத் தலைவர்
- ◊ திரு.புத்திக மடிஹஹேவா - குழு அங்கத்தவர்
- ◊ ஆர்.ஏ.டீ.ஆர்.மாலனி பீரிஸ் - குழு அங்கத்தவர்
- ◊ திருமதி.டி.பி.ஐ.பத்மினி - மேற்பார்வையாளர்

iii. 2016 ஒக்டோபர் மாதம் 03ஆந் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பின்வரும் ஆணைக்குழு அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

- ◊ டீ.எம்.ஏ.எம்.டீ.என்.என்.ஜே.ஏ.அந்திராதி - குழுத் தலைவர்
- ◊ கலாநிதி டபிள்யூ.ஹிலரி ஈ சில்வா - குழு அங்கத்தவர்
- ◊ ஆர்.எம்.டீ.எம்.குமாரி - குழு அங்கத்தவர்
- ◊ திருமதி.டி.பி.ஐ.பத்மினி - மேற்பார்வையாளர்

iv. 2016 டிசெம்பர் மாதம் 20ஆந் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பின்வரும் ஆணைக்குழு அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

- ◊ கலாநிதி டபிள்யூ.ஹிலரி ஈ சில்வா - குழுத் தலைவர்
- ◊ திரு.புத்திக மடிஹஹேவா - குழு அங்கத்தவர்
- ◊ ஆர்.ஏ.டீ.ஆர்.மாலனி பீரிஸ் - குழு அங்கத்தவர்
- ◊ ஆர்.எம்.டீ.எம்.குமாரி - குழு அங்கத்தவர்
- ◊ திருமதி.டி.பி.ஐ.பத்மினி - மேற்பார்வையாளர்

### 4.8 சட்டம் சார்ந்த அலுவல்கள்

### சட்ட மூலத்தை திருத்தம் செய்வதன் முன்னேற்றம்

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தில் 1990 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவகங்கள் பதி-வுகளை மேற்கொள்ளவதனை நெறிப்படுத்துவதற்கு அவசியமான வகையிலான சட்டரீதியான ஏற்பாடுகள் தொடர்பான சட்டமூலத்தினை சேர்த்துக்கொள்வதன் முக்கியத்துவமானது அடையாளம்

காணப்பட்ட பின்னர் உரிய சட்டமூலத்தினை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் சட்டவரைஞர் திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட வரைவானது கீழே உள்ள ஆணைக்குழு உறுப்பினர்கள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1) திருமதி ஆர்.ஏ.டீ.ஆர்.மாலனி பீரிஸ் - தலைவர்

2) கலாநிதி டபிள்யூ.ஹிலரி ஈ சில்வா - பணிப்பாளர் நாயகம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிலையம் - உறுப்பினர்

3) திரு டீ.மஹிந்த கம்மன்பில - உறுப்பினர்

இதற்கமைவாக இக்குழுவின் தலைமைப் பதவியை வகித்த திருமதி மாலனி பீரிஸ் அவர்களும் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஜீவ் விஜேசிங்க அவர்களும் அவ்வரைவில் உள்ள விடயங்கள் தொடர்பாக கௌரவ அமைச்சருடனும் அமைச்சின் செயலாளருடனும் கலந்துரையாடியுள்ளதோடு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ளது.

## பதிவு செய்யப்படாத மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவுசெய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

ஆணைக்குழுவில் பதிவினை மேற்கொள்ளாமல் பயிற்சிகளை நடாத்திவரும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவகங்களை பதிவுசெய்வதற்கு ஆணைக்குழுவானது சட்டரீதியான அனுமதியின் கீழ் மேற்கொள்ளும் பொருட்டு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. அதற்கிணங்க, பத்திரிகை வாயிலாக விளம்பரங்களை பிரசுரிப்பதன் மூலமும் பதிவினை மேற்கொள்ளாத பயிற்சி நிறுவகங்களிற்கு அறிவுறுத்தற் கடிதங்களை அனுப்பிவைப்பதன் மூலமும் அந்தந்த நிறுவகங்களிற்கு பதிவினை மேற்கொள்வதற்கான சூழ்நிலையினை ஏற்படுத்தியதுடன் இதுவரையில் 2016 ஆம் ஆண்டில் இவ்வாறான 28 கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக இதுவரையில் 20 நிறுவகங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

## நிதியுதவிகளை முறையாக பயன்படுத்தாத நிறுவகங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் பிரிவு 04 (ஊ) மற்றும் 04 (ஏ) சரத்துக்களின் கீழ் தனியார் பிரிவு / அரச சார்பற்ற துறை நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவிகளை சரியான முறையில் பயன்படுத்தாமை மற்றும் தராதர அங்கீகாரம் செய்யாமல் பாடநெறிகளை நடாத்திவரும் பயிற்சி நிறுவகங்களிடமிருந்து அந்நிதியுதவித் தொகையினை மீளப்பெறுவதற்கு உரிய சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. ASC தொழில்நுட்ப பயிற்சி நிலையம் - கிரிஉள்ள

2. புனித ஜோசப் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் - திருகோணமலை
3. சமாதி பிரஜைகள் அபிவிருத்தி நிறுவனம் - மாத்தறை
4. ஸ்ரீ சோபித தொழிற் பயிற்சி நிலையம் - பிபில
5. ஹ/ஸ்ரீ காவன்திஸ்ஸ தொழிற் பயிற்சி நிலையம் - திஸ்ஸமஹாராமை
6. சணச தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிலையம் - குளியாபிடிய

ASC தொழில்நுட்ப பயிற்சி நிலையம், புனித ஜோசப் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் என்பன பாடநெறிகளை தரப்படுத்துவதற்கு இணக்கம் தெரிவித்தன. சமாதி பிரஜைகள் அபிவிருத்தி நிறுவனம் மற்றும் ஸ்ரீ சோபித தொழிற் பயிற்சி நிலையம் என்பனவற்றினை இணக்க சபைகளுக்கு அழைத்ததோடு அவை வருகை தரவில்லை. அதனால் இணக்கத்தினை எட்டுவதற்கு முடியாமல் போனமையினால் அந்நிறுவகங்களுக்கு எதிராக வழக்குகளை தொடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் வழக்குகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## கண்காணிப்புக்களை நடாத்துதல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவானது இத்துறைசார் ஒழுங்குபடுத்தும் நிறுவகமாக பல்வேறு தொழிற்துறை பயிற்சி நிலையங்களில் இடம்பெறும் பிரச்சினைகள் பற்றிய முறைப்பாடுகளை சம்பந்தப்பட்ட நிறுவகம், பயிலுநர்கள் மற்றும் கணிப்பீட்டாளர்கள் ஆகியோர் முன்வைக்கமுடியும். இங்கு, ஆணைக்குழுவானது நடுநிலை வகிக்கின்ற ஓர் மத்தியஸ்தராக அப்பிரச்சினையினை தீர்ப்பதற்கு அவசியமான விசாரணையினை நடாத்துகின்றது. அதற்கிணங்க, 2016 ஆம் ஆண்டில் நான்கு (04) நிறுவகங்கள் தொடர்பாக விசாரணைகளை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஆணைக்குழு பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்துதல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் உதவி பணிப்பாளர் (நீதி) அவர்கள் ஆணைக்குழுவில் செயலாளராக செயற்பட்டுவருவதுடன் 2016 ஆம் ஆண்டிற்காக 13 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## 5.0 திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு

இவ்வாணைக்குழுவின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் பிரதான தொழிற்பாடானது 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தில் குறிப்பிடப்பட்ட முதலாவது குறிக்கோளானது "இலங்கையின் பொருளாதார மற்றும் மனிதவள அபிவிருத்தித் தேவைகளுக்கேற்ப மூன்றாம் நிலைக்கல்வி, வாழ்க்கைத்தொழிற் கல்வி திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்" போன்ற இலக்குகளை நிறைவேற்றுவதற்காக உயிர்பான பங்களிப்புகளை வழங்குவதாகும். திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு பின்வரும் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாகவுள்ளது.

◊ அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவி-களை விருதளித்தல் மற்றும் அந்நிறுவகங்களைக் கண்காணித்தல்

◊ தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்

◊ இலங்கையில் மாகாண சபைகளுக்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல்

◊ தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கைகளை தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்

◊ தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையில் ஆராய்ச்சிக் கற்கைகளை செயற்படுத்துதல்

◊ மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கூட்டு திட்டத்தினை நாளதுவரையாக்கல் மற்றும் அதற்கமைய ஆணைக்குழுவின் வருடாந்த செயலாக்கத் திட்டத்தைத் தயாரித்தல்

◊ ஆணைக்குழு மாதாந்த, காலாண்டு மற்றும் ஆண்டுத் தேர்ச்சி அறிக்கைகளைத் தயாரித்தல்

மேற்கூறிய பணிகளை நிறைவேற்றுவதற்காக திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவில் எட்டு (08) பேர் கொண்ட பதவியணியொன்று காணப்படுகின்றது. இப்பிரிவில் பணிப்பாளர் ஒருவர் (01), பிரதிப் பணிப்பாளர் ஒருவர் (01), உதவிப் பணிப்பாளர்கள் இருவர் (02), அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் (01), கணனி பிரயோக உதவியாளர் ஒருவர் (01), முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் (01) மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவர் (01) கடமைபுரிகின்றனர்.

அதற்கிணங்க, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவால் 2016 ஆம் ஆண்டில் பின்வரும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

### 5.1 அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவி-களை அளித்தல் மற்றும் அந்நிறுவகங்களைக் கண்காணித்தல்

அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தையும் மற்றும் தொழிலாளர் சந்தை சார்பகத்தன்மையையும் முன்னேற்றுவதற்கு அவசியமான பயிற்றுவிப்பு உபகரணங்களைப்

பெற்றுக்கொடுப்பதற்காக ஆணைக்குழு இவ்வேலைத்திட்டத்தைசெயற்படுத்தியுள்ளது. இதனூடாக அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் பாடநெறிகள் தேசிய தேர்ச்சி தரங்களுக்கமைய தராதர அங்கீகாரம் செய்யப்பட்டு அதன் மூலம் தேசிய தொழிற் திறன் தகுதிச் (NVQ) சான்றிதழ்களை விருதளிப்பதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது.

2016 ஆம் ஆண்டு நிதியுதவி வேலைத்திட்டத்திற்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள பயிற்சி நிறுவகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கமைய, பெறப்பட்ட விண்ணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி நிறுவகங்கள் கணிப்பீடுகளிற்கு உட்படுத்தப்பட்டு நிதியுதவிகளை விருதளிப்பதற்கான அலுவல்கள் மேற்காள்ளப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் அரச, தனியார் துறை பயிற்சி நிறுவகங்களுக்கும் மற்றும் ஏதுநிலைக்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சியளிக்கும் பயிற்சி நிறுவகங்களுக்கும் நிதியுதவியினை விருதளிக்கப்பட்ட நிதியுதவி பற்றிய துறைசார்பான விபரங்கள் அட்டவணை 5.1 மூலம் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.1: 2015 ஆம் ஆண்டில் துறை ரீதியாக விருதளிக்கப்பட்ட நிதியுதவி**

| துறை | 2016 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதித்தொகை (ரூபா மில்லியன்) | | உண்மையாக நிதியுதவி விருதளிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | நிறுவக-ங்களின் எண்ணிக்கை | அனுமதிக்-கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| | ஆரம்பம் | திருத்தம் | | | |
| அரச துறை | 1.4 | 0.8 | - | - | - |
| தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை | 1.0 | 1.0 | 04 | 03 | 0.856 |
| ஏது நிலைக்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்ப யிற்சியினை வழங்குகின்ற நிறுவகங்கள் | 0.5 | 0.5 | 01 | 01 | 0.335 |
| **மொத்தம்** | **2.9** | **2.1** | **05** | **04** | **1.391** |

நிதியுதவி விருதளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள் தனித்தனியே பின்வருமாறு விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

### 5.1.1 அரச துறையிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவகங்களுக்காக நிதியுதவி விருதளித்தல்

அரச துறைப் பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவி விருதளித்தல் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக 16 வருடங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இவ்வேலைத்திட்டத்தின் குறிக்கோள் யாதெனில் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள் மற்றும் தொழிற்சந்தை பகுப்பாய்வு ஆகியவற்றினூடாக கண்டறியப்பட்ட பயிற்சி

வேலைத்திட்டங்களை அரச துறை பயிற்சி நிறுவகங்களில் செயற்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான நிதியுதவியினை விருதளிப்பதேயாகும். கண்டறியப்பட்ட பாடநெறிகள் தேசிய தேர்ச்சி தரங்களுக்கமைவாக தராதர அங்கீகாரம் செய்யப்பட்டு தேசிய தொழிற்திறன் தகுதிச் (NVQ) சான்றிதழ்களை வழங்குவதற்கான சந்தர்ப்பமும் இங்கு காணப்படுகின்றது. நிதியுதவி பெற்றுக்கொண்ட பெரும்பாலான பயிற்சி நிறுவகங்கள் தமது பாடநெறிகளின் தரத்தினை உயர்வாக பேணி வருகின்றன.

2016 ஆம் ஆண்டில் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் அல்லாத அரசசார் பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவி விருதளிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைய, அமைச்சிற்கு வெளியே இயங்குகின்ற, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள அரச துறை பயிற்சி நிறுவகங்களிடமிருந்து நிதியுதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதன் பிரதிபலனாக, பெறப்பட்ட 14 விண்ணப்பங்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபைகளின் கீழ் இயங்கும் தொழிற்பயிற்சி நிறுகங்களுக்கு அதிகூடிய முன்னுரிமை அளிக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும் இந்நிறுவகங்களால் நடாத்தப்படும் பாடநெறிகள் தராதர அங்கீகாரத்தினை அடையவில்லை என்பது முன் கணிப்பீட்டில் கண்டறியப்பட்டது. அதனால் அந்நிறுவகங்களுக்கு நிதியுதவியினை விருதளிக்காமலிருக்க முடிவு செய்யப்பட்டது.

### 5.1.2 தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவியினை வழங்குதல்

2015 ஆம் ஆண்டில் தனியார் மற்றும் அரசசார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் பாடநெறிகளின் தரத்தையும் சார்புத்தன்மையும் மேம்படுத்துவதற்கு நிதியுதவி வழங்குவதற்காக ரூபா 1.0 மில்லியன் நிதித்தொகையானது (திருத்தஞ் செய்யப்பட்ட வருடாந்த செயலாக்கத் திட்டத்தின் பிரகாரம்) ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, கிடைக்கப்பெற்ற 39 விண்ணப்பங்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட 13 பயிற்சி நிறுவகங்கள் பௌதீக ரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றுள் தகுதியான 03 பயிற்சி நிறுவகங்கள் மாத்திரமே நிதியுதவி விருதளிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டன. அந்நிறுவகங்களோடு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதோடு விருதளிக்கப்பட்ட நிதி அந்நிறுவனங்களால் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் அப்பொருட்கள் ஆணைக்குழுவின் அலுவலர்களால் பரீட்சிக்கப்பட்டதன் பின் நிதி வழங்கப்படும்.

அதற்கிணங்க, 2016 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டினை 85.68% சதவீதமாக அதிகரிக்க முடிந்தது. தனியார் / அரச சார்பற்ற துறைசார் ஒவ்வொரு பயிற்சி நிறுவகங்களுக்கும் விருதளிக்கப்பட்ட நிதியுதவியானது கீழே தரப்பட்டுள்ள அட்டவணை 5.2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.2 ஆனது தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு விருதளிக்கப்பட்ட நிதியுதவி - 2016**

2016 ஆம் ஆண்டில் நிதியுதவி விருதளிக்கப்பட்ட நிறுவகங்கள் பற்றிய விபரங்கள்

| இல. | நிறுவகத்தின் பெயர் | கைத்தொழிற் துறை | பயிற்சிநெறி மற்றும் எதிர்பார்க்கும் NVQ மட்டம் | அனுமதிக்கப்பட்ட நிதித்தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | ஐ ஸொப்ட் தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம் இல.42, நதுன்குலம் வீதிஇபுத்தளம் | அச்சுப்பதித்தல் துறை | கணனி வரைபட கலைஞர் | 238,000.00 |
| | | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை | கணனி வன்பொருள் கலைஞர் | 35,560.00 |
| 2. | ஜெப் கெயா தொழிற் பயிற்சி நிலையம் இல.69/1, வைத்தியசாலை வீதி, சேனவத்தை, அழுத்கம | மின்சார மற்றும் இலத்திரனியல் கைத்தொழிற் துறை | குளிரூட்டி மற்றும் வாயுச் சீராக்கி தொழில்நுட்பவியலாளர | 63,350.00 |
| 3. | எகியோ சிரிலக் நிவாரண சேவை தொழிற் பயிற்சி நிலையம் பொதுவில, பயாகலை | மின்சார மற்றும் இலத்திரனியல் கைத்தொழிற் துறை | குளிரூட்டி மற்றும் வாயுச் சீராக்கி தொழில்நுட்பவியலாளர் | 519,925.00 |
| **விருதளிக்கப்பட்ட மொத்த நிதித் தொகை** | | | | **856,835.00** |

**அட்டவணை 5.3: கைத்தொழிற் துறைகளுக்கேற்ப நிதியுதவி விருதளிப்பு தொடர்பான பகுப்பாய்வு (தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்கள்)**

| கைத்தொழிற் துறை | பாடநெறிகளின் எண்ணிக்கை | விருதளிக்கப்பட்ட நிதித்தொகை (ரூபா) | சதவீதம் (%) |
|---|---|---|---|
| அச்சுப்பதித்தல் துறை | 01 | 238,000.00 | 28% |
| மின்சார மற்றும் இலத்திரனியல் கைத்தொழிற் துறை | 02 | 583,275.00 | 68% |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை | 01 | 35,560.00 | 4% |
| மொத்தம் | 04 | 856,835.00 | 100% |

வட்டவரைபு 5.1 கைத்தொழிற்துறை ரீதியிலான நிதியுதவி விருதளிப்பு - தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்கள்




இவ்வருடத்தில் ஒவ்வொரு துறைக்கும் நிதி விருதளிக்கப்பட்ட விதம் அட்டவணை 5.3இன் மூலமாகவும் அதன் பகுப்பாய்வு வட்டவரைபு 5.1இன் மூலமாகவும் காட்டப்பட்டுள்ளது.

### 5.1.3 ஏதுநிலைக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளுக்காக நடாத்தப்படும் தொழில்நுட்ப பயிற்சி பாடநெறிகளுக்கு நிதியதவி விருதளித்தல்

இலங்கையில் ஏதுநிலைக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளின் திறன்களை உயர்த்தும் பொருட்டு தொழிற்பயிற்சியை நடாத்துகின்ற நிறுவகங்களுக்கு தேவையான பயிற்சி உபகரணங்களை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் பாடநெறிக்கு தராதர அங்கீகார நிபந்தனை அற்ற முறையில் நி-தியுதவி விருதளிக்கப்படுகிறது.

2016 ஆம் ஆண்டில் இதற்காக ரூபா 0.5 மில்லியன் (திருத்தப்பட்ட வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்கு இணங்க) விருதளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

அதற்கமைய, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற் பயிற்சி வழங்கும் ஒரு நிறுவகத்தின் ஒரு பாடநெறிக்காக ரூபா 0.335 மில்லியன் நிதித்தொகை விருதளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவ்வேலைத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதித்தொகையில் 67.02□ இனை செலவழிக்க முடிந்துள்ளது. பயிற்சி நிலையங்களுக்கு நிதித்தொகை விருதளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள் அட்டவணை இல 5.4 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.4: ஏதுநிலைக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சியினை மேம்படுத்துவதற்கான நிதியுதவி விருதளித்தல் - 2016**

| இல. | பயிற்சி நிறுவகத்தின் பெயர் மற்றும் முகவரி | உரிமம் | கைத்தொழிற் துறை | பயிற்சி நெறியின் பெயர் | மொத்த நிதித் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1. | விசேட தேவைப்பாடுடையவர்களுக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் கலை பயிற்சி நிலையம் இல.385, ஜே 3 பழைய கோட்டை வீதி, ராஜகிரிய | அரச | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை சான்றிதழ் பாடநெறி | 335,100.00 |
| **விருதளிக்கப்பட்ட மொத்த நிதித் தொகை** | | | | | **335,100.00** |

### 5.1.4 நிதியுதவி விருதளிப்பினை விசாரணை செய்யும் வேலைத்திட்டம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள அரச, தனியார் துறை பயிற்சி நிறுவகங்களுக்கு விருதளிக்கப்படும் நிதியுதவி முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக இவ்வாணைக்குழு வருடந்தோறும் கண்காணிப்பு வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தி வருகின்றது.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் நிதியுதவி வழங்கப்பட்ட பயிற்சி நிறுவகங்களிற்கு சென்று இவ்வாணைக்குழு அவற்றினை மதிப்பீட்டிற்கு உட்படுத்தியதுடன், அவ்வாண்டில் நிதியுதவி விருதளிக்கப்பட்ட 16 பாடநெறிகளில் 12 பாடநெறிகள் தொடர்பாக ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. விசாரணை செலவினை குறைப்பதற்காக மட்டக்களப்பு மற்றும் மொனராகலை ஆகிய இடங்களிலுள்ள நிலையங்களை பரீட்சிப்பதற்கு பதிவு மற்றும் தராதர அங்கீகாரப் பிரிவுடன் இணைந்து நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கண்காணிப்பு வேலைத்திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டதன் பிரகாரம் நிதியுதவி வழங்கப்பட்ட தனியார் துறை பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் 83% பாடநெறிகளிற்கு தராதர அங்கீகாரம் பெற்றுள்ளன. ஏனைய பாடநெறிகளுக்கான தராதர அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாயுள்ளது. நிதியுதவி பெற்றுக்கொண்ட அரச துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் பாடநெறிகளில் 50% ஆன பாடநெறிகள் தராதர அங்கீகாரம் பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

## 5.2 தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவானது தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையிற்கான பயிற்சி தேவைப்பாடுகளை இனங்கண்டுகொள்வதற்கு தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களை தயாரித்து வருகின்றது. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் புதிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள்

தயாரிக்கப்பட்டுவருவதுடன் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட திட்டங்களும் நாளதுவரையாக்கப்பட்டும் வருகின்றன. 2016 ஆம் ஆண்டு நிறைவடையும்போது 20 தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 14 திட்டங்கள் நாளதுவரையாக்கப்பட்டுள்ளன.

### 5.2.1 புதிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல்

**◊ சுற்றாடல் பாதுகாப்புத் துறை**

சுற்றாடல் பாதுகாப்புத் துறையின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இத்துறைக்கான புதிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டத்தைத் தயாரிக்கப்பதற்காக அதற்காக நியமிக்கப்பட்ட செயற்குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டது. இதற்கான ஆலோசனை வழங்கலானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வன அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் விஞ்ஞானத் திணைக்களத்தினூடாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்திற்கான முதலாவது வரைவானது தற்போது பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன் இத்திட்டத்தினை தயாரிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் மட்டும் ரூபா 690,098.50 நிதி செலவிடப்பட்டுள்ளது.




### 5.2.2 தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை நாளதுவரையாக்கல்

**◊ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை**

தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை நாளதுவரையாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறைக்கான திட்டத்தை நாளதுவரையாக்குவத்றகான அலுவல்கள் 2015 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் மேற்கொள்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட ஆலோசனை சேவையினை வழங்கிவருகின்ற இன்போடெக் (Infotech Ideas Pvt. Ltd.) நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஆலோசனை கட்டணமாக ரூபா 2,396,800.00 நிதித் தொகையும் 2016 ஆம் ஆண்டில் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5.2.3 இலங்கையில் மாகாண சபைகளுக்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களை தயாரித்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தல்

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றும் வகையில் இலங்கையில் மாகாண மட்டத்தில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களை தயாரிக்கும் பணிகள் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு முடிவடையும் போது சப்ரகமுவா, தென், வடமேல், கிழக்கு, வடக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுக்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நிறைசெய்யப்பட்டுள்ளன. காலத்தின் தேவை கருதியே தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களினை தயாரிக்கும் செயற்பாட்டினை ஆணைக்குழு நிறைவேற்றி வருகின்றது.

வட மத்திய மாகாணத்திற்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டமானது 2016 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. அதற்கான ஆலோசனை வழிகாட்டலானது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வியியலாளர்கள் மற்றும் பொருளாதாரஇ புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் ஆலோசணைக் குழு மூலம் தயாரிக்கப்பட்டது. இதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 297,300.00 செலவிடப்பட்டுள்ளது.




### 5.2.4 தொழிற் பயிற்சித் திட்டங்களை மொழிபெயர்ப்புச் செய்தல்

ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுக்காக உருவாக்கப்பட்ட தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களை சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கும் வட மாகாணத்திற்காக தயாரிக்கப்பட்ட தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை தமிழ் மொழிக்கும் மொழிபெயர்ப்புச் செய்து ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. இதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 365இ366.00 செலவு செய்யப்பட்டது.

## 5.3 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையில் ஆராய்ச்சிக் கற்கைகளை செயற்படுத்தல்

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் ஆராய்ச்சி சிற்றறை (Research Cell) ஆனது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சிற்றறை இது வரையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் துறைக்கு முக்கியமான பல ஆராய்ச்சி முடிவுகளை வெளிக்கொண்டு வருவதற்காக நிதிசார் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. அத்துடன், நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கற்கைகள் தொடர்பான அறிக்கைகள் ஆணைக்குழு இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு ஆராய்ச்சிச் சிற்றறையால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### 5.3.1 புதிய ஆராய்ச்சிக் கற்கைகள்

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இயங்குகின்ற பயிற்சி வழங்கும் நிறுவகங்களிடமிருந்து ஆராய்ச்சி யோசனைகள் கோரப்பட்டன. இதற்கான பணியை நிறைவேற்றுவதற்கும் உரிய ஆலோசனைகளை வழங்குவதற்குமான பொறுப்பு ஆராய்ச்சி வழிநடத்தும் செயற்குழுவின் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பல்வேறு நிறுவகங்களைப் பிரதிநிதித்துவம் செய்து 14 ஆராய்ச்சி யோசனைப் பத்திரங்கள் ஆராய்ச்சி சிற்றறையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவ் யோசனைப் பத்திரங்கள் வழிநடத்தும் செயற்குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டதன் பிற்பாடு துறைக்கு உகந்த, காலத்திற்கேற்ற 12 ஆராய்ச்சி கற்கைகளுக்கான அனுமதி ஆணைக்குழுவிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. இதற்காக ரூபா 2.8 மில்லியன் நிதித்தொகையை செலவிட எதிர்பார்த்துள்ளோம். ஆராய்ச்சிக் கற்கைள் ஒவ்வொன்றுக்கும் செலவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணை இல 5.5 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.5: திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் நிதியளிக்கப்படுகின்ற ஆராய்ச்சி கற்கைகள் - 2016**

| இல | ஆராய்ச்சி தலைப்பு | ஆராய்ச்சிக் குழு | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபா) | 2016 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை (ரூபா) | 2016 இல் செலுத்த வேண்டிய தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1. | இலங்கையின் தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழிற் பயிற்சி நிலையங்களில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக ஆலோசகர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டங்கள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பது பற்றிய ஆராய்ச்சிக் கற்கை | தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி ஆதிகாரசபை | 181,000.00 | 90,500.00 | 90,500.00 |
| 2. | இலங்கையின் இளைஞர் தலைமுறையின் திறமைகளை விருத்தி செய்வதற்காக பயிலுநர் பயிற்சியின் பங்களிப்பு மற்றும் தாக்கம் பற்றிய ஆராய்ச்சிக் கற்கை | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி திணைக்களம் | 100,250.00 | - | 100,250.00 |
| 3. | தொழிற் பயிற்சி அதிகார சபைக்குட்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களின் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளின் பயனுறுதியினை கண்டறியும் ஆராய்ச்சிக் கற்கை | தொழிற் பயிற்சி அதிகார சபை மற்றும் தொழில்நுட்பக் கல்வி, பயிற்சி ஆதிகாரசபை | 200,000.00 | 100,000.00 | 100,000.00 |
| 4. | முன்மாதிரி கைத்தொழில்களுக்-குற்பட்ட கைத்தொழிற் பயிற்சி நிலையங்களை கணிப்பிடுதல் | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி திணைக்களம் | 190,000.00 | 95,000.00 | 95,000.00 |

| இல | ஆராய்ச்சி தலைப்பு | ஆராய்ச்சிக் குழு | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபா) | 2016 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை (ரூபா) | 2016 இல் செலுத்த வேண்டிய தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 5. | தனியார் துறையின் வாடிக்கையாளருக்கான தகுதியாக (ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை) தேசிய தொழிற் தகைமைகள் கொள்ளப்படுகின்றனவா என்பதனை கண்டறியும் ஆராய்ச்சிக் கற்கை | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு | 188,000.00 | - | 188,000.00 |
| 6. | க.பொ.த.சாதாரண தர மற்றும் க.பொ.த.உயர் தர மாணவர்கள் தொழிற் பயிற்சியில் ஈடுபடுவதற்குள்ள வாய்ப்புக்களை கண்டறியும் ஆராய்ச்சிக் கற்கை | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு | 195,000.00 | - | 195,000.00 |
| 7. | சிவில் பொறியியல் துறையில் பாடநெறிகளை வழங்கும் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் பயிற்சி நிறுவகங்களில் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தலானது பாட-நெறி தராதரத்திற்கு எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது தொடர்பான கற்கை | தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு | 172,500.00 | - | 172,500.00 |
| 8. | இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளின் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தலானது தர முகாமைத்துவ முறைமையில் செலுத்தும் தாக்கம் | தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம | 141,570.00 | 70,785.00 | 70,785.00 |
| 9. | முன்னறிவை பரீட்சிக்கும் முறையினூடாக தேசிய தொழிற் தகைமைகளை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக பகுப்பாய்வு செய்தல் | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி ஆதிகாரசபை | 135,300.00 | 67,650.00 | 67,650.00 |

| இல | ஆராய்ச்சி தலைப்பு | ஆராய்ச்சிக் குழு | அனுமதி-க்கப்பட்ட தொகை (ரூபா) | 2016 ஆம் ஆண்டில் செலவி-டப்பட்ட தொகை (ரூபா) | 2016 இல் செலுத்த வேண்டிய தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 10. | தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி பயிற்றுவிப்பாளர்க-ளுக்கான செயல்திறனை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறையின் பயனுறுதியினை கண்டறியும் ஆராய்ச்சிக் கற்கை | துறைசார் திறன்கள் அபிவிருத்தி வேலைத்தி-ட்டம் | 135,300.00 | 67,650.00 | 67,650.00 |
| 11. | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவின் வளைத்தளத்தின் பயனுறுதி மற்றும் பிரயோசனத்திற்காக வலைத்தளங்களை திட்டமிடுதல் தரப்படுத்தலின் தாக்கத்தினை கண்டறிதல் | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் அமைச்சு | 166,500.00 | - | 166,500.00 |
| 12. | தேர்ந்தெடுக்கப்பட்ட பாரம்பரிய பித்தளைக் கைத்தொழிலின் திறன்களை விருத்தி செய்யும் செயற்பாடு தொடர்பான கற்கை | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் துறைசார் திறன்கள் அபிவிருத்தி வேலைத்தி-ட்டம் | 155,000.00 | 77,500.00 | 77,500.00 |
| **மொத்தம்** | | | **2,026,120.00** | **601,935.00** | **1,424,185.00** |

2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி கற்கைகளுக்காக ரூபா 0.602 மில்லியன் செலவிடப்பட்டுள்து. அதற்கமைய 2016 ஆம் ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டு நிதித்தொகையில் 29.7% செலவிடுவதற்கு முடிந்துள்ளது. மிகுதித் தொகை ஆராய்ச்சிக் கற்கைகள் நிறைவடைந்தவுடன் 2017 ஆம் ஆண்டில் செலுத்துவதற்காக கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் அரச திறைசேரியின் கீழ் ஒரு ஆராய்ச்சிக் கற்கை ஆரம்பிக்கப்பட்டது. அது தொடர்பான விபரம் 5.6 அட்டவணையின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.6: புதிய ஆராய்ச்சிக் கற்கைகள் - 2016**

| இல | ஆராய்ச்சி தலைப்பு | ஆராய்ச்சிக் குழு | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபா) | 2016 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை (ரூபா) | 2016 இல் செலுத்த வேண்டிய தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1. | இலங்கை தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சி துறையிலுள்ள பயிற்றுவிப்பாளர்களின் பொருத்தத்தினை கண்டறிவதற்கான கற்கை | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு | 800,000.00 | 237,040.00 | 562,960.00 |

### 5.3.2 ஆராய்ச்சி செயலமர்வுகளை நடாத்துதல்

தொழில்நுட்பவியல் மற்றும் தொழிற் பயிற்சி துறையின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் ஆராய்ச்சியாளர்களை பயிற்றுவிக்கும் 02 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா.256,978.00 செலவழிக்கப்பட்டது.

## 6.0 பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டம் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களை பதிவு செய்வதற்கான அபிவிருத்தித் திட்டத்திற்கு அமை-வாகஇ (1995 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி) மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு அனைத்து தொழிற் பயிற்சி நிறுவகங்களுக்கும் 3 பிரதான தர பாதுகாப்பு முறைமையினை பின்பற்ற ஆரம்பித்தது. அதற்கமைவாக,

1. பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல்
2. பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரம் அளித்தல் - NVQ சான்றிதழ் வழங்குவதற்காக
3. தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபித்தல் மற்றும் சான்றிதழ்படுத்தல்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 3 காரணிகளை அமுல்படுத்தும் பொருட்டு இப்பிரிவானது 09 அலுவலர்களைக் கொண்டமைந்திருப்பதோடு, பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர்கள் மூவர்இ அபிவிருத்தி உத்தியோகத்தர், செயற்திட்ட இணைப்பு அலுவலர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவரும் இதில் அடங்குவர்.

### 6.1 தொழிற் பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் இவ்வாணைக்குழுவில் பதிவு செய்தல் சட்டரீதியாக அவசியமானதொன்றாகும். (மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்திற்கு அமைவாக)

நிறுவகத்தை பதிவு செய்கையில் அந்நிறுவகத்தின் உள்கட்டமைப்பு வசதிகளின் போதுமான தன்மை, பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள், பயிற்றுவிப்பாளர்களின் தகைமைகள், பயிற்சி வழங்கும் முறைமை, பாடவிதானங்களின் போதுமான தன்மை போன்றன தொடர்பாக மதிப்பீடு செய்து இதற்கமைவாக இரண்டு வருட காலப்பகுதிக்கு பதிவு செய்து உறுதிப்படுத்த வேண்டியதோடு அதன் பின் அந்நிறுவகத்திற்கான பதிவினை ஆணைக்குழு வழங்கும்.

2016 ஆம் ஆண்டில் இவ்வாணைக்குழுவின் வருடாந்த செயலாக்கல் திட்டத்தின் பிரகாரம் புதி-தாக பதிவினை மேற்கொள்வதற்காக 385 பயிற்சி நிறுவகங்களில் மதிப்பீட்டினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அவ்வாண்டில் 325 பயிற்சி நிறுவகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

அட்டவணை (i) – நிறுவகங்களை பதிவு செய்தல் (புதிய)

| 2016 | நிறுவகங்களின் எண்ணிக்கை |
|---|---|
| இலக்கு செய்யப்பட்ட அளவு | 385 |
| பதிவு செய்யப்பட்ட அளவு | 325 |

மேற்குறிப்பிட்ட புதிதாக பதிவுசெய்வதற்காக மேற்கொண்ட 385 மதிப்பீடுகளில் 325 பயிற்சி நிறுவகங்கள் தகுதிகளைப் பூர்த்திசெய்திருந்தமையினால் இவ்வாண்டில் அந்நிறுவகங்கள் புதிதாக பதிவுசெய்யப்பட்டன. மற்றைய நிறுவகங்கள் உரிய தகுதிகளைப் பூர்த்திசெய்யாதமையினால் பதிவுசெய்யவதற்காக சிபார்சு செய்யப்படவில்லை.

அட்டவணை (ii) – 2016 ஆம் ஆண்டில் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட நிறுவகங்களின் வகைப்படுத்தல் தொடர்பான தரவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| நிறுவகங்களின் வகைகள் | எண்ணிக்கை |
|---|---|
| அரச துறை | 60 |
| நியதிச் சட்ட சபைகள்/ கூட்டுத்தாபனங்கள், சபைகள் | 13 |
| அரச சார்பற்ற அமைப்புக்கள் | 18 |
| தனியார் துறை | 102 |
| **மொத்தம்** | 103 |

அட்டவணை (iii) – 2015 ஆம் ஆண்டிற்கு சார்பாக 2016 ஆம் ஆண்டில் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவகங்களின் எண்ணிக்கை,

| நிறுவகங்களின் வகைகள் | 2015 | 2016 |
|---|---|---|
| அரச துறை | 35 | 60 |
| நியதிச் சட்ட சபைகள்/ கூட்டுத்தாபனங்கள்இ சபைகள் | 18 | 13 |
| அரச சார்பற்ற அமைப்புக்கள் | 04 | 18 |
| தனியார் துறை | 95 | 102 |
| மொத்தம் | 152 | 193 |

புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவகங்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டில் 2015 ஆம் ஆண்டினை விட 27□ ஆக அதிகரித்துள்ளது என்பதனை அட்டவணை (iii) இன் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

மேலும், பதிவுகளை நாளதுவரையாக்கல் செய்த நிறுவகங்களின் எண்ணிக்கை 355 ஆக உள்ளதோடு அட்டவணை (iv) இன் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

அட்டவணை (iv)

| 2016 | நிறுவகங்களின் எண்ணிக்கை |
|---|---|
| இலக்கு செய்யப்பட்ட அளவு | 400 |
| பதிவுகளை நாளதுவரையாக்கல் செய்த அளவு | 355 |

2015 ஆம் ஆண்டிற்கு சார்பாக 2016 ஆம் ஆண்டில் பதிவுகளை நாளதுவரையாக்கல் செய்த நிறுவகங்களின் எண்ணிக்கை அட்டவணை (v) இன் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

அட்டவணை (v)

| நிறுவகம் | நாளதுவரையாக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| 1. அரச துறை நியதிச் சட்ட சபைகள் | 52 |
| 2. கூட்டுத்தாபனங்கள்/நியதிச் சட்ட சபைகள் | 108 |
| 3. அரச சார்பற்ற அமைப்புக்கள் | 26 |
| 4. தனியார் துறை | 150 |
| | 336 |

## 6.2 பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரம் அளித்தல் - NVQ சான்றிதழ் வழங்குவதற்காக

தேசிய தொழிற் தகைமைகள் சட்டகமானது 2004 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதோடு பாடநெறி தராதர அங்கீகாரத்தின் நோக்காக பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்தல் அமைந்துள்ளது. இதற்கு கட்டாயமாக நிறுவகமானது பதிவு செய்திருத்தல் அவசியமாகும்.

தராதர அங்கீகாரத்திற்குட்பட்ட பாடநெறிகள் மாத்திரம் NVQ சான்றிதழ் வழங்குவதற்கு தகுதி பெறுவதோடு தேசிய தேர்ச்சித் தரத்திற்கு அமைவாக திறன்களை உள்ளடக்கிய பெக்கேஜிற்கு (Package) அமைவாக தயாரிக்கப்பட்ட பாடநெறியின் கீழ் பயிற்சி மற்றும் கல்வியை பெற வேண்டும்.

கீழுள்ள அட்டவணை 2016 ஆம் ஆண்டில் தராதர அங்கீகாரம் பெற்றுள்ள பாடநெறிகளின் எண்ணிக்கை காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை (vi) - 2016

| | |
|---|---|
| இலக்கு செய்யப்பட்ட அளவு | 475 |
| தராதர அங்கீகாரத்திற்கு உட்படுத்தக்கூடிய பாடநெறிகளின் எண்ணிக்கை | 527 |

இங்கு ஆணைக்குழுவினால் எதிர்ப்பார்க்கப்பட்ட இலக்குகளுக்கு மேலதிகமாக பாடநெறிகளை தராதர அங்கீகாரத்திற்குட்படுத்த முடிந்தது.

அரச நிறுவனங்களின் பாடநெறி தராதர அங்கீகாரமானது 1876 வரை உயர்வடைந்துள்ளதோடு, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்களின் பாடநெறி தராதர அங்கீகாரமானது 783 வரை உயர்வடைந்துள்ளது.

இதற்கமைய, 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 2659 பாடநெறிகள் தராதர அங்கீகாரத்திற்குட்படுத்தப்பட்டு NVQ சான்றிதழ் வழங்குவதற்காக தகுதி பெற்றுள்ளது.

**பதிவு செய்யப்பட்ட தொழிற் பயிற்சி நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற சான்றுறுதிப்படுத்தும் செயன்முறை**

பயிற்சி நிறுவகங்களால் வழங்கப்படும் சான்றிதழ்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கையில் அச்சான்றிதழ்களின் அங்கீகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதோடு, அதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு இது வரை இது தொடர்பான 2400 உறுதிப்படுத்தும் ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவ் ஆவணத்தில் குறித்த தொழிற் பயிற்சி நிறுவகத்தின் பதிவு மற்றும் அதன் விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

மேலும், அரச துறைகளின் ஆட்சேர்ப்பிற்கும் இவ்வாறான உறுதிப்படுத்தும் 457 ஆவணங்கள் 2016 ஆம் ஆண்டில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### 6.3 தொழிற் பயிற்சி நிலையங்களுக்குள் தர முகாமைத்துவ முறைமையினை நிறுவும் செயன்முறை மற்றும் சான்றுறுதிப்படுத்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள 39 தொழிற் பயிற்சி நிலையங்களுக்கான அட்டவணை (vii) 2016 ஆம் ஆண்டில் வெளிவாரி தராதர கணக்காய்வுகள் இரண்டு நடாத்தப்பட்டு தர முகாமைத்துவ முறைமையை உருவாக்குவதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்படும் சான்றிதழானது மூன்று வருடங்களுக்கு செல்லுபடியாகும்.

அட்டவணை (vii)

| | **தொழிற் பயிற்சி நிலையத்தின் பெயர்** | **வழங்கப்பட்ட திகதி** | **காலவதியாகும் திகதி** |
|---|---|---|---|
| | **இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை** | | |
| 1 | தொழிற் பயிற்சி நிலையம் - மாத்தறை | 10.08.2016 | 09.08.2019 |
| 2 | தொழிற் பயிற்சி நிலையம் - மின்னேறியா | 26.01.2016 | 25.01.2019 |
| 3 | தொழிற் பயிற்சி நிலையம் - கண்டி | 11.05.2016 | 25.01.2019 |
| 4 | தொழிற் பயிற்சி நிலையம் - மாத்தளை | 30.08.2016 | 29.08.2019 |
| 5 | தொழிற் பயிற்சி நிலையம் - பன்னிபிடிய | 01.12.2016 | 30.11.2019 |
| 6 | தொழிற் பயிற்சி நிலையம் - மொனராகலை | 21.12.2016 | 20.12.2019 |
| 7 | தொழிற் பயிற்சி நிலையம் - நக்கலை | 21.12.2016 | 20.12.2019 |
| 8 | தொழிற் பயிற்சி நிலையம் - வெள்ளவாய | 21.12.2016 | 20.12.2019 |
| | **தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்** | | |
| 9 | தொழில்நுட்பக் கல்லூரி - பெலிஅத்தை | 08.03.2016 | 07.03.2019 |

| | தொழிற் பயிற்சி நிலையத்தின் பெயர் | வழங்கப்பட்ட திகதி | காலவதியாகும் திகதி |
|---|---|---|---|
| 10 | தொழில்நுட்பக் கல்லூரி - வாரியபொல | 08.03.2016 | 07.03.2019 |
| 11 | தொழில்நுட்பக் கல்லூரி - ஆணமடுவ | 08.03.2016 | 07.03.2019 |
| 12 | தொழில்நுட்பக் கல்லூரி - மாத்தளை | 08.03.2016 | 07.03.2019 |
| 13 | தொழில்நுட்பக் கல்லூரி - வரகாபொல | 01.07.2016 | 30.06.2019 |
| 14 | தொழில்நுட்பக் கல்லூரி - பலபிடிய | 01.07.2016 | 30.06.2019 |
| 15 | தொழில்நுட்பக் கல்லூரி - மட்டக்களப்பு | 01.07.2016 | 30.06.2019 |
| 16 | தொழில்நுட்பக் கல்லூரி - கட்டுகஸ்தோட்டை | 01.08.2016 | 31.07.2019 |
| 17 | தொழில்நுட்பக் கல்லூரி - களுத்தறை | 05.10.2016 | 04.10.2019 |
| 18 | தொழில்நுட்பக் கல்லூரி - நுவரஎலியா | 05.10.2016 | 04.10.2019 |
| 19 | தொழில்நுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம் | 01.12.2016 | 30.11.2019 |
| 20 | தொழில்நுட்பக் கல்லூரி - அக்கறைப்பற்று | 01.12.2016 | 30.11.2019 |
| 21 | தொழில்நுட்பக் கல்லூரி - சம்மாந்துறை | 01.12.2016 | 30.11.2019 |
| 22 | தொழில்நுட்பக் கல்லூரி - வீரவில | 01.12.2016 | 30.11.2019 |
| | **தேசிய இளைஞர் சேவை மன்றம்** | | |
| 23 | தேசிய இளைஞர் சேவை மன்றம் - பாணந்துறை | 26.01.2016 | 25.01.2019 |
| 24 | தேசிய இளைஞர் சேவை மன்றம் - இரத்மலானை | 06.04.2016 | 05.04.2019 |
| 25 | தேசிய இளைஞர் சேவை மன்றம் - மஹரகம | 08.06.2016 | 07.06.2019 |
| 26 | தேசிய இளைஞர் சேவை மன்றம் - கொலன்னாவ | 20.07.2016 | 19.07.2019 |
| | **விவசாயக் கல்லூரி** | | |
| 27 | விவசாயக் கல்லூரி - பிபிலை | 02.04.2016 | 01.04.2019 |
| 28 | விவசாயக் கல்லூரி - லபுதுவை | 11.05.2016 | 10.05.2019 |
| 29 | விவசாயக் கல்லூரி - பலமுனை | 29.07.2016 | 28.07.2019 |
| | **பல்கலைக்கழக கல்லூரி** | | |
| 30 | பல்கலைக்கழக கல்லூரி - இரத்மலானை | 01.12.2016 | 30.11.2017 |
| 31 | பல்கலைக்கழக கல்லூரி - குளியாபிடிய | 01.12.2016 | 30.11.2017 |
| | **மஹவெலி அபிவிருத்தித் திணைக்களம்** | | |
| 32 | விவசாய முகாமைத்துவ பயிற்சி நிலையம் - நவமெதகம | 26.01.2016 | 25.01.2019 |
| | **தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள்** | | |
| 33 | Roots Hair & Beauty Salon and Academy (Pvt) & Ltd - கொழும்பு 04 | 2016.03.08 | 2019.03.07 |
| 34 | Aquinas College of Higher Studies - கொழும்பு 08 | 01.07.2016 | 30.06.2019 |
| 35 | Vivekananda College of Technology - மட்டக்களப்பு | 10.10.2016 | 09.10.2019 |
| 36 | International Academy of Beauticians (Pvt) & Ltd - நுகேகொட | 10.10.2016 | 09.10.2019 |
| 37 | Texas National Montessori and Teacher Training Centre - கொழும்பு 08 | 10.10.2016 | 09.10.2019 |
| | **வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்** | | |
| 38 | Sri Lanka Forestry Institute - மூன்பிளேன, நுவரஎலியா | 06.04.2016 | 05.04.2019 |
| 39 | சாகர பல்கலைக்கழகம் - தங்காலை | 01.12.2016 | 30.11.2019 |

இதற்கு மேலதிகமாக தர முகாமைத்துவ முறைமையினை பற்றி 15 அறிவூட்டல் செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் தொழிற் பயிற்சி நிலையங்களிலிருந்து 450 அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர்.



மேலும்இ உள்ளக கணக்காய்விற்காக ஆணைக்குழுவினால் இரண்டு நாள் செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் 70 அலுவலக ஊழியர்கள் பங்குபற்றியுள்ளனர். இச்செயலமர்வின் இறுதியில் எழுத்து மூல பரீட்சையும் நடாத்தப்பட்டது. மேலும், இப்பரீட்சையில் 70% இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற வேண்டும். இதனை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்களுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் வழங்கி வைக்கப்படும்.



2016 ஆம் ஆண்டில் ஒரு அலுவலர் (Lead Auditor) இலங்கை கட்டளைகள் பணியகத்தின் தகுதியைப் பெற்றுள்ளார். நிகழ்காலத்தில் தொழில் ரீதியிலான கணக்காய்வாளர்களுக்கான தேவைப்பாடு நிலவுவதோடு, இதற்கமைவாக QMS கணக்காய்வு குழுவில் 25 பேர் கணக்காய்வாளர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக மேலும் பல அலுவலர்களை பயிற்றுவிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## இத்துறையின் மூலம் செயற்படுத்தப்பட்ட வேறு நடவடிக்கைகள்

புது வடிவிலான NVQ சான்றிதழ் NVQ மட்டம் 5 மற்றும் 6 இற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆணைக்குழுவின் ISO:9001:2015 இற்கான சான்றிதழை நாளதுவரையாக்கல் செய்யும் செயன்முறையை வெற்றிகரமாக நிறைவு செய்து அதன் சான்றிதழானது ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.



2016 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவானது நிறுவகங்களின் பதிவு, பாடநெறி தராதர அங்கீகாரம் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளின் ஊடாக பெற்றுள்ள வருமானம் கீழுள்ள அட்டவணையின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

அட்டவணை (viii)

| | |
|---|---|
| பதிவுக் கட்டண வருமானம் | - ரூபா 1,850,500/- |
| உரித்துச்சான்றளிக்கை கட்டண வருமானம் | - ரூபா 1,881,900/- |
| தராதர அங்கீகாரக் கட்டண வருமானம் | |
| ஈட்டப்பட்ட வருமானம் (Student Record books) | - ரூபா 3,296,275/- |
| தர முகாமைத்துவ (QMS) சான்றிதழ் வழங்குதல் | - ரூபா 1,490,000/- |
| **மொத்த வருமானம்** | **- ரூபா 8,518,075/-** |

இப்பணமானது திறைசேரியில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

## 7.0 தேசிய தேர்ச்சித் தரம், பாடவிதானம் மற்றும் தேசிய தொழிற் தகைமைகள் பிரிவு

### 7.1 2016 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள புதிய தேசிய தேர்ச்சித் தரங்களை அபிவிருத்தி செய்ததன் பிற்பாடு அவை செல்லுபடியாக்கம் செய்யப்பட்டன.

### 7.1.1 பாடவிதானங்களை உள்ளடக்கி தயார் செய்யப்பட்ட புதிய தேசிய தேர்ச்சித் தரங்கள்

i. மட்டம் 1-4

◊ கையடக்கத் தொலைபேசி திருத்தும் கைவினைஞர்
◊ பாதுகாப்பு மற்றும் ஆலோசனை வழங்கல் தொடர்பான அறிமுகம்
◊ அலுவலக வேலைகள் நிறைவேற்றல் தொடர்பான அறிமுகம்
◊ புதியவர்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல்
◊ முதியோர் பராமரிப்பு உதவியாளர் (Elder Care Assistant)

ii. மட்டம் 5-6 வரை

- ◊ கணிதத்தின் மூலம் வேலை செய்தல் மற்றும் கல்வி கற்றல்
- ◊ சேவைத் துறையில் கல்வி
- ◊ தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி நிலையங்களின் முகாமைத்துவம்
- ◊ தொழில்நுட்பவியல் மற்றும் கல்வி

**7.1.2**

i. தேசிய தொழிற் தகைமைகள் மட்டம் 1-4 வரை தயார் செய்யப்பட்ட புதிய தேசிய தேர்ச்சி மட்டம்

- ◊ பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு முறைமை தொழில்நுட்பவியலாளர்
- ◊ திண்டு வேலைக்காரர் (Upholster)
- ◊ தீயணைப்பு வீரர் (Fireman)
- ◊ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் (ICT Technician) (கண்பார்வையற்ற)
- ◊ மருத்துவ தொழில்நுட்பவியலாளர்
- ◊ சாதாரண சிறுவர் பராமரிப்பாளர்
- ◊ தேயிலை கைத்தொழிற்சாலை தொழில்நுட்பவியலாளர்
- ◊ கள உத்தியோகத்தர் - தேயிலை
- ◊ டீசல் என்ஜின் தொழில்நுட்பவியலாளர்

ii. தேசிய தொழிற் தகைமைகள் மட்டம் 5-6 வரை தயார் செய்யப்பட்ட புதிய தேசிய தேர்ச்சி மட்டம்

- ◊ விளையாட்டு அறிவியல்

7.1.3

i. தேசிய தொழிற் தகைமைகள் மட்டம் 5-6 வரை தயார் செய்யப்பட்ட புதிய பாடத்திட்டம்

- ◊ வாழ்க்கை பாதுகாப்பு

## 7.2 கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் நாளதுவரையாக்கல் செய்ததன் பின் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவானது அவற்றினை செல்லுபடியாக்கம் செய்தது

### 7.2.1 தேசிய தொழிற் தகைமைகள் மட்டம் 1-4 வரை பாடவிதானத்தினை உள்ளடக்கிய தேசிய தேர்ச்சித் தரங்கள்

- ◊ அடிப்படை குழாய்நீர் கைவினைஞர்
- ◊ சக்கர சீரமைப்பு கலை
- ◊ கட்டுமான துறைக்கான தச்சுத் தொழில்நுட்பக் கலையை அறிமுகப்படுத்தல்
- ◊ உணவு, பானங்கள் சேவை (உதவி சிற்றுண்டிச்சாலை ஊழியர்)
- ◊ அறை உதவியாளர்
- ◊ காய்ச்சி இணைப்பவர் (welding technician)
- ◊ விருந்தோம்பல் சேவை வழங்குனர்
- ◊ அறுவடை இயந்திர இயக்குபவர்
- ◊ நான்கு சக்கர ட்ராக்டர் வண்டி இயக்குபவர்
- ◊ வாகனங்களை திருத்தும் தொழில்நுட்ப கைவினைஞர்

- ◊ வெதுப்பக கைவினைஞர்
- ◊ சிற்றுண்டிச்சாலை ஊழியர்
- ◊ உதவி சமையற்காரர்
- ◊ ஏற்பாட்டியல் உதவியாளர் (Logistics Assistant)
- ◊ Assistant Front of house
- ◊ மேசன்

### 7.2.2 தேசிய தொழிற் தகைமைகள் மட்டம் 1-4 வரை நாளதுவரையாக்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள்

- ◊ மோட்டார் வாகன மின்சார தொழில்நுட்பவியலாளர்
- ◊ உந்துருளி தொழில்நுட்பவியலாளர்
- ◊ முச்சக்கர வண்டி தொழில்நுட்பவியலாளர்
- ◊ உலோக காய்ச்சி இணைப்பாளர்
- ◊ தொலைக்காட்சி, வானொலி மற்றும் அவை சார்பான உபகரணங்களை பழுதுபார்த்தல்

### 7.2.3 நாளதுவரையாக்கப்பட்ட பாடத்திட்டங்கள்

- ◊ வடிவமைப்பாளர்

## 7.3 சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரப் பாடவிதானங்கள்

### 7.3.1 கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடவிதானங்களை உள்ளடக்கிய தேசிய தேர்ச்சித் தரங்கள் சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன

- ◊ பாதுகாப்பு மற்றும் ஆலோசனை சேவை வழங்குவது தொடர்பான அறிமுகம்
- ◊ அடிப்படை குழாய்நீர் கலை
- ◊ சக்கர சீரமைப்பு கலை
- ◊ அலுவலக வேலைகளை நிறைவேற்றல் தொடர்பான அறிமுகம்
- ◊ தச்சு கைவினைஞர் (கட்டடம்)
- ◊ உணவு, குளிர்பானம் பரிமாறுபவர்
- ◊ அறை உதவியாளர்
- ◊ சாதாரண சிறுவர் பாதுகாப்பு
- ◊ கள உதவியாளர் (விவசாயம்)

### 7.3.2 சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள்

- ◊ வெதுப்பக கைவினைஞர் (நாளதுவரையாக்கப்பட்ட)

### 7.3.3 சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட பாடவிதானங்கள்

- ◊ கள உத்தியோகத்தர் - றப்பர்
- ◊ காய்ச்சி இணைக்கும் கைவினைஞர் (welding technician)

## 7.4 கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன

### 7.4.1 பாடவிதானங்களை உள்ளடக்கிய தேசிய தேர்ச்சித் தரங்கள் தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்ப்பட்டுள்ளன.

◊ அடிப்படை குழாய்நீர் கலை
◊ தச்சு கைவினைஞர் (கட்டடம்)
◊ பாதுகாப்பு மற்றும் ஆலோசனை சேவை வழங்குவது தொடர்பான அறிமுகம்
◊ அலுவலக வேலைகளை நிறைவேற்றல் தொடர்பான அறிமுகம்
◊ சக்கர சீரமைப்பு கலை
◊ உணவு, குளிர்பானம் பரிமாறல்
◊ அறை உத்தியோகத்தர்

### 7.4.2 தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்ப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்கள்

◊ மின் உபகரண பராமரிப்பு தொழில்நுட்ப கலைஞர்
◊ கட்டட வேலைத்தள மேற்பார்வையாளர்
◊ வீட்டு நிர்வாக உதவியாளர்
◊ மர நடுகை அபிவிருத்தி உதவியாளர்
◊ கையடக்கத் தொலைபேசி திருத்தும் கைவினைஞர்
◊ மர வேலை கலைஞர்
◊ கைவினைக் கலைஞர்கள்
◊ பொருத்துநர் (General)
◊ பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு முறைமை தொழில்நுட்பவியலாளர்
◊ முதலுதவியாளர்
◊ புத்தக விநியோகிப்பாளர்
◊ கைத்தொழில் மின்னியல் தொழிநுட்பவியலாளர்
◊ துணி வெட்டுபவர் (fabric cutter)
◊ வரவேற்பாளர்
◊ பல் அங்காடி நிறுவன உதவியாளர்

### 7.4.3 தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள பாடவிதானங்கள்

◊ அளவை துறை உதவியாளர்
◊ எழுதுவினைஞர்
◊ தொழில்முறை சமையற்காரர்
◊ அடிப்படை தொழில் திறன்
◊ தாதி உதவியாளர்
◊ உணவக பணியாளர் (Waiter/Steward)
◊ கைத்தொழில் மின்னியல் தொழிநுட்பவியலாளர்
◊ புத்தக விநியோகிப்பாளர்
◊ துணி வெட்டுபவர் (fabric cutter)
◊ வரவேற்பாளர்
◊ பல் அங்காடி நிறுவன உதவியாளர்

**7.5 கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்கள் ஆங்கில மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன**

**7.5.1 ஆங்கில மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்கள்**

◊ பூங்கா திட்டமிடல் அபிவிருத்தி உதவியாளர்

**7.5.2 ஆங்கில மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள பாடவிதானங்கள்**

◊ தச்சு வேலைக் கலைஞர்
◊ கைத்தொழில் குழாய் தொழில்நுட்பவியலாளர்
◊ கட்டுமான தொழில்நுட்பவியலாளர்
◊ அலுமினியக் கட்டமைப்பாளர்

**7.6 தேசிய தொழிற் திறன் தகுதிகள் அல்லாத பாடநெறிகளின் சான்றிதழ்களை தேசிய தொழிற் திறன் தகுதி மட்டத்திற்கு சமப்படுத்தல்**

**7.6.1 கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளின் சான்றிதழ்களைப் பெற்றுள்ளவர்களுக்கு தேசிய தொழிற் திறன் தகுதிகள் மட்டத்திற்கு சமனான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.**

| பாடநெறியின் பெயர் | தேசிய தொழிற் திறன் தகுதி மட்டம் | வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் (சிவில் பொறியியல்) | 5 ஆம் மட்டம் | 27 |
| தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் (எந்திரவியல் பொறியியல்) | 5 ஆம் மட்டம் | 13 |
| தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் (மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல்) | 5 ஆம் மட்டம் | 14 |
| தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் (நில அளவையியல்) | 5 ஆம் மட்டம் | 08 |
| கைத்தொழில் தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் | 5 ஆம் மட்டம் | 14 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா | 5 ஆம் மட்டம் | 50 |
| பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா | 6 ஆம் மட்டம் | 08 |

**7.6.2 தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் பெற்ற 78 நபர்களுக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை விதிகளுக்கு அமைவாக கடிதங்கள் வெளியிடப்பட்டன.**

# 8. தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு

## 8.1 அறிமுகம்

ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் தேசிய தொழிற் திறன் தகுதிகள் துறை மற்றும் NVQ சான்றிதழ் துறை இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டு தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு திறன் துறை அபிவிருத்தி நிதியத்திலிருந்து நிதியுதவியளிக்கப்பட்டது.

இத்துறையானது பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், 04 உதவிப் பணிப்பாளர்கள், 02 செயற்திட்ட இணைப்பு அலுவலர், அபிவிருத்தி அலுவலர், 03 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் 03 கணனி பிரயோக உதவியாளர்களை உள்ளடக்கியுள்ளது. இதற்கமைவாக இத்துறையின் மூலம் பின்வரும் செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

## 8.2 தேசிய தொழிற் திறன் தகுதிகள் முறைமையினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்

### 8.2.1 நிறுவகங்கள் இடையிலான வழிநடத்தல் செயற்குழு கூட்டங்களை நடாத்தல்

தேசிய தொழிற்திறன் தகுதிகள் முறைமையினை செயற்படுத்திவரும் போது எழும் பிரச்சினைகளைக் கண்டறிதல் மற்றும் அவ்வாறு கண்டறியப்பட்ட பிரச்சினைகளுக்குத் தகுந்த தீர்வுகளை தேடிக்கொள்ளும் ஓர் அமைப்பாக 2004 ஆம் ஆண்டில் நிறுவகங்கள் இடை-யிலான வழிநடத்தல் செயற்குழு உருவாக்கப்பட்டது. மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் இச்செயற்குழுவின் தலைவராக இருப்பதுடன் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களம் மற்றும் நிறுவகங்களின் சிரேஷ்ட முகாமையாளர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

### 8.2.2 கணிப்பீட்டாளர்கள் தொடர்பான தரவு தளத்தினை பேணுதல்

#### 8.2.2.1 தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் தேவைப்பாட்டை எதிர்வுகூறுதல்

தயாரிக்கப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்களின் எண்ணிக்கை மற்றும் 2015 ஆம் ஆண்டு நிறைவடையும் போது தரவுத் தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை, தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களின் பூகோள ரீதியான வதிவிடம் ஆகிய விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு தேவைப்படும் கணிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை தொடர்பான எதிர்வுகூறல் அறிக்கையானது தயாரிக்கப்பட்டுள்ளது.

#### 8.2.2.2 தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களாக பயிற்சி அளிப்பதற்கு தகுந்த நபர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத்தேர்வினை நடாத்தல்.

தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களாக நியமனம் வழங்குவதற்காக தேர்வுநாடிகள் தனிப்பட்ட ரீதியில் விண்ணப்பிக்க வேண்டியுள்ளதுடன் இதற்கென ஆணைக்குழுவால் விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தினை பூர்த்திசெய்து அனுப்புதல் வேண்டும். இங்கு, விண்ணப்பதாரர்களை நேர்முகத்தேர்வுக்கு அழைப்பதற்கு நியமிக்கப்பட்ட காலப்பகுதியொன்று காணப்படாததுடன் கிடைக்கப்பெற்ற விண்ணப்ப படிவங்களின் அடிப்படையில் தகுதியானவர்களை

தேர்ந்தெடுத்தல் பணிப்பாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நேர்முகத் தேர்வு சபை மூலம் மேற்கொள்ளப்படும்.

உரிய தொழிற்துறை தொடர்பான விசேட நிபுணத்துவமுடைய நபர்கள் இந் நேர்முகத்தேர்வு சபையிற்கு நியமிக்கப்படுவதுடன் 2016 ஆம் ஆண்டில் இவ்வாறான நேர்முகத்தேர்வுகளை 08 நாட்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் தேவை மற்றும் அவசியத்தின் பொருட்டு மீளாய்வாண்டில் இவ்வாறான நேர்முகத்தேர்வுகள் 13 நாட்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## 8.2. தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களிற்கு பயிற்சி அளித்தல் வேலைத்திட்டம் மற்றும் அதற்கான வசதிகளை வழங்குதல்.

நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களிற்கான 08 பயிற்சி அளித்தல் வேலைத் திட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நடாத்தப்பட்டுள்ளன.

| | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| ◊ 77 ஆவது அணி | 30 |
| ◊ 78 ஆவது அணி | 27 |
| ◊ 79 ஆவது அணி | 21 |
| ◊ 80 ஆவது அணி | 31 |
| ◊ 81 ஆவது அணி | 29 |
| ◊ 82 ஆவது அணி | 34 |
| ◊ 83 ஆவது அணி | 32 |
| ◊ 84 ஆவது அணி | 29 |
| கணிப்பீட்டாளர் தரவுத் தளத்தில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | 224 |

### 8.2.4 கணிப்பீட்டாளரகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல்

உரிய எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைவோர் நேர்முகத்தேர்விற்காக நேர்முகத்தேர்வு சபையிடம் வரவழைக்கப்படுவர். நேர்முகத்தேர்வு சபையின் சிபார்சிற்கு இணங்க குறிப்பிட்ட கணிப்பீட்டாளரிற்கு அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கான எழுத்து மூல பரீட்சையானது 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டதுடன் அதில் தகுதி பெற்ற 261 கணிப்பீட்டாளர்கள் இதற்காக விண்ணப்பித்திருந்ததுடன் நேர்முகத் தேர்வின் இறுதியில் 101 பேர் தெரிவானதோடு அவர்களுக்கு திறன்கள் அபிவிருத்தி, தொழிற் பயிற்சி அமைச்சர் கௌரவ மஹிந்த சமரசிங்க அவர்களின் தலைமையில் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வைபவம் நடாத்தப்பட்டது.

### 8.2.5 தேர்ச்சிசார் கணிப்பீடுகள் இடம்பெறுதல் பற்றிய தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இவ்விடயம் தொடர்பாக கீழே தரப்படுள்ள மூன்று (03) விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ◊ தனியர் துறைசார் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்
- ◊ அரச துறைசார் பயிற்சி நிலையங்களில்/ நிறுவகங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்
- ◊ முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்

### 8.2.6 தனியர் துறைசார் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள தனியார் துறை பயிற்சி நிறுவகங்கள்/ நிலையங்களில் பாடநெறி தராதர அங்கீகாரம் மேற்கொள்ளப்பட்ட பாட-நெறிகள் நடாத்தப்பட்டு அவை முடிவுறும் போது அப்பாடநெறிகளை பின்பற்றிய மாணவர்களை கணிப்பீட்டிற்கு உட்படுத்தி அதில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தேசிய தொழிற்திறன் தகுதிகள் (NVQ) விருதளிக்கப்படுகின்றன.

இங்கு, உரிய நிபந்தனைகள் பரீட்சிக்கப்பட்டு அவை பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் பேணப்பட்டுவரும் கணிப்பீட்டாளர் தரவுத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள கணிப்பீட்டாளர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்களைக் கொண்டு கணிப்பீடானது மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு, பல்வேறுவகையான பயிற்சி நிலையங்கள்/ நிறுவகங்கள் மூலம் 2016 ஆம் ஆண்டில் கணிப்பீட்டினை மேற்கொள்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையானது 657 ஆகும். 2016 ஆம் ஆண்டிற்கான இலக்கு 420 ஆக இருந்தபோதிலும் அதனை விஞ்சிய இவ்விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு தனியார் துறை நிறுவகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தேசிய தொழிற்திறன் தகுதிகள் முறைமையானது அதிகூடுதலாக மக்கள் மத்தியில் செல்வாக்கினை பெற்றுள்ளமை இதற்கு காரணமாகும் என அனுமானிக்க முடிகின்றது.

### 8.2.7 அரச துறைசார் பயிற்சி நிலையங்களில்/ நிறுவகங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்.

8.26 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க தனியார் துறை தவிர்ந்த அரச துறைக்குரிய பயிற்சி நிறுவகங்களில்/ நிலையங்களில் கணிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கும் செயற்பாட்டானது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கணிப்பீட்டு அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம் மீளாய்வாண்டின் போது திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் செயற்பட்டுவருகின்ற நிறுவகங்களில் இருந்தும் மற்றும் இவ் அமைச்சிற்கு புறம்பான அரச துறை பயிற்சி நிலையங்கள்/ நிறுவகங்களில் இருந்தும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் 3101 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிறுவகங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவகங்கள்∴
பயிற்சி மத்திய நிலையங்கள்

◊ தொழில்நுட்பக்கல்வி, பயிற்சித் திணைக்களம்
◊ இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
◊ தேசிய பயிலுநர், கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
◊ இலங்கை இளைஞர் படை
◊ சமுத்திர பல்கலைக்கழகம்
◊ இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் அல்லாத அரச நிறுவகங்கள்

◊ தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
◊ இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
◊ விவசாய திணைக்களம்
◊ சமூக சேவை திணைக்களம்
◊ இலங்கை வான்படை

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி பாடநெறியினை பின்பற்றியவர்களுக்கு தேசிய தொழிற் திறன் தராதரங்களை விருதளிப்பதற்கு மேலதிகமாக வேறொரு முறையின் மூலமும் இத் தேசிய தொழிற் திறன் தராதரங்கள் விருதளிக்கப்படுகின்றன. இம்முறை மூலம் கைத்தொழிற் துறைசார் தொழில்கள் தொடர்பான அனுபவத்தினை உடைய நபர்களுக்கு இத் தேசிய தொழிற் திறன் தராதரங்களிற்காக விண்ணப்பிக்க கூடியதாக உள்ளதுடன் இம்முறையானது முன் அனுபவத்தினை அங்கீகரித்தல் (RPL) முறை என்று அழைக்கப்படுகின்றது. இம்முறை மூலம் தேசிய தொழிற் தராதரங்களை விருதளிப்பதற்கான அதிகாரம் கீழே தரப்பட்டுள்ள இரண்டு அரச துறை நிறுவகங்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான இரண்டு நிறுவகங்களும் பின்வருமாறு

◊ தேசிய பயிலுநர், கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
◊ இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

எவ்வாறாயினும், அரச துறை நிறுவகங்களில்/ பயிற்சி மத்திய நிலையங்களில் தேசிய தொழிற் திறன் தராதரங்களை விருதளிப்பதற்கான கணிப்பீடுகளிற்காக குறிப்பிட்ட வருடத்திற்கான எண்ணிக்கையிலும் பார்க்க மிகக் கூடுதலான எண்ணிக்கையான கோரிக்கைகள் எமக்கு கிடைக்கப்பெறுவது அவதானிக்கப்பட்டுள்ளதுடன் இவை எமது இலக்கிடப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க அதிகமாகவும் காணப்படுகின்றது. அந்த வகையில், மீளாய்வு வருடத்தில் 2600 எண்ணிக்கையான அனுமதி அளித்தல்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாண்டினுள் உண்மையில் அதற்காக கிடைக்கப் பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கையானது 3101 ஆகும்.

இதற்கு கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் காரணங்களாக அமையலாம் என அனுமானிக்கப்பட்டுள்ளது.

◊ வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிற்காக செல்வோருக்கு தேசிய தொழிற் திறன் தராதர சான்றிதழ்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளமை

◊ அரச நிர்வாக அமைச்சின் மூலம் அமைச்சு/ திணைக்களங்களிற்கு நபர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போதும் மற்றும் பதவி உயர்வுகளை வழங்கும் போதும் தேசிய தொழிற் தராதரங்கள் முறைமையினை பின்பற்றுமாறு உரிய நிறுவகங்களுக்கு அரச நிர்வாக

பிரிவினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளமை

◊ தேசிய தொழிற் தராதரங்கள் முறைமையானது படிப்படியாக சமூகத்தின் மத்தியில் பிரபல்யம் பெறுகின்றமை

### 8.2.8 முன் அனுபவத்தினை அங்கீகரித்தல் முறைமை தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்.

இவ்விடயம் தொடர்பாக, இரண்டு (02) முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இவ் வருடத்தில் அவ்வாறான மூன்று (03) கூட்டம் நடாத்தப்பட்டது. தேசிய பயிலுநர், கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை உடன் முன் அனுபவத்தினை அங்கீகரித்தல் முறைமை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் சவால்கள் பற்றி அதிகாரசபை அதிகாரிக-ளுடன் கூட்டமொன்று நடாத்தப்பட்டதுடன் அதற்கு மேலதிகமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகரிகளுடனான இரண்டு (02) கூட்டங்களும் நடாத்தப்பட்டன. இப் பணியகமா-னது “வீட்டுப் பணிப் பெண்” வேலைக்காக வெளிநாடுகளிற்கு செல்வோருக்கான விசேட பயிற்சி பாடநெறிகள் நாடு பூராவும் அமைந்துள்ள அப் பணியகத்தின் பயிற்சி மத்திய நிலையங்களினூ டாக நடாத்தப்பட்டு வருகின்றது. அப் பாடநெறிகள் பூர்தியடையும் போது கணிப்பீடுகள் நடாத்தப்பட்டு பயிற்சி நெறியினை பூர்த்தி செய்தவர்களுக்கு தேசிய தொழிற் திறன் தராதர சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இப் பணியகத்துடன் இவ் வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து இன்னும் அதிக நாட்கள் கடந்துவிடவில்லை. அவ்வாறே இப் பயிற்சி வேலைத்திட்டத்துடன் தொடர்பாக பணியக அலுவலர்களிடையில் இது தொடர்பாக குறிப்பிடக்கூடியளவு தெளிவு காணப்படாமையினால் உருவாகியுள்ள சில பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடி அவற்றினை தீர்த்துக்கொள்வதற்காக பணியகத்துடன் இரண்டு (02) தடைவை கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 8.2.9 தேர்ச்சிசார் கணிப்பீடுகளில் சீர்த்தன்மையினை பேணுவதற்காக செயலமர்வுகளை நடாத்துதல்

#### 8.2.9.1 தேர்ச்சிசார் கணிப்பீடுகளில் சீர்த்தன்மையினை பேணுவதற்காகவும் மற்றும் கணிப்பீட்டாளர்களிற்கு அவசியமான அறிவினை நாளாதுவரையாக்குவதற்குமான செயலமர்வுகளை நடாத்துதல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்குடன் ஐந்து (05) செயலமர்வுகளை மீளாய்வாண்டினுள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அத்துடன், இத்தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீட்டு முறைகள் 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுடன் தொடர்பான கணிப்பீட்டாளர்களிற்கு பயிற்சி அளித்தல் செயற்பாடுகளும் அவ்வாண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டன. அதற்கிணங்க, சில கணிப்பீட்டாளர்களின் அறிவினை மீண்டும் நாளாதுவரையாக்குவதற்கான தேவைகள் உருவாகியுள்ளது. அவ்வாறே, சில கணிப்பீட்டாளர்களினால் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் போது உருவாகும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான தேவைகள் நிலவுவதனால் சம்பந்தப்பட்ட தொழிற் துறைசார் கணிப்பீட்டாளர்களை ஒன்றுகூட்டி செயலமர்வினை நடாத்துவதற்கான அவசியத்தினை வலியுறுத்தி எழுத்து மூலம் அவர்களால் முன்வைக்கப்பட்ட இவ்வாறான கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளவாறு செயலமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. அதற்கிணங்க,

தொழிற் துறை சார்பாக ஒரு செயலமர்வும் பூகோள ரீதியாக கணிப்பீட்டாளர்களுக்கான ஐந்து (05) செயலமர்வுகளும் 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

- ◊ 2016.02.25 - வடமத்திய மாகாண அணியிற்கான செயலமர்வு அனுராதபுதம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றது

  2016.03.30 - கிழக்கு மாகாண அணியிற்கான செயலமர்வு அம்பாறை ஹாடி கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது

- ◊ 2016.08.04 - தென் மாகாண அணியிற்கான செயலமர்வு மாத்தறை தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றது

- ◊ 2016.08.11 - ஊவா மாகாண அணியிற்கான செயலமர்வு பதுளை தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றது

- ◊ 2016.11.10 - ஒப்பனை அலங்கார தொழிற் பயிற்சி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது

  சிகை அலங்கார தொழிற் பயிற்சி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது

  தையற் கலை தொழிற் பயிற்சி ஆணைக்குழுவின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது

  வடிவமைப்பாளர் தொழிற் பயிற்சி ஆணைக்குழுவின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது

  முன்பள்ளி ஆசிரியர் தொழிற் பயிற்சி NHRDC மண்டபத்தில் இடம்பெற்றது

## 8.10 அரச மற்றும் தனியார் துறை பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படுகின்ற தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீட்டு செயற்பாடுகள் தொடர்பான கணக்காய்வுகளை மேற்கொள்ளல்.

மீளாய்வாண்டில் 22 அரச மற்றும் தனியார் துறையினை சார்ந்த பயிற்சி நிறுவகங்களில் இடம்பெற்ற தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீட்டு செயற்பாடுகள் எமது பிரிவின் மூலம் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## 8.11 முறைப்பாடுகளை விசாரணை செய்தல்

மீளாய்வாண்டில் தேர்ச்சிசார் கணிப்பீடுகள் தொடர்பான முறைப்பாடுகள் எதுவும்

இவ்வாணைக்குழுவிற்குக் கிடைக்காமையினால் அவை தொடர்பான விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

### 8.12 கணிப்பீட்டினை நடாத்துதல் மற்றும் அழகுக் கலை மற்றும் சிகை அலங்கார கைவினைஞர் துறைசார் எழுத்து மூல பரீட்சையினை நடாத்துதல்

மீளாய்வாண்டின் போது பிரபல்யமான புதினப் பத்திரிகைகள் வாயிலாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு அழகுக் கலை மற்றும் சிகை அலங்காரக் கைவினைஞர் துறைசார் எழுத்து மூல பரீட்சையினை 2016 ஆம் ஆண்டு ஜுன் மாதம் நடாத்தப்பட்டுள்ளது.

| துறை | விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அழகுக் கலை மற்றும் சிகை அலங்கார துறை | 2524 |

2016 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இடம்பெற்ற பரீட்சையில் சித்தியடைந்தோரின் சதவீதங்கள் அழகுக் கலை கைவினைஞர் துறையில் 87.81% சதவீதமும் சிகை அலங்காரக் கைவினைஞர் துறையில் 64.09% சதவீதமும் ஆகும்.

### 8.13 கணிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்

எமது அமைச்சின் கீழ் செயற்பட்டுவருகின்ற கீழே தரப்பட்டுள்ள நிறுவகங்களில் நடாத்தப்பட்ட கணிப்பீடுகளில் பங்குபற்றிய கணிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் தொடர்பான கொடுப்பனவு நடவடிக்கைகள் எமது ஆணைக்குழுவின் கணிப்பீட்டு அலகின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

1. தொழில்நுட்பக்கல்வி, பயிற்சித் திணைக்களம்
2. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை (தேர்ச்சி அடிப்படையிலான பாடநெறி தொடர்பாக)
3. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை (தேர்ச்சி அடிப்படையிலான பாடநெறி தொடர்பாக)
4. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

இந்த தலைப்பின் கீழ் கணிப்பீட்டு அலுவலர்கள் 3042 பேருக்கான கொடுப்பனவுகள் தொடர்பான உறுதிச் சீட்டுகள் கணிப்பீட்டு அலகின் மூலம் சான்றுபடுத்தப்பட்டு அவை கணக்கு பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அவ் உறுதிச் சீட்டுகளின் மொத்த பெறுமதி ரூபா 24,879,958.50 ஆகும்.

### 8.14 தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களை அச்சிட்டு வழங்குதல்

2016 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு 47,017 சான்றிதழ்களை அச்சிட்டு வழங்கியுள்ளது.

**அட்டவணை 8.14.1: தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) சான்றிதழாளர்கள் மற்றும் அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 2016 (நிறுவக ரீதியாக)**

| நிறுவகம் | சான்றிதழாளர்கள் | | | சான்றிதழ்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | திறன்கள் அடிப்படையிலான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள் | முன் அனுபவத்தின் அடிப்படையின் மூலமான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள் | மொத்த சான்றிதழாளர்களின் எண்ணிக்கை | திறன்கள் அடிப்படையிலான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள் | முன் அனுபவத்தின் அடிப்படையின் மூலமான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள் | மொத்த சான்றிதழ்களின் எண்ணிக்கை |
| தொழில்நுட்ப கல்வி, பயிற்சி திணைக்களம் | 3425 | - | 3425 | 4169 | - | 4169 |
| தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை | 3048 | 6931 | 9969 | 3380 | 7802 | 11,182 |
| இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | 13,351 | 930 | 14,271 | 16,289 | 1228 | 17,517 |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 1650 | - | 1650 | 1957 | - | 1957 |
| இதர அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை | 10,415 | - | 10,415 | 12,192 | - | 12,192 |
| **மொத்தம்** | **31,889** | **7861** | **39,592** | **37,987** | **9,030** | **47,017** |

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்

2016 ஆம் ஆண்டில் அச்சிட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 47,014 ஆகும். அவை தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) மட்டம் 01 தொடக்கம் 06 வரை பின்வருமாறு நிறுவக ரீதியாக வழங்கப்பட்டுள்ளன.

| நிறுவகம் | Level 1 | Level 2 | Level 3 | Level 4 | Level 5 | Level 6 | மொத்த சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை | 6 | 1033 | 6449 | 3694 | - | - | 11,182 |
| தொழில்நுட்ப கல்வி, பயிற்சி திணைக்களம் | 9 | 350 | 1971 | 1388 | 445 | - | 4163 |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 9 | 355 | 920 | 673 | - | - | 1957 |
| இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | 69 | 1854 | 10,933 | 4519 | 145 | - | 17,520 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தனியார் துறை | 2565 | 998 | 6410 | 2190 | 29 | - | 12,192 |
| **மொத்தம்** | **2658** | 4238 | 26,683 | 21,464 | 619 | 0 | 47,014 |

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்

இதற்கு மேலதிகமாக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் 2016 ஆம் ஆண்டில் 513 சான்றிதழ்கள் மீள அச்சடிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விபரங்கள் கீழே அட்டவணை 8.14.2 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 8.14.2: மீள அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்கள் தொடர்பான விபரங்கள் 2016

| சான்றிதழ்களின் வகை | சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|
| அச்சுப் பிழை காரணமாக மீண்டும் அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்கள் | 510 |
| சான்றிதழ் தொலைந்து போனதால் நகல் சான்றிதழ் அச்சடிப்பு | 3 |
| **மொத்தம்** | **513** |

அட்டவணை 8.14.3: அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை - தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் - 2016

| Institute Type | Institute | Certificates Issued |
|---|---|---|
| Government | IN3 - NYSC | 1957 |
| Government | IN1 - NAITA | 11182 |
| Government | IN2 - DTET | 4169 |
| Government | IN4 - VTA | 17517 |
| Total - gov | - | 34825 |
| Private | P01/0223 - Prima Group, Sri Lanka | 189 |
| Private | P01/0247 - Technique International (Pvt) Ltd | 13 |
| Private | P01/0274 - Technology & Computer Training Institute (Pvt) Ltd. | 18 |
| Private | P01/0325 - Ramani Arsecularatne International Academy | 42 |
| Private | P01/0345 - Creative Academy | 42 |
| Private | P01/0391 - Ranjana Salon & Academy | 1 |
| Private | P01/0499 - Swini School of Health and Beauty | 6 |
| Private | P01/0530 - Sri Lanka Bureau of Foreign Employment | 17 |
| Private | P02/0205 - National Youth Corps | 71 |
| Private | P02/0240 - Thirani Peiris International Academy of Beauty (Pvt) Ltd | 15 |
| Private | P02/0271 - Al-Zaamil Lanka Training Centre | 13 |
| Private | P02/0279 - Kusum Sri Dress Line | 5 |
| Private | P05/0100 - National Youth Corps | 41 |
| Private | P07/0075 - Balangoda Information Technology Centre | 10 |

| Institute Type | Institute | Certificates Issued |
|---|---|---|
| Private | P07/0093 - JNN Academy | 19 |
| Private | P07/0098 - Zonal Computer Resource Center , Balangoda | 6 |
| Private | P08/0053 - Department of Industries Development (SG . PC) | 7 |
| Private | P08/0065 - National Youth Corps | 44 |
| Private | P09/0086 - Department of Industrial Development and Enterprise Promotio | 3 |
| Private | P09/0173 - National Youth Corps | 56 |
| Private | P11/0034 - Thondaman Vocational Training Centre | 109 |
| Private | P12/0119 - International Computer School | 36 |
| Private | P14/0077 - Horticulture Crops Training and Development Institute, Bibil | 13 |
| Private | P15/0025 - St. Anthony's Technical Institiute | 67 |
| Private | P16/0067 - Rajarata Women's Foundation | 4 |
| Private | P16/0089 - National Youth Corps | 91 |
| Private | P19/0019 - Kinniya Institute of Industrial Technologies | 47 |
| Private | P20/0026 - St. Johns Vocational Training Centre | 54 |
| Private | P01/0176 - District Agriculture Training Centre ( Homagama) | 44 |
| Private | P01/0259 - Decimal Garment & Technology | 3 |
| Private | P01/0308 - Frills Baking, Cooking & Confectionary Training Centre | 16 |
| Private | P01/0526 - Lanka Ashok Leyland Training Institute | 15 |
| Private | P02/0104 - Technology & Computer Training Institute (Pvt) Ltd. | 45 |
| Private | P02/0202 - Beetaacom Multimedia & Computer Studies | 12 |
| Private | P05/0041 - Siri Rewatha Vocational Training Centre | 9 |
| Private | P06/0019 - District Agriculture Training Center, Weerawila | 16 |
| Private | P06/0064 - Asiri I.C.T.A. Centre | 31 |
| Private | P09/0131 - Department of National Botanical Gardens | 14 |
| Private | P09/0155 - Sri Lanka Bureau of Foreign Employment | 223 |
| Private | P11/0027 - Gamini Dissanayake Foundation | 78 |
| Private | P11/0052 - Department of Agriculture (Central Province) | 34 |
| Private | P12/0104 - Siyasi Academy | 57 |
| Private | P12/0122 - Seth Sevana Nursing School (Pvt) Ltd. | 63 |
| Private | P12/0133 - New Institute of Nursing Education | 18 |
| Private | P13/0055 - Ayona Adikari Salon and Academy | 17 |
| Private | P14/0074 - National Youth Corps | 50 |
| Private | P16/0088 - Sri Lanka Bureau of Foreign Employment | 40 |
| Private | P24/0013 - Don Bosco Technical Institute | 73 |

| Institute Type | Institute | Certificates Issued |
|---|---|---|
| Private | P01/0266 - Navodha Computer Technology | 10 |
| Private | P01/0358 - Advanced Construction Training Academy | 14 |
| Private | P01/0541 - Kariyakarawana Training Institute | 5 |
| Private | P02/0073 - Diyagala Boys Town | 4 |
| Private | P02/0078 - District Agriculture Training Centre ( Ambe-pussa) | 22 |
| Private | P02/0084 - MDP Computer Training Institute | 58 |
| Private | P02/0156 - Realway Institute of Information Technology | 8 |
| Private | P02/0170 - Unishare Computer School | 55 |
| Private | P02/0195 - Trade Training School, Sri Lanka Air Force Sec-tion | 4 |
| Private | P02/0260 - Liya Sewana Sewing & Handicraft Institute | 36 |
| Private | P02/0273 - Sri Lanka Bureau of Foreign Employment | 34 |
| Private | P03/0046 - St. Vincent's Technical School | 7 |
| Private | P03/0048 - Juliston Lanka International (Pvt) Ltd | 60 |
| Private | P03/0091 - National Youth Corps | 84 |
| Private | P06/0040 - Sri Kawantissa Vocational Training Centre | 29 |
| Private | P07/0043 - Institute of Professional Computer Studies | 95 |
| Private | P09/0164 - Department of Industrial Development and Enterprise Promotio | 4 |
| Private | P10/0062 - Department of Agriculture (Central Province) | 38 |
| Private | P11/0029 - Department of Industrial Development and Enterprise Promotio | 3 |
| Private | P11/0044 - National Youth Corps | 57 |
| Private | P12/0076 - Microcom Institute of Technology | 95 |
| Private | P12/0145 - Don Bosco Vocational Training Centre | 46 |
| Private | P12/0152 - Institute of Sanasa Information Technology | 20 |
| Private | P12/0156 - National Youth Corps | 127 |
| Private | P13/0030 - TECVITHANIKA | 98 |
| Private | P14/0073 - National Youth Corps | 127 |
| Private | P18/0054 - Sri Lanka Bureau of Foreign Employment | 13 |
| Private | P19/0040 - National Youth Corps | 67 |
| Private | P20/0035 - Royal Computer Centre | 162 |
| Private | P25/0026 - Jaffna College Institute of Agriculture | 43 |
| Private | P25/0055 - DIMO Automobile Training School | 9 |
| Private | P01/0253 - International Academy of Beauticians (Pvt) Ltd | 15 |
| Private | P01/0312 - Texas National Montessori and Teacher Training Centre | 12 |
| Private | P01/0426 - Ocean University of Sri Lanka | 12 |

| Institute Type | Institute | Certificates Issued |
|---|---|---|
| Private | P01/0540 - South Asian International Institute of Higher Education (pvt | 19 |
| Private | P02/0204 - National Youth Corps | 158 |
| Private | P02/0237 - Ocean University of Sri Lanka | 7 |
| Private | P02/0261 - Jinasena Innovation and Technology Institute | 66 |
| Private | P03/0105 - Zonal Computer Resource Center - Kalutara | 22 |
| Private | P05/0106 - National Youth Corps | 51 |
| Private | P06/0072 - National Youth Corps | 67 |
| Private | P09/0016 - Cholankanda Youth Training Centre | 36 |
| Private | P09/0158 - National Youth Corps | 202 |
| Private | P09/0167 - Dental Care International | 13 |
| Private | P12/0092 - Wayamba Technical College (Private) | 467 |
| Private | P13/0051 - National Youth Corps | 65 |
| Private | P16/0041 - SOS Children's Villages-Sri Lanka | 36 |
| Private | P16/0086 - National Youth Corps | 50 |
| Private | P19/0041 - Infogate Institute | 139 |
| Private | P20/0036 - Miani Technical Institute | 171 |
| Private | P20/0081 - Zonal Computer Resource Centre - Kalkudha | 13 |
| Private | P25/0014 - Jaffna College Institute of Technology | 11 |
| Private | P01/0161 - Sri Lanka German Railway Technical Training Center | 145 |
| Private | P01/0221 - Institute of Drafting Technologists Sri Lanka | 19 |
| Private | P01/0513 - Thirani Peiris International Academy of Beauty (Pvt) Ltd | 36 |
| Private | P01/0618 - Zonal ICT Education Centre | 4 |
| Private | P02/0077 - District Agriculture Training Centre (Walpita) | 47 |
| Private | P02/0123 - S. M. I. Professional Nurses Training Institute | 39 |
| Private | P02/0182 - Jayani Hair/Beauty & Bridel Dressing Teaching Academy | 64 |
| Private | P02/0193 - Buddhi Special Education Development Foundation | 6 |
| Private | P02/0215 - National Youth Corps | 127 |
| Private | P02/0236 - Jayani Hair/Beauty & Bridel Dressing Teaching Acaedamy | 45 |
| Private | P03/0099 - Sri Lanka Bureau of Foreign Employment | 121 |
| Private | P04/0071 - NKI Computer Training Institute | 20 |
| Private | P04/0105 - Lideke Wery Educational Institute | 37 |
| Private | P04/0136 - ISF Hotel School | 37 |
| Private | P06/0073 - National Youth Corps | 43 |
| Private | P06/0076 - Ocean University of Sri Lanka | 76 |

| Institute Type | Institute | Certificates Issued |
|---|---|---|
| Private | P07/0064 - SIT Sri Lanka Institute of Computer Technology (Pvt) Ltd | 34 |
| Private | P07/0087 - National Youth Corps | 58 |
| Private | P08/0080 - Zonal Computer Resource Center - Mawanella | 27 |
| Private | P09/0156 - National Youth Corps | 52 |
| Private | P10/0056 - National Youth Corps | 181 |
| Private | P10/0058 - National Youth Corps | 81 |
| Private | P11/0043 - National Youth Corps | 79 |
| Private | P12/0148 - Decimal Garment and Technology | 7 |
| Private | P12/0177 - Vision Technical Academy | 6 |
| Private | P16/0076 - Nenasa Computer Institute | 65 |
| Private | P19/0038 - Ocean University of Sri Lanka | 7 |
| Private | P19/0052 - Computer Resource Center (Trincomalee) | 67 |
| Private | P19/0053 - Zonal Computer Resource Centre | 17 |
| Private | P01/0102 - Sasika Dress Line | 7 |
| Private | P01/0131 - Sri Lanka Institute of Printing | 5 |
| Private | P01/0213 - Asia Lanka Vocational and International Training Centre | 107 |
| Private | P01/0240 - Little Buds | 54 |
| Private | P01/0311 - Skills Training And Management (Pvt) Ltd | 12 |
| Private | P01/0406 - Ramani Fernando Training (Pvt) Ltd | 13 |
| Private | P01/0524 - Sri Lanka Bureau of Foreign Employment | 310 |
| Private | P01/0535 - Future Links Institute of Technological Studies (Pvt) Ltd | 14 |
| Private | P01/0634 - Sheela Fernando Academy and Salon Sheela | 14 |
| Private | P02/0021 - Diesel & Motor Engineering PLC | 21 |
| Private | P02/0045 - Don Bosco Technical Centre | 293 |
| Private | P02/0152 - Ranliya Institute (Pvt) Ltd. | 13 |
| Private | P02/0217 - Metropoliton Institute of Business and Comput-ing | 33 |
| Private | P02/0286 - Infinite Computer Education Institute | 6 |
| Private | P03/0040 - District Agricultural Training Centre | 54 |
| Private | P03/0085 - Nature Volunteers Association | 23 |
| Private | P03/0097 - Southern Lakma Hotel School and Beauty Hair Academy | 24 |
| Private | P04/0011 - Department of Agriculture | 10 |
| Private | P09/0091 - Sunethra Hair & Beauty Academy | 69 |
| Private | P12/0127 - Orient Academy | 6 |
| Private | P12/0151 - National Youth Corps | 98 |

| Institute Type | Institute | Certificates Issued |
|---|---|---|
| Private | P12/0197 - Zonal Computer Resource Centre, Kurunegala. | 9 |
| Private | P13/0054 - John Paul II Institute of Higher Education | 77 |
| Private | P15/0028 - SOS Children's Villages Sri Lanka | 124 |
| Private | P16/0087 - National Youth Corps | 44 |
| Private | P17/0054 - National Youth Corps | 34 |
| Private | P20/0051 - Manmunai Pradeshiya Sabha IT Training Centre | 16 |
| Private | P20/0057 - CRC / Paddiruppu Education Zone | 17 |
| Private | P20/0072 - Computer Resource Center (Batticaloa) | 51 |
| Private | P20/0076 - University College Batticaloa | 49 |
| Private | P01/0326 - Ranmali Associates International (Pvt) Ltd. | 60 |
| Private | P01/0439 - Sri Lanka Institute of Textile & Apparel | 8 |
| Private | P01/0531 - Rapunzel's (Pvt) Ltd | 41 |
| Private | P02/0065 - United Tractor & Equipment (Pvt) Limited. | 21 |
| Private | P02/0097 - Beetaacom Multimedia & Computer Studies | 96 |
| Private | P02/0159 - Good Shepherd Sisters | 70 |
| Private | P02/0206 - National Youth Corps | 63 |
| Private | P04/0129 - National Youth Corps | 48 |
| Private | P04/0131 - National Youth Corps | 51 |
| Private | P04/0152 - South Asian International Institute of Higher Education (pvt | 1 |
| Private | P05/0118 - Sri Lanka Red Cross Society | 12 |
| Private | P06/0075 - Sri Lanka Bureau of Foreign Employment | 267 |
| Private | P07/0089 - Sri Lanka Bureau of Foreign Employment | 157 |
| Private | P09/0085 - Department of Industrial Development and Enterprise Promotio | 2 |
| Private | P09/0107 - Inrooma Academy of Hair & Beauty (Pvt) Ltd | 20 |
| Private | P09/0120 - Tec Vision International Training College (Pvt) Ltd | 37 |
| Private | P09/0185 - Department of Agriculture (Central Province) | 18 |
| Private | P11/0045 - National Youth Corps | 112 |
| Private | P12/0079 - Athugalpura Village Development Association | 34 |
| Private | P12/0126 - Salon Kusum Hair, Beauty and Bridal Academy | 72 |
| Private | P12/0154 - National Youth Corps | 89 |
| Private | P12/0158 - National Youth Corps | 64 |
| Private | P12/0159 - National Youth Corps | 45 |
| Private | P12/0185 - Lanka Nursing School | 39 |
| Private | P16/0060 - Don Bosco Vocational Training Centre | 280 |
| Private | P16/0098 - I.TECH | 52 |
| Private | P18/0011 - Advanced Training Center | 75 |

| Institute Type | Institute | Certificates Issued |
|---|---|---|
| Private | P19/0051 - Zonal Computer Resource Center | 19 |
| Private | P20/0069 - IF Professional Studies | 11 |
| Private | P22/0009 - Don Bosco Vocational Training Centre | 27 |
| Private | P01/0016 - Ceylon German Technical Training Institute | 397 |
| Private | P01/0222 - Roots Hair & Beauty Acadamy | 35 |
| Private | P01/0257 - Win-Stone School of Culinary Art | 194 |
| Private | P01/0295 - Salon Le Coiffeur Thilaque | 17 |
| Private | P01/0430 - AMATT- Academy of Make-up Art and Technology Training | 11 |
| Private | P01/0461 - Lanka Institute of Fitness and Nutrition | 47 |
| Private | P01/0514 - Chalmway International Hair & Beauty Institute | 33 |
| Private | P01/0594 - International Health Care Academy (Pvt) Ltd | 30 |
| Private | P01/0630 - University College of Construction Technology | 2 |
| Private | P01/0651 - Racmo Training Institute | 4 |
| Private | P02/0157 - Kramski Lanka (Pvt) Ltd. | 18 |
| Private | P02/0297 - Kelaniya Zonal Computer Resource Centre | 15 |
| Private | P03/0019 - IQRAA Technical Training Institute | 82 |
| Private | P03/0067 - ASVTC | 4 |
| Private | P03/0076 - Srilak Computer Training School | 20 |
| Private | P04/0094 - one world foundation | 114 |
| Private | P04/0134 - Sri Lanka Bureau of Foreign Employment | 73 |
| Private | P04/0146 - Neo Classic International School of Hair & Beauty Salon | 23 |
| Private | P04/0165 - Mosvold Educational Center | 49 |
| Private | P07/0065 - Nenasala New Lanka Tec | 26 |
| Private | P08/0067 - National Youth Corps | 51 |
| Private | P09/0080 - Ministry of Sports, Youth Affairs, Women, Rural Development | 9 |
| Private | P09/0161 - Maga Neguma Road Construction Equipment Company | 4 |
| Private | P09/0162 - South Asian International Institute of Higher Education | 3 |
| Private | P09/0184 - Zonal Computer Resource Centre - Wattegama | 11 |
| Private | P10/0059 - A.Y.S. Gnanam Construction Training Academy | 13 |
| Private | P12/0113 - Hightec Lanka International - VTTI | 542 |
| Private | P15/0006 - Sri Sobhitha Vocational Training Centre | 58 |
| Private | P15/0039 - Wellassa Development Forum | 67 |
| Private | P18/0025 - Chirplink Computer Training and Business Management Institut | 74 |
| Private | P20/0063 - Vivekananda College of Technology | 29 |

| Institute Type | Institute | Certificates Issued |
|---|---|---|
| Private | P20/0066 - Guide Notion Campus | 48 |
| Private | P21/0007 - Zonal Education Office - Vavuniya South | 18 |
| Private | P21/0035 - Don Bosco Children's Home | 37 |
| Private | P25/0066 - Zonal Education Office | 26 |
| Total - pvt | - | 12192 |
| Total | - | 47017 |

2016 ஆம் ஆண்டில் பயிற்சி நிறுவகங்கள் மூலம் வழங்கப்பட்ட தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்கள் பாலின (ஆண் மற்றும் பெண்) அடிப்படையில் அட்டவணை 8.14.4 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 8.14.4: 2016 ஆம் ஆண்டில் பாலின ரீதியாக (ஆண் மற்றும் பெண்) அச்சடிக்கப்பட்ட தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களின் எண்ணிக்கை

| **நிறுவகம்** | **ஆண்** | **பெண்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் | 2309 | 1116 | 3425 |
| தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை | 6633 | 3336 | 9969 |
| இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | 8985 | 5286 | 14271 |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 531 | 1119 | 1650 |
| இதர அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை | 5216 | 5199 | 10415 |
| **மொத்தம்** | **23674** | **16056** | **39130** |

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை 8.14.5 இல் 2016 ஆம் ஆண்டில் மொத்தமாக அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்ட தேசிய தொழிற் திறன் தகுதி சான்றிதழ்களின் எண்ணிக்கைகள் மற்றும் முன்னைய ஆண்டுகளில அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்ட தேசிய தொழிற் திறன் தகுதி சான்றிதழ்களின் எண்ணிக்கைகள் இடையிலான ஒப்பீடு

அட்டவணை 8.14.5: 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மொத்தமாக அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்ட தேசிய தொழிற் திறன் தகுதி சான்றிதழ்களின் எண்ணிக்கைகள் இடையிலான ஒப்பீடு (சான்றிதழ் அளிப்பு வழிமுறை ரீதியாக - தேர்ச்சிசார் பயிற்சி (CBT) மற்றும் முன் அனுபவத்தினை அங்கீகரித்தல்)

| சான்றிதழ் வகை | 2015 | 2016 | அதிகரிப்பு (சான்றிதழ்களின் எண்ணிக்கை) | அதிகரிப்பு சதவீதம் % |
|---|---|---|---|---|
| தேர்ச்சிசார் பயிற்சி (CBT) | 33 654 | 37 987 | 4333 | 12.875 |
| முன் அனுபவத்தினை அங்கீகரித்தல்(RPL) | 10494 | 9030 | (1464) | -13.950 |
| மொத்தம் | 44148 | 47 017 | 2869 | 6.4985 |

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்




அட்டவணை 8.14.6: 2006 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மொத்தமாக அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை

| ஆண்டு | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சான்றிதழ்களின் எண்ணிக்கை | 259 | 1,629 | 8,915 | 11,249 | 13,256 | 16,572 | 18,111 | 22,855 | 28,546 | 44,148 | 47,017 | 212,557 |

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தேசிய தொழிற் திறன் தகுதி சட்டகமானது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2016 ஆம் ஆண்டு முடிவடையும் போது வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கையானது 212,557 ஆகும்.

வெவ்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு தேசிய தொழிற் திறன் தகைமைகளின் சான்றிதழ்களை சான்றுறுதிப்படுத்தல் 2016 ஆம் ஆண்டில் 164 ஆக காணப்பட்டது.

## 9.0 கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு

### 9.1 பின்னணி

தொழிற்கல்வி மற்றும் தொழிற் பயிற்சி துறையின் முதன்மையான குறிக்கோளாக தொழிலுக்கு பொருத்தமான திறன்களைக் கொண்ட நபர்களை உருவாக்களை குறிப்பிட முடியும். காலத்திற்கு காலம் மாற்றமடையும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான திறன்களை வழங்கக்கூடிய சாய்வளவைக் கொண்ட தொழிற்கல்வி மற்றும் தொழிற் பயிற்சி துறையை பராமரித்தல் அத்தியாவசியமாவதோடு அந்நிலையானது நாடுகளின் பொருளாதார நிலையோடு தொடர்புபட்டிருக்கும். உலகின் ஏனைய அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இந்நிலை காணப்படுவதோடு அதனை கொண்டு நடாத்தும் பிரதான பொறுப்பினை அவ்வவ் நாடுகளின் தொழில்நுட்பக்கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி துறையின் காவல் அரணாக மாறியுள்ள அந்நாடுகளில் நிலவும் தொழிற் துறை மாறியுள்ளது.

எனினும் அண்மைக்காலம் வரை எமது நாட்டில் தொழில்நுட்பக்கல்வி, தொழில்நுட்ப பயிற்சி துறை மற்றும் தொழில் துறையில் அவ்வாறானதொரு பிணைப்பு காணப்படவில்லை. ஆகையால் அவ்வாறான தொழிலின் மூலம் பங்களிப்போ அல்லது வழிகாட்டலோ கிடைக்கப் பெறாத தொழில்நுட்பக்கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி துறையினால் உருவாக்கப்பட்ட மனித உழைப்பானது குறித்த தொழில் துறையில் நிலவும் கேள்விக்கு எந்தளவிற்கு பொருத்தமானதாக இருந்தது என்பது கேள்விக்குரிய ஒரு விடயமாக காணப்படுகின்றது.

இந்நிலையை சரியாக விளங்கிக் கொண்ட மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவானது தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப துறையின் நடவடிக்கைகளுக்காக தொழிற்துறையின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளும் நோக்கோடு “கைத்தொழிற்துறை உறவுகள்” என்ற பெயரில் ஆணைக்குழுவினுள் வேறொரு பிரிவினை 2016 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் நிறுவுவதற்கு அவசியமான செயற்பாடுகளை மேற்கொண்டது. இதன் பொறுப்பினை பணிப்பாளரொருவர் வகிப்பதோடு தற்போது பின்வரும் ஊழியர்களைக் கொண்டுள்ளது.

| | |
|---|---|
| பணிப்பாளர் | - 01 |
| பிரதிப் பணிப்பாளர் (பதில் கடமையாற்றல்) | - 01 |
| உதவிப் பணிப்பாளர் | - 03 |
| அபிவிருத்தி அலுவலர் | - 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | - 01 |

குறித்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வேண்டி திட்டமிட்டு கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவின் பிரதிநிதித்துவத்தோடு துறை மன்றங்கள் நிறுவப்பட்டதோடு அதன் ஆரம்பத்திலிருந்து கடந்த 2016 ஆம் ஆண்டின் இறுதியில் நிறைவேற்றக் கூடியதாகவிருந்த செயற்பாடுகளின் அறிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

## 9.2 கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவின் நோக்கங்கள்

தொழிலுக்கு தேவைப்படுகின்ற திறன்களைக் கொண்ட மனித உழைப்பினை வழங்கக்கூடிய தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்பத்துறையை உருவாக்கல் கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவின் முதன்மையான நோக்காகக் குறிப்பிட முடியும். இந்நோக்கினை அடைந்து கொள்வதற்காக வேண்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ள உப நோக்கங்களை செயற்படுத்துதல் கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவின் பொறுப்பாகக் குறிப்பிட முடியும்.

◊ தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்பக்கல்வி துறையில் பயிற்றுவிப்பதற்காக வேண்டி பயன்படுத்தப்படுகின்ற தேர்ச்சித் திறன்கள் மற்றும் பயிற்சி பாடநெறிகளின் அபிவிருத்திக்காக கைத்தொழிற்றுறையின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளல்.

◊ கைத்தொழிற் துறையில் இடம்பெறுகின்ற தொழில்நுட்பவியல் மாற்றங்கள் மற்றும் புதிய போக்குகள் தொடர்பாக தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்பகல்வி துறையில் பயிற்றுவிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆய்வுக்குழுக்களை அறிவுறுத்தல் மற்றும் அவை தொடர்பான பயிற்சி தேவைப்படின் அவற்றினை வழங்குதல்.

◊ தற்போது வழங்கப்படுகின்ற பயிற்சிக்கும் கைத்தொழிற் துறையின் கேள்விக்கும் இடையே திறன்சார் இடைவெளி காணப்படுகின்றதா என்பதனை ஆராய்ந்து பார்த்தல் மற்றும் அதன் மூலம் இனங்காணப்பட்ட குறைப்பாடுகள் இருப்பின் அவற்றினை தவிர்த்துக் கொள்வதற்கு முயற்சித்தல்.

◊ தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்பக்கல்வி துறையில் பயிற்சி பெறும் பயிலுநர்களுக்காக கைத்தொழிலோடு சம்பந்தப்பட்ட பயிற்சி வழங்குவதனை ஒருங்கிணைத்து அச்செயற்பாட்டிற்கு துணை புரிதல்.

◊ தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்பக்கல்வி துறையில் பயிற்சியை நிறைவு செய்யும் பயிலுநர்களுக்கு கைத்தொழிற்துறையில் நிலவும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக அறிவுறுத்துவதனை ஒருங்கிணைத்து அவர்களுக்கு தொழில்களை தேடிக்கொள்வதற்கு உதவி செய்தல்.

◊ ஒழுங்கான பயிற்சியின்றி கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்காக அவர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் உயர் பதவிகளை அடைய அவர்களை தயார்படுத்தல்.

◊ கைத்தொழிற்துறைகள் மற்றும் அவற்றிலுள்ள தொழில்கள் தொடர்பாக சமூகத்தில் நேர்மறையான பிரதி பிம்பத்தினை ஏற்படுத்தல்.

◊ பாடசாலையிலிருந்து இடைவிலகும் மாணவ மாணவிகளுக்காக தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி தொடர்பாக அறிவுறுத்தி அவர்களை இத்தொழில்நுட்ப பயிற்சி துறையின்பால் ஈர்த்தெடுத்தல்.

## 9.3 தொழிற்பாடுகள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வேண்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவின் மூலம் கடந்த 2016 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டன.

9.3.1 திறன் துறை மன்றங்களை (Sector Skill Council) நிறுவுதல்.

9.3.2 திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சை சார்ந்த அரச துறை பயிற்சி நிறுவகங்களிலுள்ள ஆலோசகர்களின் பயிற்சி தேவைகளை இனங்காண்பதற்கான ஆய்வொன்றினை நடாத்துதல்.

9.3.3 இதுவரை நிறுவப்பட்டுள்ள திறன் துறை மன்றங்களின் பங்களிப்போடு இதுவரை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பாடநெறிகளுக்கான ஆலோசகர்களை விழிப்புணர்வூட்டுவதற்காக செயலமர்வுகளை ஒழுங்குபடுத்தி நடாத்துதல்.

9.3.4 தற்போது நிறுவப்பட்டுள்ள திறன் துறை மன்றங்களோடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளுக்கு மேலதிகமாக அம்மன்றங்களின் மூலம் முன்வைக்கப்படுகின்ற யோசனைகள்/முன்மொழிவுகளுக்காக ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.

9.3.5 மாவட்ட மட்டங்களில் நிறுவப்பட்டுள்ள மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்களினூடாக பாடசாலை கல்வியை நிறைவு செய்கின்ற மாணவ மாணவியர் மற்றும் ஏனைய தேவைப்பாடுடைய குழுக்களுக்கு தொழில் வழிகாட்டல் செய்தல்.

9.3.6 2016 ஆம் ஆண்டில் பயிற்சியை நிறைவு செய்த பயிலுநர்களை கைத்தொழிற்துறைசார் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்கு தேவையான தகவல்களை திறன் துறை மன்றங்களுக்கு வழங்குதல்.

9.3.7 திறன் துறை மன்றங்களின் பணிப்பாளர் சபை கூட்டங்களில் கலந்து கொள்ளல்.

9.3.8 ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடல்.

### 9.3.1 திறன் துறை மன்றங்களை (Sector Skill Council) நிறுவுதல்.

2016 ஆம் ஆண்டின் இறுதிக்குள் கைத்தொழிற்துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக 4 திறன் துறை மன்றங்கள் நிறுவுவதற்கு இலக்கு செய்யப்பட்டது. அதற்கமைவாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 4 திறன் துறை மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன.

- ◊ கட்டுமானக் கைத்தொழிற்துறை திறன் துறை மன்றம்
- ◊ தகவல் தொழில்நுட்பவியல் திறன் துறை மன்றம்
- ◊ உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை திறன் துறை மன்றம்
- ◊ சுற்றுலா கைத்தொழிற்துறை திறன் துறை மன்றம்

இவ்வனைத்து திறன் துறை மன்றங்களும் கம்பனிச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளதோடு அவற்றின் செயற்பாடுகளுக்காக

பணிப்பாளர் சபையானது புறம்பாக நியமிக்கப்பட்டுள்ளது. அனைத்து திறன் துறை மன்றங்களின் மூலம் இனங்காணப்படுகின்ற ஒரு வருட வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுவதற்கு அத்துறை மன்றங்கள் வெவ்வேறாக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை என்பனவற்றோடு கடந்த வருட இறுதியில் உடன்படிக்கைகளுக்கு இணங்கியுள்ளன. மேலும் பல கைத்தொழிற்துறைகளுக்கு துறை மன்றங்கள் நிறுவப்படவுள்ளதோடு அவை அடுத்த வருடத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நான்கு திறன் துறை மன்றங்களுள் சுற்றுலா சார் கைத்தொழிற்துறை திறன் துறை மன்றம் கடந்த வருட இறுதியிலேயே உடன்படிக்கைகளுக்கு எட்டியது. சில நிருவாகப் பிரச்சினைகள் காரணமாக அவ்வுடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு தாமதமானதோடு அக்காரணத்திற்காக நிறுவப்பட்ட ஏனைய 3 திறன் துறை சபைகளை விடவும் இச் சுற்றுலா சார் கைத்தொழிற்துறை சபையின் வளர்ச்சி கொஞ்சம் குறைவாக காணப்படுகின்றது.

### 9.3.2 திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சை சார்ந்த அரச துறை பயிற்சி நிறுவகங்களிலுள்ள ஆலோசகர்களின் பயிற்சி தேவைகளை இனங்காண்பதற்கான ஆய்வொன்றினை நடாத்துதல்.

திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சை சார்ந்த பயிற்றுவிக்கும் திணைக்களங்கள் மற்றும் நிறுவகங்களின் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பயிற்சி ஆலோசகர்கள் அண்மைக்காலத்தில் கைத்தொழிற்துறையில் நிகழ்ந்த தொழில்நுட்பவியல் மாற்றங்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டல் மற்றும் அவை தொடர்பான பரந்த அறிவினை அவர்களுக்கு வழங்குவதனூடாக நிறுவகங்களில் இடம்பெறுகின்ற பயிற்சி நடவடிக்கைகளின் பண்புத்தரத்தினையும் விளைதிறனையும் மேம்படுத்த முடியும் என்பது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் நம்பிக்கையாகும். இச்செயற்பாட்டிற்காக குறித்த நிறுவகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆலோசகர்களின் தகவல்களைப் பெற்று தகவல் வங்கியொன்றினை நடாத்துவதற்கு தேவையான ஆய்வொன்றினை ஆணைக்குழுவின் கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவின் மூலம் 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடாத்தப்பட்டது. இவ்வாய்விற்குரிய முதன்மை நோக்கம் கீழே வழங்கப்பட்டுள்ளது.

- ◊ மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு இணைவாக செயற்படுகின்ற ஆலோசகர்களின் தகவல்களை ஒன்றுதிரட்டுதல்.
- ◊ அத்தகவல்கள் தொடர்பாக தகவல் வங்கியொன்றினை நடாத்துதல்.
- ◊ ஒவ்வொரு கைத்தொழிற்துறை தொடர்பான தொழிற் பயிற்சி அவசியப்படும் விசேட துறைகள் இருப்பின் அவற்றினை இனங்காணல்.
- ◊ குறித்த திறன் துறை மன்றங்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை பரிந்துரை செய்தல்.
- ◊ ஆலோசகர்களின் விசேட பயிற்சி தேவைகளை திறன் துறை மன்றங்களுக்கு வழங்குதல்.
- ◊ திறன் துறை மன்றங்களின் மூலம் ஒழுங்குபடுத்தி நடாத்தப்படுகின்ற கைத்தொழிற்துறை பயிற்சி தேவைப்பாட்டு செயலமர்வுகளை மேற்பார்வை செய்தல்.

இதற்காக தயார் செய்யப்பட்ட விசேட வினாக்கொத்தின் மாதிரி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் | - தொழிநுட்பக் கல்லூரி | 39 |
| தொழிற் பயிற்சி அதிகாரசபை | - மாவட்ட அலுவலகம் | 25 |
| தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை | - மாவட்ட அலுவலகம் | 29 |
| தேசிய இளைஞர் மன்றம் | - மாவட்ட நிலையம் | 34 |
| இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் | - பயிற்சி நிலையம் | 02 |
| மொத்தம் | | 129 |

இது சம்பந்தமாக குறித்த நிறுவகங்களின் பயிற்சி நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பணிப்பாளர்கள் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக அறிவிக்கப்பட்ட 129 நிறுவகங்களுள் 87 நிறுவகங்கள் மாத்திரமே பதில் வழங்கியதோடு அதன் சதவிகிதமானது 67.44% ஆகும். பதில் வழங்காத எண்ணிக்கையின் சதவிகிதமானது 32.56% ஆகும். கூடுதலாக பதில் வழங்கியுள்ள நிறுவகம் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களமாவதோடு அதன் சதவிகிதம் 89.74% ஆவதோடு குறைவாக மறுமொழி வழங்கியுள்ள நிறுவகம் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனமாவதோடு அதன் சதவிகிதம் 50% ஆகும். அவற்றுள் சில ஆலோசகர்கள் முக்கியமான தகவல்களுக்கான தரவுகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. பதில் வழங்கியுள்ள 1096 ஆலோசகர்களுள் 746 பேர் ஆண்களாகவும் (68%) எஞ்சிய 350 பேர் (32%) பெண்களாவர். அதிகமான ஆலோசகர்கள் இருப்பது இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையிலாகும். இவ்ஆலோசகர்களுள் கூடுதலான எண்ணிக்கையிலானவர்கள் 30 - 49 வரையான வயதுக் குழுவினை சார்ந்தவர்களாவர். அதிகமான ஆலோசகர்கள் கொழும்பு மாவட்டத்தில் கடமையாற்றுவதோடு அவ்வெண்ணிக்கை 112 ஆகும். அடுத்ததாக கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் வரிசைக்கிரமமாக 78 மற்றும் 70 ஆக உள்ளனர். இவ்ஆலோசகர்களுள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்ட 35 பேர் காணப்படுவதோடு 94 பேருக்கு 20 வருடங்களிற்கு மேற்பட்ட கைத்தொழில் அனுபவம் காணப்படுகின்றது.

இவ்ஆலோசகர்கள் 73 தொழில் துறைகளின் பயிற்றுவிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இப்பாடநெறிகளுள் அவை திறன் துறை மன்றங்களாக பிரிந்து சென்றுள்ள விதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை | 261 |
| தகவல் தொழிநுட்பவியல் | 216 |
| கட்டுமானத்துறை | 214 |
| மோட்டார் வாகனங்கள் செப்பனிடுதல் | 177 |
| ஆடை மற்றும் தைத்த ஆடைகள் | 67 |
| சுற்றுலா | 53 |
| உற்பத்தி மற்றும் வடிவமைப்பு | 48 |
| நிதி மற்றும் வியாபார முகாமைத்துவம் | 45 |
| ஆலோசனைஇ சுகாதாரக்கல்வி | 39 |
| உணவு உற்பத்தி | 29 |

இவ்வாய்வின் மூலம் தெளிவான ஒரு விடயம் யாதெனில் கூடுதலான ஆலோசகர்கள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பவியல் துறையில் கைத்தொழிற்துறை பயிற்சியை வழங்கும் பொருட்டு ஈடுபட்டுள்ளதோடு அதன் எண்ணிக்கை 130 ஆக உள்ளது. ஆங்கில மொழியில் பயிற்சி அவசியம் என்பது அவர்களது கருத்தாகையால் அதில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 34 ஆகும்.

### 9.3.3 விழிப்புணர்வூட்டல் செயலமர்வுகளை நடாத்துதல்.

திறன் துறை மன்றங்களின் பங்களிப்போடு தேசிய தொழிற் தகைமை சட்டகத்தில் 2 ஆம் மற்றும் 3 ஆம் மட்டங்களுக்கான சில குறுங்காலப் பாடநெறிகள் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுள் 8 பாடநெறிகளுக்கான 11 செயலமர்வுகள் கடந்த ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கீழ் குறிப்பிடப்பட்டவாறு நடாத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பயிலுநர்களுக்கான தகவல் தொழில்நுட்பவியல் | - செயலமர்வு 03 |
| அடிப்படை குழாய் நீர் தொழில் திறமை | - செயலமர்வு 02 |
| தச்சுத் தொழில் (கட்டடம்) | - செயலமர்வு 01 |
| சக்கர சீரமைப்பு தொழில்நுட்பம் | - செயலமர்வு 01 |
| டிராக்டர் வண்டி இயக்குநர் | - செயலமர்வு 01 |
| அறுவடை இயந்திர இயக்குநர் | - செயலமர்வு 01 |
| உடல் நல பராமரிப்பு தொழிலாளர் | - செயலமர்வு 01 |
| காய்ச்சி இணைக்கும் கைவினைஞர் | - செயலமர்வு 01 |
| மொத்தம் | 11 |

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் மன்றம் மற்றும் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் என்பவற்றை சேர்ந்த 250 ஆலோசகர்கள் இச்செயலமர்வில் கலந்து கொண்டுள்ளனர். "பயிலுநர்களுக்கான தகவல் தொழில்நுட்பவியல்" இற்கு சார்பாக நடாத்தப்பட்ட 03 செயலமர்வுகளுள் ஒரு செயலமர்வானது கைத்தொழில் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சிற்குட்பட்ட "விதாதா" வள நிலையங்களில் பயிற்றுவிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆலோசகர்களுக்காக நடாத்தப்பட்டது. இச்செயலமர்வானது அவ்வமைச்சினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய நடாத்தப்பட்டது.

### 9.3.4 தற்போது நிறுவப்பட்டுள்ள திறன் துறை மன்றங்களோடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளுக்கு மேலதிகமாக அம்மன்றங்களின் மூலம் முன்வைக்கப்படுகின்ற யோசனைகள்/முன்மொழிவுகளுக்காக ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.

தற்போது நிறுவப்பட்டுள்ள திறன் துறை மன்றங்களோடு உடன்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக விசேடமான வேலைத்திட்டங்களுக்கான முன்மொழிவுகள் கடந்த காலத்தினுள் 8 கோரிக்கைகள் கைத்தொழிற்துறை உறவுகள் துறைக்கு குறித்த திறன் மன்றங்களின் மூலம் கடந்த சில மாதங்களினுள் முன்வைக்கப்பட்டுள்ளது.

#### 9.3.4.1 கட்டுமானக் கைத்தொழிற்துறை திறன் துறை மன்றம்

தற்போது பாவனையிலுள்ள இத்துறைக்கான தொழில்களுக்கு தொடர்பான தேசிய தேர்ச்சித் திறன்கள், பாடநெறி மற்றும் 25 மதிப்பீட்டு வளத் தொகுதிகளை விசாரணை செய்தல்.

#### 9.3.4.2 உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை திறன் துறை மன்றம்

முன்மொழிவுகள் 04 ஆகும்.

◊ 'டிராக்டர் வண்டி மற்றும் அறுவடை இயந்திர இயக்குநர்' என்ற பாடநெறியை ஒழுங்குபடுத்தல், குறித்த தொழில்சார் கையேட்டினை தயாரித்தல், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் இயக்கநர்களை பயிற்றுவித்தல் மற்றும் ஊக்குவித்தல்.

◊ காய்ச்சி இணைக்கும் கைவினைஞர் பாடநெறியி விசாரணை, தொழிற் சந்தை விசாரணை, தொழில்சார் கையேட்டினை தயாரித்தல், பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல்.

◊ மின் தொழில்நுட்பவியலாளர்/கைத்தொழிற்துறை தொடரினை பகுப்பாய்வு செய்தல்இ கையேட்டினை தயாரித்தல் மற்றும் இத்தொழில் தொடர்பான குறுங்கால பாடநெறியினை தயாரித்தல்.

◊ இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் உப துறைகளில் நிலவும் திறன்கள் இடைவெளியினை தேடல் மற்றும் திறன் துறை மன்றத்திற்குரிய இணையத்தளத்தினை நிர்மாணித்தல்.

#### 9.3.4.3 தகவல் தொழில்நுட்பவியல் திறன் துறை மன்றம்

முன்மொழிவுகள் 03 ஆகும்.

◊ குறித்த பாடநெறியினை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான துறைசார் அறிவினை வழங்கள், இணையத்தள பக்க நிர்மாணம் மற்றும் புகைப்படக் கருவியொன்றினை கொள்வனவு செய்தல்

◊ அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல்

◊ தேசிய தொழிற் திறன் தகுதி மட்டம் 3 மற்றும் 4 இற்கான தேர்ச்சித் திறன்கள் மற்றும் பாடநெறிகளை அபிவிருத்தி செய்தல்

இம்முன்மொழிவுகளை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின் அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான வசதி வாய்ப்புக்கள் கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவின் மூலம் வழங்கப்பட்டன.

### 9.3.5 மாவட்ட மட்டங்களில் நிறுவப்பட்டுள்ள மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்களினூடாக பாடசாலை கல்வியை நிறைவு செய்கின்ற மாணவ மாணவியர் மற்றும் ஏனைய தேவைப்பாடுடைய குழுக்களுக்கு தொழில் வழிகாட்டல் செய்தல்.

இதுவரை எமது அமைச்சிற்குட்பட்ட பயிற்சி நிறுவகங்களின் நிலையங்களுடாக வெவ்வேறாக நடாத்தப்பட்ட தொழில் வழிகாட்டற் சேவைகளுக்கு பதிலாக மாவட்டத்திற்குள் அப்பயிற்சி நிறுவகங்கள் பிரதிநிதித்துவப்படும்படி பொது மாவட்ட தொழில் வழிகாட்டல் நிலையம் ஒன்றினை நிறுவி அதன் மூலம் இத்தொழில் வழிகாட்டற் சேவையின் விளைதிறன் மற்றும் பயனுறுதியினை மேம்படுத்துவதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் 2016

ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. இதனூடாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

◊ தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் திறன் அபிவிருத்தி உதவியாளர்களுக்காக தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளில் நிலவும் புதிய போக்குகள் தொடர்பாக மாகாண மட்டத்தில் 4 செயலமர்வுகளை நடாத்தியமை

◊ ஹோமாகமை பிடிபன மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவ மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோருக்கு தொழில் வழிகாட்டல் செயலமர்வினை நடாத்தியமை

◊ க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவ மாணவிகளுக்கு நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளுக்கு அவசியமான நடவடிக்கைகளையும் வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்தியமை

### 9.3.6 2016 ஆம் ஆண்டில் பயிற்சியை நிறைவு செய்த பயிலுநர்களை கைத்தொழிற்துறைசார் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்கு தேவையான தகவல்களை திறன் துறை மன்றங்களுக்கு வழங்குதல்.

எமது அமைச்சுக்கு உட்பட்ட பயிற்சி நிறுவகங்களில் 2016 ஆம் ஆண்டு இறுதியில் நிறுவக பயிற்சியினை நிறைவு செய்யும் பயிலுநர்களின் தகவல்களை அந்நிறுவகங்களிலிருந்து பெற்றுக் கொண்டதன் பின் அவர்களுக்குத் தேவையான கைத்தொழிற் பயிற்சியினை வழங்குவதற்கு அத்தகவல்களை 2016.12.05 ஆந் திகதி இடம்பெற்ற திறன் துறை மன்றங்களின் பணிப்பாளர்களின் கூட்டத்தில் அப்பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இதற்கமைவாக தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் மன்றம் என்பவற்றிற்குட்பட்ட பயிற்சி நிறுவகங்களில் இடம்பெற்ற 65 பாடநெறிகளில் கலந்து கொண்ட பயிலுநர்கள் 14231 பேருக்கு தொடர்புபடும் தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவ்வவ் திறன் துறை மன்றங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

கட்டுமானத் கைத்தொழில் திறன் துறை மன்றம் - 8 பாடநெறிகளுக்கான 3069 பயிலுநர்கள்

உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை திறன் துறை மன்றம் - 18 பாடநெறிகளுக்கான 4825 பயிலுநர்கள்

தகவல் தொழிநுட்பவியல் துறை திறன் துறை மன்றம் - 07 பாடநெறிகளுக்கான 6337 பயிலுநர்கள்

சுற்றுலா துறை திறன் துறை மன்றம் - 01 பாடநெறிக்கான 154* பயிலுநர்கள்

வேறு துறை திறன் துறை மன்றம் - 31 பாடநெறிகளுக்கான 5537* பயிலுநர்கள்

* இதன் விபரங்கள் தற்போது வழங்க முடியாதுள்ளதோடு அதனை மிக விரைவில் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது.

### 9.3.7 திறன் துறை மன்றங்களின் பணிப்பாளர் சபை கூட்டங்களில் கலந்து கொள்ளல்.

திறன் துறை மன்றங்களின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் என்ற வகையில் கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு எமது பிரிவின் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கமைவாக குறித்த அலுவலர்கள் கடந்த வருட இறுதியில் இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டங்களில் கலந்து கொண்டவர்களது விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளது.

9.3.7.1 சுனில் கபுகே அவர்கள் (பணிப்பாளர், கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு)
- கட்டுமான கைத்தொழிற்துறை திறன் துறை
சபை, பணிப்பாளர் சபை அங்கத்தவராக 3 கூட்டங்களில் பங்குபற்றியுள்ளார்.

9.3.7.2 கே.ஏ.டீ.ஹசன்தி லக்மினி அவர்கள் (உதவி பணிப்பாளர், கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு)- தகவல் தொழில்நுட்பவியல் துறை திறன் துறை
சபை கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவின் அங்கத்தவராக 3 கூட்டங்களில் பங்குபற்றியுள்ளார்.

9.3.7.3 ஏ.எச்.என்.சதமாலி அவர்கள் (அபிவிருத்தி அலுவலர், கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு)
துறை, கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவின் 3 கூட்டங்களில் பங்குபற்றியுள்ளார்.

9.3.7.4 சுனில் கபுகே அவர்கள் (பணிப்பாளர், கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு)
- சுற்றுலாத்துறை திறன் துறை மன்றம்,
அங்கத்தவராக 2 கூட்டங்களில் பங்குபற்றியுள்ளார்.

9.3.7.5 வசன்த மந்திரிபால அவர்கள் (உதவி பணிப்பாளர், கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு)
- சுற்றுலாத்துறை திறன் துறை மன்றம்
கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருப்பினும் அதன் பிறகு எதுவித கூட்டமும் இடம்பெறவில்லை.

### 9.4 பங்குபற்றிய மேலதிக செயற்பாடுகள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகளுக்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக செயற்பாடுகளை கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவினால் 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

### 9.4.1 திறன் துறை மன்றங்களின் பணிப்பாளர்களின் கூட்டங்களை நடாத்துதல்.

திறன் துறை மன்றங்களோடு இணைந்து செயல்களை திட்டமிடுதல், அவை சம்பந்தாக உருவாகும் பிரச்சினைகளை கலந்துரையாடல் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை தேடும் நோக்குடன் அச்சபைகளின் அலுவலர்களுடன் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இக்கூட்டங்கள் மூன்றாம் நிலைக்கல்விஇ தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஜீவ் விஜேசிங்க அவர்களின் தலைமையில் இடம்பெறுவதோடு ஒவ்வொரு மாதத்தின் 1 ஆவது திங்கட்கிழமை கூட்டம் இடம்பெறுவதோடு தேவைப்பாடுகளுக்கு இணங்க இக்கூட்டமானது அமைச்சின் செயலாளர் அலுவலகத்தின் மாநாட்டு அறையிலோ அல்லது ஆணைக்குழுவின்

மாநாட்டு அறையிலோ இடம்பெறும். அதற்காக கீழுள்ள அலுவலர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

◊ அமைச்சின் செயலாளர் (அவசியப்படின்)
◊ மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தலைவர்
◊ நிறுவப்பட்ட அனைத்து திறன் துறை மன்றங்களின் தலைவர், செயலாளர் மற்றும் அத்துறை மன்றங்களின் முகாமையாளர்கள்
◊ திறன் துறை அபிவிருத்தி திட்டங்களின் மேலதிக செயலாளர் மற்றும் உதவி வேலைத்திட்ட முகாமையாளர்கள்
◊ ஆணைக்குழுவின் கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவின் பணிப்பாளர் உட்பட தேவைப்பாட்டிற்கிணங்க அலுவலக உத்தியோகத்தர்கள்
◊ தேவைப்பாட்டிற்கு அமைய வேறு பயிற்சி நிறுவகங்களின் அலுவலர்கள்

கடந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் இவ்வாறான கூட்டங்கள் இடம்பெற்றன. தொழிற் பயிற்சி நடவடிக்கைகளுக்காக கைத்தொழிற்துறையில் பங்களிப்பினை ஏற்படுத்தியுள்ள திறன் துறை மன்றங்களின் ஊடாக பெற்றுக் கொள்ளல் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட புது செயற்பாடாகவுள்ள அதேவேளை அது தொடர்பாக காணப்பட்ட அனுபவம் மற்றும் புரிந்துணர்வு ஆரம்பத்தில் அந்தளவிற்கு காணப்படவில்லை. அவ்வாறானதொரு சூழ்நிலையில் இச்செயற்பாடுகளின் பயனுறுதியையும் விளைதிறனையும் அதிகரித்துக் கொள்வதற்கு இக்கூட்டத் தொடர் மிகவும் துணை புரிந்தது.

### 9.4.2 தொழிற் சந்தையில் பங்குபற்றல்

இளைஞர் படையின் மூலம் தீவின் பல்வேறு பிரதேசங்களில் அந்நிறுவகத்திற்கு கீழுள்ள சிறிய மற்றும் நடுத்தர மட்டத்திலான வியாபாரிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் நபர்களின் பிரச்சினைகளை இனங்காணவும் அப்பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்கவும் அவர்களுக்கு வழிகாட்டும் நோக்குடன் களுத்துரை மற்றும் சிலாபம் போன்ற நகர்களில் இடம்பெற்ற தொழில் சந்தைகளுக்கு எமது துறையானது இரண்டு முறை பங்கு கொண்டுள்ளது. இப்பங்குபற்றலானது அந்நிறுவகத்தால் முன்வைக்கப்பட்ட எழுத்து மூல வேண்டுகோளுக்கிணங்க முன்வைக்கப்பட்டது. இதில் பங்குபற்றியவர்களுக்கு எமது தேசிய தொழிற் தகைமைகள் முறைமையினை பற்றி தெளிவானதொரு கருத்து காணப்படாத அதேவேளை அம்முறையின் கீழ் வெவ்வேறு துறைகளை சார்ந்த சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளும் முறை தொடர்பாக குறிப்பிடக் கூடிய அளவு தெளிவு காணப்படவில்லை. இச்சந்தர்ப்பத்தில் அக்குறைபாடுகளை நிவர்த்திக்க முடிந்தது.

### 9.4.3 “TVET செய்தி” இதழின் தொகுப்பாளர் சபையினுள் செயற்படல்

இதுவரை எமது ஆணைக்குழுவின் தகவல்கள் மற்றும் குறித்த இலக்குக் குழுக்களை நோக்கி கொண்டு செல்வதற்காக கருவியாக பயன்படுத்தப்பட்டது எமது ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இதழாகும் (TVET இதழ்). அது முற்றாக எமது ஆணைக்குழுவின் செய்திகளை மாத்திரம் கொண்டமைந்திருந்தது.

இந்நோக்கிற்கு அப்பால் இவ்விதழானது அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையை உள்ளடக்க வேண்டும் என்பது எமது ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் ரஜீவ் விஜேசிங்க அவர்களின் எண்ணக்கருவிற்கிணங்க இவ்விதழானது “TVET

செய்தி" என்ற புதிய பெயரோடு வெளியிடப்பட்டது. இவ்விதழின் தொகுப்பாசிரியர் சபையை பிரதிநிதித்துவப்படுத்தி கைத்தொழிற்துறை உறவுகள் துறையின் பணிப்பாளர் மற்றும் பதில் கடமையாற்றும் பிரதி பணிப்பாளர்கள் கடமையாற்றினர்.

### 9.4.4 பாகிஸ்தான் நாட்டின் பயிற்றுவிப்பாளர்கள் குழுவினை பயிற்றுவித்தல்

எமது நாட்டில் தேசிய தொழிற் தகைமைகள் முறைமைகள் நடைமுறைப்படுத்தும் முறையினை பற்றி ஆராயும் நோக்குடன் பாகிஸ்தானிலிருந்து அங்கு தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையில் ஈடுபட்டுள்ள உயர் மட்ட அதிகாரிகளை உள்ளடக்கிய 2 குழுக்கள் கடந்த வருடம் எமது நாட்டிற்கு வருகை தந்ததோடு எமது துறையினால் நிறைவேற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களை விழிப்புணர்வூட்டுவதற்காக வேண்டி இவ்விரண்டு சந்தர்ப்பத்திலும் எமது துறையி-னால் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 9.4.5 சுற்றுலாக் கைத்தொழில் திறன் துறை மன்றங்களுக்கு அதிகாரிகளை நியமித்தல்

மேற்குறிப்பிடப்பட்ட திறன் துறை மன்றங்களுக்கு முகாமையாளர்கள் மற்றும் நிருவாக உதவியா-ளர் பதவிகளுக்கு பொருத்தமானவர்களை தெரிவு செய்வதற்காக வேண்டி நடைபெற்ற நேர்முகப் பரீட்சையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அத்திறன் துறை மன்றங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் எமது பிரிவின் அதிகாரியொருவர் கலந்து கொண்டார்.

## 10.0 தகவல் முறைமைகள் பிரிவு

எந்தவொரு நிறுவகத்தினதும் அபிவிருத்திக்காக எடுக்கப்படும் மூலோபாய தீர்மானங்களுக்கு மிக முக்கியமான காரணியாக அமைவது யாதெனில் தகவல் வளமாகும். அத்தகவல் வளம் ஒவ்வொரு தேவையான நபர்களுக்கும் மற்றும் நிறுவகங்களுக்கும் தேவைக்கேற்ற வகையில் வழங்குதல் மற்றும் பெற்றுக்கொள்ளல் அபிவிருத்திக்கான மிக முக்கியமான காரணியாகும். நவீன தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி வழங்கப்படும் தகவல் சேவை கடினமானதும் சிக்கற் தன்மையான காரியமாகுவதுடன் அத்தகவல்களை பெற்றுக்கொள்ளலானது தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி இலகுவாக மேற்கொள்ளப்பட முடியும். மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவினால் பல்வேறுபட்ட தரவுகள் சேகரிக்கப்பட்டு தேவைக்கேற்ற வகையில் ஒழுங்குபடுத்தி அத்தகவல்களை உரியவர்களுக்கு வழங்கும் பணியா-னது செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இப் பணியை நிறைவேற்றுவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதுடன், அதனூடாக தகவல்களை மிக சுலபமாக பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும் முடியும். தகவல்களை ஒட்டு மொத்தமாக கணனியில் பதிவேற்றம் செய்வதன் மூலம் நிறுவகத்தின் அபிவிருத்தியை எட்டுவதற்கு இயலும். மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமை-கள் பிரிவானது அத்தியாவசிய தகவல் சேவைகளை முறையாக வழங்குவதன் பொருட்டு, நவீன தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி அத்தகவல்களை நிறுவகத்தின் முன்னேற்றத்திற்காக வெற்றிகரமாக பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறையில் வழங்கிவருவதுடன் நிறுவகத்தின் வளர்ச்சிக்காக எடுக்கப்படும் மூலோபாயங்கள் மற்றும் உரிய திட்டமிடல்கள் என்பனபவற்றுக்காக நாளாந்தம் துரிதமாக அதிகரித்து வரும் தகவல்களை தரவுத் தளத்தின் ஊடாக வழங்கியும் வருகின்றது.

### தகவல் முறைமைகள் பிரிவின் பிரதான குறிக்கோள்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்காகவும் மற்றும் இலகுபடுத்துவதற்காகவும் அவசியமான தகவல் முறைமையினை அபிவிருத்தி செய்தல், ஸ்தாபித்தல் மற்றும் பேணுதல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. இச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அவசியமான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தகவல் முறைமைகள் பிரிவில் 09 அலுவலர்கள் உள்ளனர். இப் பிரிவில் பணிப்பாளர் ஒருவர், பிரதி பணிப்பாளர் (தகவல் சேவை), பதில் பிரதி பணிப்பாளர் (தொழிலாளர் சந்தை பகுப்பாய்வாளர்), பதில் பிரதி பணிப்பாளர் (தகவல் முறைமை), உதவி பணிப்பாளர்கள் இருவர், நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர், கணனி வன்பொருள் கைவினைஞர் ஒருவர் ஆகியோர் 2016 ஆம் ஆண்டில் உள்ளடங்குகின்றனர்.

தகவல் முறைமைகள் பிரிவின் பிரதான செயற்பாடுகள் மற்றும் வேலைத்திட்டங்கள் கீழே தரப்படுகின்றன.

◊ தேவைக்கேற்ப தொழிற்சந்தை தகவல்களை பகுப்பாய்வு செய்து வழங்கல்.

◊ எதிர்வரும் வருடத்திற்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டியினை (TVET Guide) வெளியீடு செய்வதல் மற்றும் தேவையான தகவல் முறைமையொ-னறினை பேணுதல்.

◊ UNEVOC பிராந்திய மத்திய நிலையத்தினை நடாத்திச் செல்லுதல் மற்றும் அதன்

பணிகளையும் வேலைத்திட்டங்களையும் தொடர்ச்சியாக செயற்படுத்துதல்.

◊ தொழிற் சந்தை தகவல் முறைமை மற்றும் இணையத் தள பக்கத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்.

◊ தொழிற் சந்தை தகவல்களை சேகரித்தல் மற்றும் வெளியிடுதல்.

◊ மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தொழிற்சந்தை தகவல் தொடர்பான பருவ வெளியீட்டினை (Newsletter) தயாரித்தல் மற்றும் பிரசுரித்தல்.

◊ மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்காக கணனி முறைமையினை நிர்மாணித்தல் மற்றும் அதனை பேணுதல்.

◊ மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்றும் பதிவுசெய்யப்பட வேண்டியுள்ள நிறுவகங்களுக்கான வசதிகளை திட்டமிடுவதற்கு அவசியமான கணனி மென்பொருளினை தயாரித்தல் மற்றும் அவ் வேலையினை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு அவசியமான தகவல்களை அந் நிறுவகங்களுக்கு வழங்குதல்.

◊ எமது நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சேவைகள் தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு தேவையான இணையத் தளத்தினை அபிவிருத்தி செய்தல், பேணுதல் மற்றும் இணையத்தளத்தினை நாளாதுவரையாக்குதல்.

◊ தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) சான்றிதழ்களை அச்சிடுவதற்கு தேவையான கணனி மென்பொருட்களை பேணுதல், தேவையான தரவுகளை பதிவேற்றம் செய்வதற்காக ஏனைய பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்களுக்கு ஆலோசனைகள் வழங்கல் மற்றும் அத்தரவுகளை முகாமைத்துவம் செய்தல்.

◊ திறன்கள் துறை அபிவிருத்தி திட்ட (SSDP) வேலைத்திட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுவரும் முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) தொடர்பாக ஓர் இணைப்பாளராக செயற்பட்டு மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு அவசியமான தகவல்களை வழங்குதல்.

◊ மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிலுள்ள ஒவ்வொரு பிரிவிற்கும் அவசியமான கணனி இயந்திரங்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக உள்ள தேவைகளை அடையாளம் காணல் மற்றும் அதற்கு தேவையான விபரக் குறிப்பினை வழங்குதல் மற்றும் தேவையான தொழில்நுட்பவியல் ஆலோசனைகளை வழங்கல்.

◊ இவ்வாணைக்குழுவில் கணனி வலையமைப்பினை ஒழுங்குசெய்தல், இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் வசதிகளை ஏற்படுத்தல், இவற்றுக்கு அவசியமான சேவர்களை (Servers) ஒழுங்கான முறையில் பராமரித்தல் மற்றும் அவற்றுக்கான வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் ஆகியவற்றினை நாளாதுவரையாக்கல்.

◊ ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கு வாசிகசாலை சேவை மற்றும் தொடர்பான தகவல் வசதிகளை வழங்கல் மற்றும் வாசிகசாலையை கொண்டு நடாத்துதல்.

◊ இவற்றுள் அவசியப்படின் தேவையான விதத்தில் தொழிற் சந்தை தகவல்களை பகுத்தாராய்ந்து வழங்கல் பிரதானமாகின்றது.

◊ ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு அவசியமான கணனி சித்திரங்களை உருவாக்குதல்.

இப்பிரிவின் பிரதான தகவல் முறைமைகளானது தொழிற் சந்தை தகவல் முறைமை, தேசிய தொழிற்திறன் தகைமை அளிப்பு முறைமை மற்றும் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி முறைமை மற்றும் பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல், பாடநெறிகளிற்கு தராதர அங்கீகாரம் அளித்தல் தொடர்பான தகவல் முறைமை என்ற முறைமைகளை உள்ளடக்கியுள்ளது. 2016 ஆம் ஆண்டில் தகவல் முறைமைகள் பிரிவிற்கு பின்வரும் பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.

## 10.1 தொழிற்சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்

இலங்கையின் நடப்பு தொழிற் கேள்விகள்/கிராக்கிகள் மற்றும் ஏனைய தொழிற் சந்தைத் தகவல்களை வழங்குதல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு தொழிற் சந்தை தகவல் முறைமையொன்று மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தரவு ஆய்வு மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களை தொழிற்சந்தைத் துறைசார் கொள்கை வகுப்பாளர்கள், தொழில் வழிகாட்டுநர்கள், தொழில்சார் வேலைவாய்ப்பு நிறுவகங்கள், பயிற்றுவிப்பாளர்கள், தொழில் தருநர்கள் மற்றும் தொழில் தேடுநர்கள் ஆகியோரிற்கு பயனுறும் விதமாக பிரசுர வடிவில் வெளியிடப்பட்டு வருகின்றது.

இத் தொழிற்சந்தை தகவல்களை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் வெளியீடு செய்யப்படும் தொழிற்சந்தை தகவல்களை பருவ வெளியீடுகள் (LMI Bulletin) மூலமும் மற்றும் ஆணைக்குழுவின் இணைய தளத்தின் பக்கம் www.tvec.gov.lk/lmi மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

## 10.2 தொழிற்சந்தை தகவல் பருவெளியீட்டை தொகுத்தல் மற்றும் பிரசுரித்தல்

2016 ஆம் ஆண்டில் இரண்டு (02) தொழிற்சந்தை பருவவெளியீடுகளை பிரசுரிப்பதற்கு இப்பிரிவுக்கு இயலுமாயிருந்தது. இப்பிரசுரங்களின் மூலம் 2015 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டிற்கான மற்றும் 2016 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான இலங்கையின் தொழிற்சந்தையில் நில-விய நிலைவரங்கள் மிகவும் துல்லியமாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

தொழிற்சந்தைத் தகவல் பருவ வெளியீடு பின்வரும் ஐந்து (05) பாகங்களை கொண்டுள்ளது.

1. தொழிலுக்காக நிலவுகின்ற கேள்விகள்
2. தொழில் வாய்ப்புகள்
3. தொழில் வாய்ப்பின்மைகள்
4. தொழிற் சந்தை வழங்கல்கள் அல்லது பல்வேறுபட்ட தொழில்கள் தொடர்பாக நிலவும் தொழிலாளர்களின் வழங்கல்கள்
5. தொழிற் சந்தை தொடர்பாக நிலவும் கேள்விகள் மற்றும் ஆராய்ச்சித் தகவல்கள்

2016 ஆம் ஆண்டில் தொழிற்சந்தை தகவல் பிரசுரத்தின் தரத்தை விருத்தி செய்வதற்கு பற்பல செயற்பாடுகளை இப்பிரிவு மேற்கொண்டது.

அதற்கமைய, தொழிற் சந்தைத் தகவல் பிரசுரத்தினை ஒரு புதிய பரிணாமத்துடன் தொழிற் சந்தை தொடர்பாக நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள், தொழிற் படை தொடர்பான தகவல்கள் என்பவற்றை

தொழிற் சந்தையின் போக்குகள் தொடர்பான விசேடமான ஆர்வமுடையோருக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் வண்ணம் இப்பிரசுரத்தில் வெளியீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழிற்சந்தை தகவல் பிரசுரத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ரீதியில் தொழில்களுக்கான கேள்விகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ரீதியிலான புதினப் பத்திரிகை விளம்பரங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறுபட்ட கைத்தொழிற் துறைசார் வேலைவாய்ப்புக்கள், தொழிலுக்கு அமர்த்துதல்கள், கல்வித் தகைமைகள், பால், அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டு வரையான ஒவ்வொரு வருடத்திலும் சிலுமின மற்றும் சண்டே ஒப்சேர்வர் பத்திரிகைகளிலும் மற்றும் அரச வர்த்தமானி அறிவித்தல்களிலும் வெளியிடப்பட்டுள்ள விளம்பரங்கள் ஆய்வு செய்யப்பட்டு அவ் விளம்பரங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் அட்டவணை 8.1 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 8.1: வெளியிடப்பட்டுள்ள தொழில் வெற்றிடங்கள் தொடர்பான விளம்பரங்களின் எண்ணிக்கை

| வருடம் | நிலவிய தொழில் வெற்றிட விளம்பரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2006 | 104839 |
| 2007 | 113060 |
| 2008 | 116157 |
| 2009 | 82167 |
| 2010 | 124741 |
| 2011 | 108193 |
| 2012 | 136994 |
| 2013 | 107698 |
| 2014 | 91430 |
| 2015 | 81369 |

குறிப்பு: அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட வேலைவாய்ப்புக்கள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தொழில்கள் தொடர்பாக நிலவிய கேள்விகள் பற்றிய விளம்பரங்கள் கீழே தரப்பட்டுள்ள நேர்கோட்டு வரைபில் காட்டப்பட்டுள்ளது.



செய்தித் தாள் வியம்பரங்களின் மூலம் விபரிக்கப்பட்டுள்ள தொழில் பற்றாக்குறை மட்டத்தினை மேலும் வெற்றிகரமாக்கும் பொருட்டு மின்னஞ்சல் மற்றும் வலைத்தளங்களின் தகவல்கள் கருத்தில் கொள்ளப்பட்டன.

## 10.3 தொழிற் சந்தைத் தகவல்கள் இணையப் பக்கம்

வினைத்திறனானதும் உற்பத்தித் திறன் மிக்கதானதுமான தொழிற் சந்தைத் தகவல் சேவையினை நாளதுவரையாக்கி பாவனையாளர்களுக்கு வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டு இவ் இணையத் தளமானது 2016 ஆம் ஆண்டில் நாளாதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. 2016 ஆம் ஆண்டில் இத்தகவல்கள் இடைத்தொடர்புடைய வரைபுகளாகவும் மற்றும் அட்டவணைகளாகவும் (Interactive Graphs மற்றும் Table) மேலும் முன்னேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதனூடாக:

- ◊ நடப்பு தொழிற் சந்தைத் தகவல்கள் தொடர்பான பகுப்பாய்வு
- ◊ பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான தகவல்களை இணைய தளத்தில் பார்வையிடக் கூடியதாக உள்ளமை
- ◊ கடந்தகால தொழிற்சந்தைத் தகவல் வெளியீடுகள் தொடர்பான தகவல்கள்
- ◊ தொழிற்சந்தைத் தகவல்கள் தொடர்பான எண்ணக்கருக்கள் மற்றும் வரைவிலக்கணங்கள்
- ◊ பயனுள்ள இணையத் தளங்களினுள் உட்பிரவேசித்தல்
- ◊ சுய விபரத் தொகுப்புடன் கூடிய விண்ணப்ப படிவத்தினை தயாரிப்பதற்கான உதவி வழிமுறைகள்
- ◊ தொழில் வெற்றிடங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள முடிகின்றமை
- ◊ தொழில்நுட்ப மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிற் துறைகளிடையில் அதிகூடுதலான கேள்விகள் நிலவுகின்ற பத்து (10) தொழிற் துறைசார் தகவல்களையும் மற்றும் அவ்வாறான முக்கிய விடயங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
- ◊ வருடாந்த தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழகாட்டியில் (வுஏநுவு புரனைந) உள்ள பாடநெறிகளின் விபரம்
- ◊ இப்பிரவானது, தொழிற் சந்தை தகவல்கள் தொடர்பான எண்ணக்கருக்கள், வரைவிலக்கணங்கள், சொற்களஞ்சியம், கலைச்சொற்கள் ஆகியனவற்றினையும் மற்றும் தொழிற் சந்தை தொழில்வாய்ப்பு விளம்பரங்களிற்கு மேலதிகமான சேவையாக தொழிலாளர்களால் முன்வைக்கப்படுகின்ற பல்வேறுபட்ட தகவல்களை நாளாதுவரையாக்கம் செய்து இவ் இணையத்தளப் பக்கத்தில் தரவேற்றம் செய்கின்றது.

தொழிற்சந்தை தகவல் இணைய பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது




## 10.4 இணையத் தளம், மின்னஞ்சல் மற்றும் உள்ளிணைய வசதிகள்

மின்னஞ்சலைப் பயன்படுத்துதல் தொடர்பான அரச சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலக தகவல்களை பரிமாறிக்கொள்கையில் வினைத்திறனை அதிகரித்தல், செலவைக் குறைத்தல் மற்றும் நேரத்தை சிக்கனப்படுத்தல் ஆகியவற்றிற்காக தடங்கலற்ற இணையத் தள மற்றும் மின்னஞ்சல் வசதிகளை பதவியணியில் உள்ள அனைவரும் பயன்படுத்துவதற்கு ஏதுவாக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதனூடாக, ஆணைக்குழுவின் ஊழியர்கள் தொடர்பாடல் வினைத்திறனை அதிகரித்துக் கொள்வதன் பொருட்டு இவ் இணையத் தளத்தினுடாக புதிய அறிவினை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பணியாளர்களுக்கிடையே தகவல்களை பகிர்ந்துகொள்வதற்காக உள்ளிணையமென்றும் இப்பிரிவினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இப்புதிய தொடர்பாடல் முறையிலுள்ள நெகிழ்வுத்தன்மை மற்றும் அதன் மூலமாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக உள்ள வசதிகளின் போன்றவற்றின் காரணமாக அது பயனாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஊழியர்களிடையே வினைத்திறனான முறையில் தகவல் தொடர்பாடலை மேற்கொள்வதற்கான கூடுதலான வாய்ப்புகளை ஏற்படுத்தும் பொருட்டு மின்னஞ்சல் மற்றும் இணையத் தள வசதிகள் 2016 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

## 10.5 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணைய தளத்தை பராமரித்தல்

தகவல் முறைமைகள் பிரிவின் மூலம் ஆணைக்குழுவின் இணைய தளமானது நிருவகிக்கப்படுவதுடன் அதன் மூலம் ஆணைக்குழுவின் செயற்பாடுகளான தொழிற் சந்தை தகவல்களை மிகவும் சரியாகவும் மற்றும் நாளதுவரையாகவும் பராமரித்தல் மற்றும் ஆணைக்குழுவின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி துறையில் புதிய அபிவிருத்திகளை அறிமுகப்படுத்தலினை ஆணைக்குழுவின் இணைய தளத்தில் தரவேற்றம் செய்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றது. இத்தகவல்கள் மேற்கூறப்பட்ட துறை தொடர்பாக ஆர்வமுள்ளோருக்கு மிகவும் பிரயோசனமாக அமையும்.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணைய தளத்தின் பக்கம் கீழே தரப்பட்டுள்ளது




தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) முடிவுகள் அந்தந்த பயிற்சி நிறுவகங்களுக்கு கிடைக்கக்கூடியவாறான வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் கணிப்பீட்டு முடிவுகள் தொடர்பாக அந்தந்த பயிற்சி நிறுவகங்கள் உரிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் தொடர்பான தரவுகளை பதிவேற்றம் செய்வதற்கான (Online facilities) வசதிகள் 2016 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவின் பிரதான இணைய தளத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இணைய பக்கங்களுள் உட்பிரவேசிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:

◊ தொழிற் சந்தைத் தகவல் (LMI)

◊ தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ)

◊ பதிவு, தராதர அங்கீகாரம் (Registration & Accreditation)

◊ திட்டமிடல், ஆராய்ச்சி (Planning & Research)

◊ உள்ளிணையம் (Intranet)

◊ ஆணைக்குழுவின் ஆராய்ச்சி சிற்றறை

◊ செய்திகளும் சம்பவங்களும்

◊ தகவல் முறைமைகள்

◊ தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி துறை வழிகாட்டி

◊ தேசிய தொழிற் திறன் தகுதிகள் விருதளிப்பு முறை

◊ விண்ணப்பம் மற்றும் தகவல்களை தரவிறக்கம் செய்தல்

◊ உள்ளக இணைய வலையமைப்பு

◊ NVQ சான்றழிப்பு மற்றும் பரிசீலித்தல்

2016 ஆம் ஆண்டில் கீழ்க் காணப்படும் இணைய பக்கங்கள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு அவை இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 10.6 பதிவு மற்றும் தராதர அங்கீகாரம் தொடர்பான இணைய பக்கம்

இவ் இணைய பக்கத்தின் மூலம் நிறுவகங்களை பதிவு செய்தல் மற்றும் பாடநெறி தராதர அங்கீகாரம் பற்றிய சகல தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும். மேலும், இவ் இணையத்தள பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவகங்கள் மற்றும் ஆணைக்குழு மூலம் தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்ட பாடநெறிகள் தொடர்பான தகவல்கள், தர முகாமைத்துவ முறைமை பற்றிய தகவல்கள், பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவம், பதிவுகளை புதுப்பிப்பதற்கான விண்ணப்ப படிவம், பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரம் அளிப்பதற்கான விண்ணப்ப படிவம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு தொடக்கம் பாடநெறிகளைப் பதிவுசெயதல் மற்றும் நிறுவகங்களை பதிவுசெய்தல் என்பன Online முறையினூடாக விண்ணப்பிப்பதற்கும் மற்றும் கட்டணம் செலுத்துவதற்குமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ் இணைய பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.



## 10.7 பயிற்சி நிலையம்

பதிவு மற்றும் தராதர அங்கீகாரம் பற்றிய தகவல்களை இணைய பக்கத்தில் பெறக்கூடிய வசதி

இவ் வசதியினூடாக நாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற் பயிற்சி நிறுவகங்கள் மற்றும் தராதர அங்கீகாரம் மேற்கொள்ளப்பட்ட பாடநெறிகள் பற்றிய விபரங்களை இணையத் தளத்தின் ஊடாக பார்வையிட முடிவதுடன் அதன் மூலம் எவரேனும் ஒருவரிற்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முறைகளுக்கு அமைய தகவல்களை தேடிக்கொள்ள முடியும்.

1 மாகாண மற்றும் துறைகளுக்கு அமைய நிறுவகங்கள்

2 மாகாண மற்றும் உரித்துடைமைகளுக்கு அமைய நிறுவகங்கள்

3 நிறுவகத்தின் பெயரோ அல்லது பெயரின் ஒரு பகுதி மூலம் நிறுவகங்கள் தொடர்பான விபரங்கள்

4 பாடநெறியின் பெயர் மற்றும் மாவட்டதிற்கமைய நிறுவகங்கள் தொடர்பான விபரங்கள்

## 10.8 திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி இணையத்தளம்

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி இணைய பக்கத்தில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டமிடல் கொள்கை, ஸ்தாபன செயலாக்கத் திட்டம், வருடாந்த செயலாக்கத் திட்டம், தொழிற் பயிற்சித் திட்டம் மற்றும் நிதியுதவி தொடர்பான விபரங்கள் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சி சிற்றறைக்காக தனியான தொரு இணைய பக்கம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அதில் சிற்றறையின் தொலைநோக்கு, ஆராய்ச்சி சிற்றறையின் செயற்பணி, மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி வகைகள் மற்றும் ஏனைய நடாத்தப்பட்ட ஆராய்ச்சிக் கற்கைகள் தொடர்பான தேர்ச்சி அறிக்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சி சம்பந்தமாக ஆர்வமுள்ளவர்கள் ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் மற்றும் அவை தொடர்பான தகவல்கள் ஆகியவற்றினை பெற்றுக்கொள்ள முடியும்.

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி இணைய பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.



மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இவ் ஆராய்ச்சி இணைய பக்கத்தை பார்வையிட்டவர்கள் பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டில் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் உள்ள சுமார் 20,000 பேர் மாதாந்தம் இவ் இணைய பக்கத்தை பயன்படுத்தியுள்ளனர். இவ் இணைய பக்கத்தில் ஆணைக்குழுவின் அனுசரணையின் கீழ் தற்போது வரையில் நிறைவு பெற்ற ஆராய்ச்சிக் கற்கைகள், தற்போது நடாத்தப்படும் ஆராய்ச்சிக் கற்கைகள் மற்றும் எதிர்வரும் காலத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஆராய்ச்சிக் கற்கைகள் பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 10.9 தகவல் முறைமைகள் பிரிவின் இணைய பக்கம்

தகவல் முறைமைகள் பிரிவானது தனது பிரிவு தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக இவ் இணைய பக்கத்தினை 2016 ஆம் ஆண்டு அபிவிருத்தி செய்து பராமரித்து வருகின்றது.

இவ் இணைய பக்கத்தில் இலத்திரனியல் நூலகம் மற்றும் உள்ளிணையம் போன்ற வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ் இணைய பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.




இத்தகவல்களிற்கு மேலதிகமாக தகவல் முறைமை பிரிவானது 2016 ஆம் ஆண்டில் பின்வரும் தரவுத்தளங்களை அபிவிருத்தி செய்து பராமரித்து வருகின்றது.

- ◊ பதிவுசெய்யப்பட்ட பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் மற்றும் தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்ட பயிற்சி பாடநெறிகள்
- ◊ தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) சான்றிதழாளர்கள் பற்றிய விபரங்கள்
- ◊ புதினப் பத்திரிகை விளம்பர ஆய்வு விபரங்கள்

மேலும், தகவல் முறைமை பிரிவானது உள்ளக கணனி வலைத்தளம், இணையத் தளம், மின்னஞ்சல் முறைமை, கணனி வலைத்தளத்தினுள் உட்பிரவேசிப்பதற்கான தடைகள் போன்றவற்றினை நிறுவகத்தின் வினைத்திறனை முன்னேற்றுவதற்காக 2016 ஆம் ஆண்டில் பேணியுள்ளது.

### 10.10 தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டி (TVET Guide)

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவு மூலம் தொழிற்சந்தைத் தகவல் வெளியீடுகளுக்கு மேலதிகமாக, 2016 ஆம் ஆண்டிற்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டி (TVET Guide) இனை 2016 ஆம் ஆண்டின் இறுதியில் இப்பிரிவு வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழிகாட்டியில் (TVET Guide), மாகாண ரீதியாகவும் மற்றும் கல்வித் துறை ரீதியாகவும் இலங்கையின் அரச துறைகளில் தொழிற் பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் பாடநெறிகள் பற்றிய விபரங்கள், பாடநெறியை பயிலுவதற்கான தகைமைகள் பற்றிய விபரங்கள், பாட-நெறிக் கட்டணங்கள், பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் தராதர அங்கீகாரம் செய்யப்பட்ட பாடநெறிகளின் விபரங்கள் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. மாகாண ரீதியில் ஒவ்வொரு நிறுவகத்திலும் பயிற்சியை/பாடநெறியைப் பயிலுவதற்கான தகைமைகளுக்கமைய வகைப்படுத்தப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டி (TVET Guide) - 2017 இன் முன் அட்டைப்படம் கீழே தரப்பட்டுள்ளது.




தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டி (TVET Guide) வெளியீட்டினை இவ் ஆணைக்குழு இணைய தளத்தினூடாக பார்வையிட முடிவதுடன் அதுபற்றிய தகவல்களை பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

1. மாகாண மற்றும் கற்கைத் துறைகள் ரீதியாக பயிற்சி நிறுவகங்கள் பற்றிய விபரங்கள்
2. மாகாண மற்றும் கல்வித் தகைமை ரீதியாக பயிற்சி நிறுவகங்கள் பற்றிய விபரங்கள்
3. மாகாண மற்றும் கற்கைத் துறைகள் ரீதியாக பாடநெறிகள் தொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இவ் வெளியீட்டின் முகப்பு பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.




## 10.11 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) செய்திமடல்கள்

2016 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பாக தெரியப்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு இரண்டு TVEC செய்திமடல்கள் (TVEC Newsletters) மற்றும் (TVET Newsletters) தயாரிக்கப்பட்டு, அச்சடிக்கப்பட்டு அவை பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து பயிற்சி நிறுவகங்களுக்கும் மற்றும் இது தொடர்பாக ஆர்வமுடைய நபர்களிற்கும் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

அவ் இரண்டு செய்திமடல்களின் வடிவங்கள் கீழே தரப்பட்டுள்ளன.







## 10.12 ஆணைக்குழுவின் நூலகம்

இவ்வாணைக்குழுவின் நூலகம் தகவல் முறைமைகள் பிரிவினால் நிருவகிக்கப்படுகின்றது. இந்நூலகத்தினால் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பல்வேறு கல்வித் துறைகளில் ஈடுபடுபவர்கள், பல்வேறு நிலைகளில் உள்ள ஆராய்ச்சியாளர்கள், புலமையாளர்கள் மற்றும் தொழிற்கல்வி துறைசார் பல்வேறு நபர்கள் ஆகியோருக்காக நூலகத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தகவல் முறைமைப் பிரிவின் கீழ் செயற்படும் நூலகத்தின் மூலம் பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டுவருகின்றது:

◊ தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி துறைக்குரிய புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளை வழங்குதல்
◊ ஆணைக்குழுவின் வெளியீடுகள் மற்றும் பிரசுரங்களை நிர்வகித்தல் மற்றும் விற்பனை செய்தல்
◊ பருவ வெளியீடுகளை கிடைக்கச்செய்தல்
◊ நாளாந்த புதினப் பத்திரிகைகளை கிடைக்கச் செய்தல் மற்றும் ஏனைய ஆவணப்படுத்தும் அலுவல்கள்
◊ ஏனைய பயன்பாடுகள், ஆவணப்படுத்தும் சேவைகள் மற்றும் தகவல் சேவைகளை வழங்கும் வசதிகள்

கடந்த சில ஆண்டுகளாக நூல் நிலையம் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ஆணைக்குழுவின் வெளியீடுகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை நூலகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் பெறுமதிகள் கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | புத்தகங்களின் பெறுமதி (ரூபா) |
|---|---|
| 2006 | 99,513.00 |
| 2007 | 150,000.00 |
| 2008 | 195,000.00 |
| 2009 | 99,288.00 |
| 2010 | 50,000.00 |
| 2011 | 25,000.00 |
| 2012 | 50,000.00 |
| 2013 | 50,000.00 |
| 2014 | 50,000.00 |
| 2015 | 50,000.00 |
| 2016 | 50,000.00 |

அதற்கு மேலதிகமாக, ஆணைக்குழுவின் நூலகத்திலிருந்து கிடைக்கப்பெறாத விடயங்கள் தொடர்பாக ஆர்வமுடைய வாசிப்பாளர்களுக்கு நூலக தகவல் சேவை தொடர்பான விடயங்களை நூலகங்களுக்கிடையேயான இரவல் சேவையின் மூலம் பெற்றுக்கொடுக்கின்றது. ஊழியர்களின் தகவல் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்காக கடந்த வருடத்தில் வெவ்வேறு நூலகங்களிடமிருந்து தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கான வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

பிரித்தானிய மன்றத்திலுள்ள நூலகத்தில் ஸ்தாபன அங்கத்துவமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் மேலதிகமாக புத்தகங்களை பயன்படுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதுடன் சர்வதேச ரீதியிலான அறிவினை வாசிப்பாளர்களிற்கு வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு தொடக்கம் இலத்திரனியல் நூலக முறைமையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக தரவுத்தளமொன்றில் நூலகத்திலுள்ள அனைத்து வெளியீடுகள் தொடர்பான விபரங்கள் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், வாசிப்பாளர்கள் நூலகத்திற்கு வருகை தராமலே

கணனியூடான நேரடித்தொடர்பு மூலம் தமக்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் வெளியீடு-களை தொடர்பான விபரங்களைத் தேடிக்கொள்ள முடியும். இவ்வாறான புதிய எண்ணக்கருக்கள் இலத்திரனியல் நூலக வேலைத்திட்டத்தின் (e Library) கீழ் ஆணைக்குழுவின் அனுமதிக்கு இணங்க நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டில் இருந்து டுடைளலள என்ற நூலக மென்பொருள் நூலகத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம், நூலகத்தைப் பயன்படுத்துவோருக்கு அதிக வசதிகளையும் மற்றும் சேவைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டுடைளலள என்ற நூலக மென்பொருளின் பக்கம் கீழே தரப்பட்டுள்ளது.




### 10.13 புவியியல்சார் தகவல் முறைமை (GIS)

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் புவியியல்சார் தகவல் முறைமை (GIS) ஸ்தாபிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. இப்புவியியல்சார் தகவல் முறைமை மூலம் நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் உள்ள தொழிற் கல்வி பயிற்சித் துறையுடன் தொடர்புடைய அனைத்து நிறுவகங்கள் தொடர்பாகவும் அவற்றின் புவியியல்சார் அமைவிடங்களிற்கான தூரங்கள் போன்ற தகவல்களையும் மிகவும் துல்லியமாக பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

புவியியல்சார் தகவல் முறைமையில் இணையத்தளத்தின் ஊடாக குறிப்பிட்ட ஒவ்வொரு நிறுவகம் பற்றிய தகவல்களை அறிந்துகொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தமக்கு தேவையான தகவல்களை நாளதுவரையாக்கம் செய்து உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இப் புவியியல்சார் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான மென்பொருளினை தெரிவு செய்வதற்காக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், விசேடமாக அதிக செலவில்லாமல் புவியியல்சார் தகவல் மென்பொருள் சேவையினை பெற்றுக்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இத் தகவல் சேவையின் முதற்கட்ட நடவடிக்கையாக தொழிற் பயிற்சி மத்திய நிலையங்கள் அமைந்துள்ள சபரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிறுவகங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் 2013 ஆம் ஆண்டில் தென், வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான தகவல்களும் பூரணமாக உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இச்செயற்பாடானது 2014 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதுவரையில் சுமார் 881 பயிற்சி நிறுவகங்கள் பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புவியியல்சார் தகவல் முறைமை (GIS) தொடர்பான பக்கம் கீழே தரப்பட்டுள்ளது.




## 10.14 2016 ஆம் ஆண்டில் தகவல் முறைமை பிரிவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட வேலைத்திட்டம் மற்றும் புதிதாக தயாரிக்கப்பட்ட விசேட சேவைகள்

## 10.15 2016 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட புதிய தகவல் முறைமை மென் பொருட்கள் Touch Your Future 2016/2017 Data entry System

Touch Your Future 2016/2017 போட்டியில் தனியார், அரச மற்றும் NYSC நிறுவகங்களில் முதல் நிலை போட்டி ஆணைக்குழுவால் நடாத்தப்படுவதோடு அதற்காக நிறுவப்பட்ட முறைமை மூலம் போட்டியாளர்களின் அனைத்து தரவுகளும் முறைமையின் மூலம் தரவுக் களஞ்சியத்தில் சேமித்து வைப்பதோடு எல்லா போட்டியாளர்களுக்கும் தொடர் இலக்கம் ஒன்று முறைமையின் மூலம் முடிவு செய்து வழங்கப்படும். மேலும் இம்முறைமையின் மூலம் போட்டிக்கான தகைமை-களை பூர்த்தி செய்யத் தவறிய விண்ணப்பதாரிகள் அகற்றப்படுவதோடு போட்டியாளர்களுக்கான கடிதங்களை அச்சுப்பதித்தல், போட்டியாளர்களின் தகவல்கள், மாவட்ட, போட்டியாளர்கள் விண்ணப்பித்த துறை மற்றும் போட்டி இடம்பெறும் நிலையம் என்பவற்றிற்கேற்ப அறிக்கையை பெற்றுக் கொள்ள முடியும்.

## 11.0 2016 ஆம் ஆண்டில் தகவல் முறைமை பிரிவினால் சர்வதேச மட்டத்திலான பங்களிப்புகள்

◊ 2016 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் நாட்டு அரசாங்கத்தின் வேண்டுகோளிற்கிணங்க எமது நிறுவகத்திலுள்ள யுனிவொக் அமைப்பின் கிளையின் மூலம் பிரதிநிதிகள் குழுவிற்கு கல்விச் சுற்றுலா ஒன்று இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

பாகிஸ்தான் சுற்றுலா






நேபாள சுற்றுலா






அவ்வாறே, 2016 ஆம் ஆண்டில் ஜேர்மனியில் அமைந்துள்ள யுனிவொக் (UNIVOC) பிரதான மத்திய நிலையத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் எமது நிறுவகத்திலுள்ள அதிகாரிகள் மற்றும் தொழிற் பயிற்சி துறைசார் அதிகாரிகள் ஆகியோருக்கு ஜேர்மனி, இந்தியா மற்றும் இன்தோனேசிய போன்ற நாடுகளில் தொழிற் பயிற்சிகள் தொடர்பான பயிற்சிகளில் கலந்துகொள்வதற்கான சில சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளமுடிந்துள்ளது.

## தேசிய தொழிற் தகைமைகளுக்குள் ஆங்கில பாடத்திட்டத்தினை உள்ளடக்குதல்

2016 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வியை பயிலுகின்ற மாணவர்களை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வதற்காக வேண்டி அவர்களுக்கு அவசியமான சர்வதேச மொழ-யினை வழங்குதல் தொடர்பான அடிப்படை பிரச்சினை ஒன்றினை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

இந்நிலையினை தவிர்ப்பதற்காக அரச துறையின் மூலம் தொழிற் பயிற்சியில் ஈடுபடுகின்ற நிறுவகங்களோடு கலந்தாலோசித்து இதற்கான தீர்வினை தேடுவதற்காக வேண்டி பாரிய முயற்சி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக ஆங்கில மொழியி-னை கற்பிப்பதற்காக வேண்டி தொழிற் பயிற்சி நிலையங்களோடு இணைந்து திறன் துறை அபிவிருத்தி திட்டத்தின் நிதியுதவியின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. www.bulidingcareerskills.gov.lk இணையத்தளத்தினை நிர்மாணித்தல் மற்றும் அதனூடாக சிறுவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தேவையான பயிற்சியையும் அறிவினையும் வழங்குதல்.

2. மூன்று மட்டங்களிலான Career Skills என்ற பெயிரிடப்பட்ட 3 ஆங்கிலப் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

3. Teaching English Career Skills என்ற பெயரிடப்பட்ட B.Johnson என்பவற்றால் எழுதப்பட்ட ஆக்கத்தினை அறிமுகப்படுத்தல், இது ஆசிரியர்களுக்கு புதிய பாடத்திட்டத்தினை அறிமுகப்படுத்துவதனை இலகுபடுத்தும் ஆசிரியர் கையேடாக அறிமுகப்படுத்த முடியும்.

4. பாடசாலையை விட்டு இடைவிலகும் மாணவர்களை இலக்காகக் கொண்டு 03 மாத கால குறுகிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படல்.

5. ஜேர்மன் நாட்டவரான Prof.Markers இனால் எழுதப்பட்ட Quality is fun & Tool Box என்ற புத்தகக் கோர்வையினை அறிமுகப்படுத்தல். இது தர மேலாண்மையை உயர்த்துவதற்காக வேண்டி அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.

6. ஆங்கில இலக்கிய புத்தகம் (English Grammer) மற்றும் An Anthology of Poems என்ற புத்தகக் கோர்வையினை அறிமுகப்படுத்தல். இப்புத்தகக் கோர்வையானது விசேசமாக NVQ 05 மட்டத்தின் ஆங்கில பாடநெறிக்கு பொருத்தமாகும்.

மேலும், அனுபவம் மிக்க முகாமைத்துவக் குழுவின் ஆலோசனைகளுக்கேற்ப மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தொடர்ந்தேர்ச்சியான பயனுறுதி மிக்க மாற்றங்கள் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி துறைக்குள் புரிவதற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும்.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான
நிதி நிலைமைக் கூற்றிற்கான அட்டவணை

| | குறிப்பு | 2016 (ரூ.) | 2015 (ரூ.) | 2014 (ரூ.) |
|---|---|---|---|---|
| வருமானம் | | | | |
| திறைசேரி மானியம் | 01 | 111,334,030 | 89,250,310 | 83,137,909 |
| செயற்திட்ட மானியம் | 02 | 43,498,836 | 27,484,163 | 26,191,574 |
| தொழிற்படு வருமானம் | 03 | 12,892,261 | 10,118,202 | 8,149,221 |
| மானியம் மீளளிப்பு | | | | 47,325 |
| தொழிற்பாடற்ற வருமானம் | 04 | 334,786 | 208,250 | 374,136 |
| | | 168,059,913 | 127,060,925 | 117,900,165 |
| பதவியணிக் கடன் வட்டி மற்றும் ஏனைய வட்டி | 05 | 569,400 | 455,174 | 552,390 |
| அகற்றிய சொத்துக்களின் இலாபம் | | | - | |
| | | 168,629,313 | 127,516,099 | 118,452,555 |
| பிற்போடப்பட்ட வருமானம் | | 10,709,174 | 12,124,776 | 10,372,317 |
| | | 179,338,487 | 139,640,875 | 128,824,872 |
| செலவு | | | | |
| பணிப்பாளர் சபை மற்றும் அவதானிப்பாளர்களின் கொடுப்பனவு | 06 | 969,480 | 547,500 | 420,500 |
| ஆளுக்குரிய ஊதியங்கள் | 07 | 59,632,035 | 48,378,802 | 38,441,552 |
| பிரயாணச் செலவு | 08 | 1,813,491 | 1,689,008 | 1,049,271 |
| வழங்கல்கள் மற்றும் நுகர்வுகள் | 09 | 6,638,910 | 6,178,919 | 7,301,755 |
| பராமரிப்புச் செலவு | 10 | 3,996,515 | 3,985,584 | 3,986,334 |
| புனரமைப்புச் செலவு | 11 | 1,443,053 | 1,243,542 | 2,076,343 |
| ஒப்பந்த சேவைகள் | 12 | 10,757,571 | 10,010,560 | 8,925,918 |
| தொழிற்படு செலவு | 13 | 51,936,841 | 26,533,239 | 25,692,147 |
| | | | | |
| | | 137,187,896 | 98,567,154 | 87,893,820 |
| செயற்திட்ட செலவு | 14 | 42,166,573 | 27,526,270 | 26,191,574 |
| | | 179,354,469 | 126,093,424 | 114,085,394 |
| பெறுமானத் தேய்வு | | | 12,124,776 | 10,372,317 |
| | | 179,354,469 | 138,218,200 | 124,457,711 |
| அளிப்பின் முன்னரான தேறிய மேலதிகம்/ (போதாமை) | | -15,982 | 1,422,675 | 4,367,161 |
| வருடத்திற்கான அளிப்பு | | | - | |
| பணிக்கொடை அளிப்பு | | | 3,370,479 | 2116284 |
| | | -15,982 | 141,588,679 | 126,573,995 |
| அளிப்பின் பின்னரான தேறிய மேலதிகம்/ (போதாமை) | | -15,982 | (1,947,804) | 2,250,877 |

ஆணைக்குழுவிற்காகவும் அதன் சார்பிலும் கையெழுத்திடப்பட்டுள்ளது.

ஏ.எஸ். அமரசிங்க
பிரதிப் பணிப்பாளர் (நிதி)

மல்காந்தி ஜயவர்தன
பணிப்பாளர் நாயகம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலைக் கூற்று

| விளக்கம் | குறிப்பு | 2016 (ரூ.) | 2015 (ரூ.) | 2014 (ரூ.) |
|---|---|---|---|---|
| சொத்துக்கள் | | | | |
| | | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 15 | 34,880,154 | 35,772,126 | 46246950 |
| | | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| கடன்கொடுத்தோர் | 16 | 7,882,420 | 7,456,701 | 7,337,262 |
| பெறுகைகளும் வைப்புகளும் | 17 | 5,087,031 | 4,053,559 | 4,011,686 |
| இருப்பு | 18 | 1,319,100 | 549,963 | 790,873 |
| காசும் காசு நிகர்த்தவையும் | 19 | 17,551,752 | 8,665,511 | 8,798,674 |
| | | 31,840,303 | 20,725,734 | 20,938,495 |
| மொத்த சொத்துக்கள் | | 66,720,457 | 56,497,860 | 67,185,445 |
| | | | | |
| தேறுமதி மற்றும் பொறுப்புக்கள் | | | | |
| தேறுமதி | | | | |
| திரட்டு நிதியம் | | 175,452 | 175,452 | 175,452 |
| மாற்ற ஒதுக்கம் | 20 | 299,124 | -1,316,891 | 625,948 |
| | | 474,576 | -1,141,439 | 801,400 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 21 | 34,880,154 | 35,772,126 | 46246950 |
| பணிக்கொடை அளிப்பு அட்டவணை 01 | | 11,968,256 | 12,985,188 | 9614708 |
| | | 46,848,410 | 48,757,314 | 55861658 |
| | | | | |
| | | 47,322,986 | 47,615,875 | 56,663,058 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | |
| கடன்கொடுத்தோர் | 22 | 7,175,841 | 1,683,702 | 3074795 |
| மீளச்செலுத்தக்கூடிய வைப்புகள் | 23 | 12,221,630 | 7,198,283 | 7447592 |
| மற்றும் செலுத்துகைகள் | | 19,397,471 | 8,881,985 | 10522387 |
| | | | | |
| மொத்த பொறுப்புக்கள் | | **66,720,457** | **56,497,860** | **67,185,445** |

பணிப்பாளர் சபையே இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பானது.

பணிப்பாளர் சபை இந்நிதிக் கூற்றுக்களுக்கு ஒப்புதல் அளித்ததுடன் அதன் சார்பாகவே ஒப்பமிடப்பட்டது.

ஏ.எஸ். அமரசிங்க
பிரதிப் பணிப்பாளர் (நிதி)

மல்கான்தி ஜயவர்தன
பணிப்பாளர் நாயகம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தேறுமதியில் மாற்றங்கள்

| | 2016 (ரூ.) | 2015 (ரூ.) | 2014 (ரூ.) |
|---|---|---|---|
| 01.01.2014 இல் இருந்த மீதி | 175,452 | (1,484,629) | (1,309,177) |
| முன்னைய வருடத்தில் சரிக்கட்டல் | | (160,305) | (160,305) |
| TVET வழிகாட்டி விற்பனை வருமானத்தில் சரிக்கட்டல் | | 20,000 | 20,000 |
| ஆரம்ப மீதி வித்தியாசம் | | 5 | 5 |
| வருடத்திற்குரிய மேலதிகம்/ (போதாமை) | | 2,250,877 | 2,250,877 |
| 01.01.2015 இல் இருந்த மீதி | 175,452 | 625,948 | 801,400 |
| முன்னைய வருடத்தில் சரிக்கட்டல் | | 4972 | 4972 |
| ஆரம்ப மீதி வித்தியாசம் | | -7 | -7 |
| வருடத்திற்குரிய மேலதிகம்/ (போதாமை) | | -1947804 | -1947804 |
| 01.01.2016 இல் இருந்த மீதி | 175452 | (1,316,891) | (1,141,439) |
| பெறுமானத்தேய்வில் திருத்தம் | | 33731 | 33731 |
| முன்னைய வருடத்தில் சரிக்கட்டல் | | 1378797 | 1378797 |
| மேல்/ மீது சரிக்கட்டல் ஏற்பாடு | | 219469 | 219469 |
| வருடத்திற்குரிய மேலதிகம்/ (போதாமை) | | -15982 | -15982 |
| 31.12.2016 இல் இருந்த மீதி | 175452 | 299,124 | 474,576 |

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலைக் கூற்று

| | 2016 (ரூ.) | 2015 (ரூ.) | 2014 (ரூ.) |
|---|---|---|---|
| **வருடத்திற்கான தேறிய தொழிற்படு மேலதிகம்/(போதாமை)** | | | |
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்து மேலதிகம்/ (போதாமை) | -15982 | -1947804 | 2,250,877 |
| நிலையான சொத்து நீக்கலின் இலாபம் | | | |
| **காசற்ற இயக்கங்களில் திருத்தம்** | | | |
| முன்னைய வருட சரிக்கட்டல் | 1378797 | 4972 | (160,305) |
| பெறுமானத்தேய்வு | 0 | 12124776 | 10372317 |
| ஆரம்ப மீதி மாற்றம் | 1104 | -7 | 20002 |
| பணிக்கொடை அளிப்பு | | 3370479 | 2116284 |
| பிற்போடப்பட்ட வருமானம் | -7323147 | -10474824 | 10998615 |
| | 4585045 | 3077592 | 25597790 |
| வட்டி வருமானம் | 569400 | 455174 | 552390 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | | | 173556 |
| **நடப்பு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான** | **4015645** | **2622418** | **24871844** |
| **தொழிற்படு மேலதிகம்/(போதாமை)** | | | |
| கடன்பட்டோரில் அதிகரிப்பு/ வீழ்ச்சி | -425719 | -119439 | (333,977) |
| வைப்புகள் மற்றும் பெறுகைகளில் அதிகரிப்பு/ வீழ்ச்சி | -1033472 | -41873 | 1,152,011 |
| கையிருப்பில் அதிகரிப்பு/ வீழ்ச்சி | -769137 | 240910 | (606,672) |
| கடன்கொடுத்தோரில் அதிகரிப்பு/ வீழ்ச்சி | 5492139 | -1391092 | (2,520,015) |
| மீளச்செலுத்தக்கூடிய வைப்புகள் மற்றும் | 5023347 | -249309 | (476,885) |
| செலுத்துகைகளில் அதிகரிப்பு/வீழ்ச்சி | | | |
| | 8287158 | -1560803 | (2,785,538) |
| வட்டி வருமானம் | | 455174 | 552390 |
| **தொழிற்படு நடவடிக்கைகளால் தேறிய காசு** | **18669711** | **1516789** | 22638696 |
| <u>முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்</u> | | | |
| ஆதனம், இயந்திரம் மற்றும் பொறித்தொகுதிகளின் கொள்வனவு | -9783470 | -1649952 | (21,370,929) |
| நிலையான சொத்துக்களின் தேறிய நீக்க பெறுமதி | | | |
| ஆதனம், இயந்திரம் மற்றும் பொறித்தொகுதிகளிலிருந்தான விற்பனை வருமானம் | | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு/ (பயன்படுத்திய)** | **-9783470** | **-1649952** | **(21,370,929)** |
| <u>**நிதி நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்**</u> | | | |
| திரட்டு நிதியம் | | | |
| மாற்றங்கள் (பொதுத் திறைசேரிக்கு மாற்றம்) | | | |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு/ (பயன்படுத்திய)** | | | |
| காசும் காசு நிகர்த்தவையில் தேறி அதிகரிப்பு/ வீழ்ச்சி | 8886241 | -133163 | 1,267,767 |
| வருட ஆரம்பத்தில் காசும் காசு நிகர்த்தவையும் | 8,665,511 | 8798674 | 7,530,907 |
| **வருட முடிவில் தேறிய காசும் காசு நிகர்த்தவையும்** | **17551752** | **8,665,511** | **8,798,674** |
| | | | |
| **காசுப் பாய்ச்சல் கூற்றிற்கான குறிப்புகள்** | | | |
| **வருட முடிவில் காசும் காசு நிகர்த்தவையும்** | | | |
| மக்கள் வங்கி Y.M.B.A.கிளை A/c No-078-1001-722-66044 | 5247176 | 4,364,813 | 334,756 |
| மக்கள் வங்கி Y.M.B.A.கிளை A/c No-078-1001-122-68324 | 7976652 | 38,712 | 897,346 |
| மக்கள் வங்கி Y.M.B.A.கிளை A/c No-078-1001-422-66050 | 180789 | 365,062 | 353,015 |
| அழைப்பு வைப்பு | 4147135 | 3,896,924 | 7,213,557 |
| | 17551752 | 8,665,511 | 8,798,674 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1. பெறுமானத் தேய்வுமுறையானது நேர்கோடு முறையிலிருந்து பெறுமதி குறைப்பு மீதிமுறைக்கு 2008 ஆம் ஆண்டிலிருந்து மாற்றப்பட்டது.
2. வருட முடிவில் மாணவர் பதிவுப் புத்தகங்களின் செலவு நிதிக்கூற்றுக்களில் கையிருப்பாக காட்டப்பட்டுள்ளது.
3. 2016 ஆம் ஆண்டு முடிவுறுகையில் ஆணைக்குழுவில் கையிருப்பாக 1113 VET திட்ட புத்தகங்கள் இருந்தன.
4. 2015 ஆம் ஆண்டு அரச மற்றும் ஏதுநிலைக்குட்பட்ட துறைகளுக்கு பயிற்றுவிப்பு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக அளிக்கப்பட்ட முற்பணம் 2016 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்டது.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

### 01. பொது கொள்கைகள்

1.1 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கணக்கீடு அடிப்படைகள், வரலாற்று கணக்கீடு அடிப்படைகளுக்கமையவும், தவிர 2003, 2008 இல் குறிப்பிட்ட பொறிகள், உபகரணங்கள் என்பவற்றிற்கான மறுமதிப்பு செய்யப்பட்டும் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட கணக்கீடு நியமங்களுக்கமையவும் தயாரிக்கப்பட்டது. நிதிக்கூற்றுகள் இலங்கை 'ரூபாயில் தயாரிக்கப்பட்டுள்ளது.

1.2 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டுச்செலவாணியுடன் தொர்புபட்ட சகலவிதமான கொடுக்கல்வாங்கல்களும் அக்கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்கின்ற சந்தர்ப்பத்தில் உள்ள நாணய மாற்றுவீத அடிப்படையில் கணக்கீடு இலங்கை 'ரூபாயில் நடைமுறைப்படுத்தப்படும்.

1.3 ஐந்தொகைத் தினத்தின் பின் நடைபெறும் நிகழ்வுகள்

ஐந்தொகைத் தினத்தின் பின் நடைபெறும் சகல மூலப்பொருள் நிகழ்வுகளும் நிதிக்கூற்றுகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

1.4 ஒத்துப்பார்க்கக்கூடிய தகவல்கள்

நடப்புவருடத்தின் கணக்குகளை கடந்த இரண்டு வருட கணக்குகளுடன் ஒத்துப்பார்க்கக்கூடிய வகையில் நிதிக் கூற்றுக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### 02. சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு நடவடிக்கைகளும்

2.1 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவை ஆகுசெலவிலிருந்து சேர்ந்த பெறுமாத்தேய்வு குறைக்கப்பட்டு பதியப்பட்டுள்ளன.

2.2 சகலசொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பனவற்றிற்கு பெறுமானத் தேய்வு அறவிடப்பட்டுள்ளது.

2.3 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கள் கொள்வனவு செய்த வருடத்திற்கான முழுவருட பெறுமானத்தேய்வு ஒதுக்கப்பட்டதுடன் அவை அப்புறப்படுத்தும் வருடத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படவில்லை. 2008 ஆம் ஆண்டிலிருந்து பெறுமானத்தேய்வு கொள்வனவு செய்யப்பட்ட திகதி/ அப்புறப்படுத்தப்பட்ட திகதி என்பதன் அடிப்படையில் கணிப்பிடப்படுகிறது

### 03. கணக்கீட்டுக் கொள்கையில் மாற்றம்

3.1 2008 ஆம் ஆண்டு பெறுமானத்தேய்வு முறையில் நேர்கோடு முறைகைவிடப்பட்டு பெறுமதிகுறைப்பு மீதி-முறை அறிமுகப்படுத்தப்பட்டது. சொத்துக்களின் முன்கொண்டுவரப்பட்ட மிகுதிகளின் திருத்தங்கள் உரியவாறு மேற்கொள்ளப்பட்டன.

3.2 சொத்துக்கள், பெறுமானத்தேய்வு வீதங்கள் 2008 ஆம் ஆண்டில் மீள்வகுக்கப்பட்டன. சொத்துகளும் அவற்றிற்குரிய பெறுமானத்தேய்வு வீதங்களும் பின்வருமாறு:

| சொத்துக்கள் | வீதம் | (வருடத்திற்கு) |
|---|---|---|
| 1. | வாகனங்கள் | 25% |
| 2. | தளபாடங்கள், பொருத்தல்கள் | 10% |
| 3. | அலுவலகஉபகரணங்கள் | 25% |
| 4. | கணினிகள், பாகங்கள் | 33% |

| | | |
|---|---|---|
| 5. | கணினிஅச்சுப்பொறிகள் | 33% |
| 6. | ஆதனம், பொறித்தொகுதி | 25% |
| 7. | பெயர்ப்பலகை | 25% |
| 8. | நூலகப் புத்தகங்கள் | 25% |
| 9. | கணினி மென்பாகம் | 25% |

**04. வியாபாரக் கடன்களும் கிடைக்கப்பெற வேண்டியவைகளும்**

4.1 கிடைக்கப்பெற வேண்டியவைகள் அவற்றின் மாற்றத்தகு பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4.2 காசும் காசு நிகர்த்தவைகளும்
காசும் காசு நிகர்த்தவைகளும் வங்கியிலுள்ள காசாக விளக்கப்படும்.

**05. கடன்பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்**

சகல அறிந்தகடன் பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக கணக்கிடப்பட்டுள்ளன.

5.1 ஓய்வுபெறல், பயன்செலவுகள்

5.1.1 வரைவிலக்கணங்களுக்கு செய்யப்பட்ட பங்களிப்புத்திட்டம் - ஊ.சே.நி, ஊ.ந.நி
எல்லாஊழியர்களும்ஊழியர்சேமலாபநிதியம், ஊழியர்நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கு தகுதியடையவர்கள்

5.1.2 ஓய்வூதியப்பணிக்கொடை

1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க சட்டம் மற்றும் 16 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு தரத்திற்கமைய எல்லா ஊழியர்களும் இவ்வாணைக்குழுவில் தொடர்ச்சியாக ஒருவருடத்திற்கு மேல் பூர்த்தி செய்வரெனில் ஓய்வூதியப் பணிக்கொடைக்கு உட்படுவர். பணிக்கொடை பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதி வழங்கப்படவில்லை அல்லது உண்மை மதிப்பிடப்படவில்லை.

5.2 மானியங்களுக்கான கணக்கீடு

திறைசேரி மற்றும் வெளிநாட்டு செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட மூலதனமானியங்களோடு சம்பந்தப்பட்ட சொத்துக்கள் பிற்போடப்பட்ட வருமானமாக உபசரிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட பொறிகள் மற்றும் உபகரணங்கள் மூலதனச் செலவாக காட்டப்படும். சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் இம்மானியம் வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

5.3 மூலதனப் பொறுப்புக்களும், எதேச்சையான பொறுப்புக்களும்

எல்லா பொறுப்புள்ள பொருட்களும் மற்றும் எதேச்சையான பொறுப்புக்களும் கருத்திற் கொள்ளப்பட்டு அவற்றிற்குரிய தேவையான திருத்தங்கள் நிதிநிலைமைக் கூற்றில் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

**06. நிதிச் செயலாண்மை**

6.1 மீள்வரும் செலவினக் கணக்காக அரசு அளிக்கின்ற கொடைகளும் இவ்வாணைக்குழுவின் நானாவித வருமானமும் நிதிச் செயலாற்றுமைக் கூற்றில் கணக்கிடப்பட்டுள்ளது.

6.2 செலவினம் மீதான வருமானப் பற்றாக்குறையானது (மேன்மிகை) சகல தெரிந்த கடன் பொறுப்புக்கள், நிலையான சொத்துக்களின் தேய்மானம் என்பவற்றிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்னர் கிடைக்கப் பெற்றுள்ளன.

6.3 இவ்வாணைக்குழுவின் தொழிற்பாடுகள் மூலதனச் சொத்துக்களைப் பேணல், வினைத்திறன் மிக்கபணி என்பவற்றிற்கான செலவானது அரசிறைக்கு விதிக்கப்பட்டுள்ளது.

6.4 குறுகிய ஆயுட்காலத்தைக் கொண்டதும் இயற்கையில் மூலப்பொருள் அற்றதுமான மூலதனமாக்க முடியாதபொருட்கள் பொருட் பதிவேட்டுப்பொருட்களின் பெறுமதி வருமான செலவினக்கணக்கிற்கு அளிக்கப்பட்டுள்ளது. எனினும் பௌதீகக் கட்டுப்பாட்டு நோக்கங்களிற்கென பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

6.5 செலுத்தப்படாத பதவியணியிநர் வட்டி அல்லாத ஏனைய செயற்பாடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் காசு அடிப்படையில் பதிவுசெய்யப்படும்.

**07. ஆணைக்குழுவின் நிதி**

மீளாய்வாண்டில் (2016) பணிக்கொடை அளிப்பிற்கு முன்னரான நிதி ரூ.15,982.00 போதாமையாக பதிவுசெய்யப்பட்டது.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலைக் கூற்று

| | | 2016 (ரூ.) | 2015 (ரூ.) | 2014 (ரூ.) |
|---|---|---|---|---|
| **01. திறைசேரி மானியங்கள்** | | | | |
| மீள்வரும் மானியம் | | 104,000,000 | 82,200,000 | 71,000,000 |
| மூலதன மானியம் - புனரமைப்பு | 01.1 | 1,560,000 | 1,235,000 | 2,240,000 |
| மூலதன மானியம் - ஆதனம், இயந்திரம் மற்றும் பொறித்தொகுதிகளின் கொள்வனவு | 01.2 | 4,453,970 | 999,690 | 2,962,091 |
| மூலதன மானியம் - கொள்திறன் கட்டியெழுப்பல் | 01.3 | 5,774,030 | 5,815,310 | 9,897,909 |
| | | 115,788,000 | 90,250,000 | 86,100,000 |
| கழி - பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு மாற்றம் | | 4,453,970 | 999,690 | 2,962,091 |
| பொதுத் திறைசேரிக்கு திருப்பியனுப்பவுள்ள மானியம் | | | - | |
| | | 111,334,030 | 89,250,310 | 83,137,909 |
| **02. செயற்திட்ட மானியங்கள்** | | | | |
| ILO மானியங்கள் | 02.1 | | 162,800 | 792,283 |
| குறுகிய கால நிகழ்ச்சித்திட்டம் (உள்ளூர்/வெளியூர்) | 02.2 | **9,243,043** | **291,127** | **16,686,351** |
| SSDP | 02.3 | 34,255,793 | 27,030,236 | 8,712,940 |
| | | 43,498,836 | 27,484,163 | 26,191,574 |
| | | | | |
| **03. ஈட்டப்பட்ட தொழிற்படு வருமானம்** | | | | |
| நிறுவக பதிவுக் கட்டணங்கள் | 03.1 | 1,901,300 | 1,792,200 | 2,464,500 |
| பாடநெறி தராதர அங்கீகாரக் கட்டணங்கள் | 03.2 | 3,371,900 | 2,097,300 | 2,075,100 |
| NVQ சான்றிதழ் அச்சடிப்பு வருமானம் (தேறிய) | 03.3 | 4,803,385 | 4,140,790 | 2,130,915 |
| கணிப்பீட்டாளர் பதிவுக் கட்டணங்கள் | 03.4 | 56,500 | 369,250 | 25,500 |
| வெளியீடுகள் விற்பனை | 03.5 | 1,517,847 | 556,766 | 516,180 |
| பதிவுப் புத்தக விற்பனையில் தேறிய வருமானம் | 03.6 | 1,241,329 | 1,161,896 | 937,026 |
| | | 12,892,261 | 10,118,202 | 8,149,221 |
| | | | | |
| **04. ஈட்டப்பட்ட தொழிற்பாடற்ற வருமானம்** | | | | |
| காலாவதியான பொருட்கள் விற்பனை | | 37,405 | - | 10,100 |
| தனிப்பட்ட பாவனைக்காக அமர்த்தப்பட்ட வாகனத்தின் வருமானம் | | 45,451 | 43,149 | 37,000 |
| மீளச்செலுத்த முடியாத வைப்பு | | 10,500 | - | - |
| ஏனைய வருமானம் | | | 2,400 | 42,400 |
| ரத்துசெய்யப்பட்ட காசோலைகள் | | | 56,687 | - |
| சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | | | - | 284,636 |
| மேலதிக தொலைபேசிக் கட்டணங்கள் மீட்பு | | 241,430 | 106,014 | - |
| | | 334,786 | 208,250 | 374,136 |

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய குறிப்புகள்

| | உப குறிப்பு | 2016 (ரூ.) | 2015 (ரூ.) | 2014 (ரூ.) |
|---|---|---|---|---|
| **05. பதவியணிக் கடன் வட்டி மற்றும் ஏனைய வட்டி வருமானம்** | | | | |
| ஆணைக்குழு கடன் வட்டி வருமானம் | | 79,853 | 52,185 | 69,539 |
| இடர்பாட்டுக் கடன் வட்டி | | 237,506 | 215,908 | 213,737 |
| விசேட முற்பண வட்டி | | 1,830 | 1,701 | 3,963 |
| நிலையான வைப்பு வட்டி | | 250,211 | 185,380 | 265,151 |
| | | 569,400 | 455,174 | 552,390 |
| **06. பணிப்பாளர் சபை மற்றும் செயற்குழு அவதானிப்பாளர்களுக்கான கொடுப்பனவு** | | | | |
| பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கான கௌரவக் கொடுப்பனவு | | 802,500 | 459,000 | 340,500 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களுக்கான கட்டணங்கள் | | 166,980 | 88,500 | 80,000 |
| | | 969,480 | 547,500 | 420,500 |
| **07. ஆளுக்குரிய ஊதியங்கள்** | | | | |
| சம்பளமும் கூலியும் | | 49,008,089 | 39,245,377 | 31,312,332 |
| ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு | | 5,685,581 | 4,848,704 | 3,513,607 |
| ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு | | 1,440,940 | 1,211,680 | 877,174 |
| மேலதிக மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | | 1,260,925 | 892,541 | 857,939 |
| பயிலுநர்களுக்கான கொடுப்பனவு | | 1,336,500 | 1,753,000 | 1,680,500 |
| தலைவருக்கான கொடுப்பனவு | | 900,000 | 427,500 | 200,000 |
| | | 59,632,035 | 48,378,802 | 38,441,552 |
| **08. பிரயாணச் செலவு** | | | | |
| உள்ளூர் | | 468,646 | 321,364 | 331123 |
| வெளியூர் | | 1,344,845 | 1,367,644 | 718148 |
| | | 1,813,491 | 1,689,008 | 1049271 |
| **09. வழங்கல்களும் பயன்படுத்திய நுகர்வுகளும்** | | | | |
| அச்சடிப்பு, காகிதாதி மற்றும் அலுவலக தேவைகள் | 09.1 | 3,258,382 | 3,548,095 | 3,672,318 |
| எரிபொருட் செலவு | 09.2 | 2,348,666 | 1,767,366 | 2,980,432 |
| பிரயாணச் செலவு | | 8,863 | 11,948 | 6,400 |
| சீருடை | | 126,000 | 90,000 | 87,950 |
| புதினப்பத்திரிகை மற்றும் சஞ்சிகைச் செலவு | | 115,020 | 94,425 | 105,142 |
| ஏனைய சேவைச் செலவு | | 171,516 | 286,588 | 226,761 |
| உபசரிப்புச் செலவு | | 314,533 | 262,207 | 214,052 |
| பிரதிபண்ணிச் செலவு | | 5,500 | 2,900 | 8,700 |
| பதவியணி நலன்புரி | | 290,430 | 115,390 | |
| | | 6,638,910 | 6,178,919 | 7,301,755 |

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய குறிப்புகள்

| | உப குறிப்பு | 2016 (ரூ.) | 2015 (ரூ.) | 2014 (ரூ.) |
|---|---|---|---|---|
| **10. பராமரிப்புச் செலவு** | | | | |
| மோட்டார் வாகன காப்புறுதி மற்றும் பராமரிப்பு | 10.3 | 3,447,090 | 3,217,620 | 3,000,351 |
| ஆதனம், இயந்திரம் மற்றும் பொறித்தொகுதி பராமரிப்பு | | 141,053 | 180,358 | 209,915 |
| கட்டிடம் மற்றும் கட்டமைப்பு பராமரிப்பு | | 23,861 | 145,278 | 271,985 |
| கணினி பராமரிப்பு | | 217,195 | 105,501 | 249,214 |
| எந்திர மற்றும் மின்னணு பொருட்கள் | | 106,161 | 286,011 | 33,377 |
| பொதுப் பராமரிப்பு | | 61,155 | 50,816 | 221,492 |
| | | 3,996,515 | 3,985,584 | 3,986,334 |
| | | | | |
| **11. புனரமைப்புச் செலவு** | | | | |
| வாகன புனரமைப்பு | | 915,550 | 555,705 | 1,209,926 |
| "ஆதனம், இயந்திரம் மற்றும் பொறித்தொகுதி புனரமைப்பு" | | 459,800 | 385,333 | 253,467 |
| கட்டிடம் மற்றும் கட்டமைப்பு புனரமைப்பு | | 67,703 | 302,504 | 612,950 |
| | | 1,443,053 | 1,243,542 | 2,076,343 |
| | | | | |
| **12. ஒப்பந்த சேவைகள்** | | | | |
| தொலைத்தொடர்பு | | 2,584,912 | 1,925,928 | 1,639,596 |
| தபாற் கட்டணங்கள் | | 526,870 | 356,474 | 189,885 |
| மின் கட்டணங்கள் | | 2,740,253 | 2,815,787 | 3,092,429 |
| குடிநீர் | | 157,463 | 182,008 | 175,610 |
| வாடகை, வரிகள் மற்றும் வீதங்கள் | | 190,400 | 131,040 | 131,040 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | | 1,231,650 | 1,231,650 | 1,179,210 |
| சுத்திகரிப்புக் கட்டணங்கள் | | 1,329,267 | 1,329,247 | 1,145,881 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | 250,000 | 250,000 | 225,000 |
| சட்டஞ்சார் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் | | 162,500 | 75,000 | 30,000 |
| பருவவெளியீடுகளுக்கான சந்தாக் கட்டணங்கள் | | 46,129 | 31,250 | 59,377 |
| சந்தா மற்றும் அங்கத்துவக் கட்டணங்கள் - உள்ளூர் | | | 13,777 | 13,359 |
| சந்தா மற்றும் அங்கத்துவக் கட்டணங்கள் - வெளியூர் | | 860,371 | 936,546 | 391,500 |
| பதவியணி பயிற்சி மற்றும் அபிவிருத்தி | | 13,480 | 13,929 | 13,990 |
| பணக் கடப்பு காப்புறுதி | | 664,276 | 717,924 | 639,041 |
| சேவை ஒப்பந்தங்கள் | | 10,757,571 | 10,010,560 | 8,925,918 |

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய குறிப்புகள்

| | உப குறிப்பு | 2016 (ரூ.) | 2015 (ரூ.) | 2014 (ரூ.) |
|---|---|---|---|---|
| 13. தொழிற்படு செலவு | | | | |
| நிறுவன பதிவுச் செலவு | 13.1 | 853,701 | 863,217 | 793,407 |
| நிதி மானியங்கள் | 13.2 | 1,318,435 | 3,477,557 | 4,337,159 |
| பாடநெறி தராதர அங்கீகாரச் செலவு | 13.3 | 1,041,279 | 1,654,933 | 1,413,858 |
| NVQ நிகழ்ச்சித்திட்ட செலவு | 13.4 | 31,380,277 | 15,195,262 | 11,153,450 |
| VET திட்ட அபிவிருத்திச் செலவு | 13.5 | 2,607,538 | 1,571,360 | 1,027,592 |
| மாகாண ஏநுவு திட்ட அபிவிருத்தி | | 526,938 | 290,025 | 2,851,968 |
| LMI nryT | 13.6 | 1,440,947 | 1,348,586 | 1,930,331 |
| தர முகாமைத்துவ முறைமை தாபிப்புச் செலவு | | | - | 18,790 |
| தேர்ச்சி தரங்கள் அபிவிருத்தி மற்றும் மொழிபெயர்ப்புச் செலவு | | 1,029,666 | 1,346,130 | 899,604 |
| TVET மேம்பாட்டிற்கான ஆராய்ச்சிச் செலவு | | 867,750 | 492,785 | 959,991 |
| நிதி உதவி கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்புச் செலவு | | 43,800 | 134,246 | 219,941 |
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | | 117,336 | 158,388 | 86,056 |
| மாற்றக் கணக்கு | | | 750 | - |
| பெறுமானத்தேய்வு | | 10,709,174 | | |
| | | 51,936,841 | 26,533,239 | 25,692,147 |
| | | | | |
| 14. செயற்திட்டச் செலவு | | | | |
| ILO மானியங்களின் செலவு | 14.1 | | 162,800 | 792,283 |
| குறுகிய கால நிகழ்ச்சித்திட்ட செலவு | 14.2 | 7,910,780 | 333,234 | 16,686,351 |
| SSDP | 14.3 | 34,255,793 | 27,030,236 | 8,712,940 |
| | | 42,166,573 | 27,526,270 | 26,191,574 |

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய குறிப்புகள்

| | | | | செலவு | | |
|---|---|---|---|---|---|---|
| | குறிப்பு | 01.01.2015 | கூட்டல் | | நீக்கல் | 12.31.2015 |
| **15. ஆதனம், இயந்திரம் மற்றும் பொறித்தொகுதி** | | | | | | |
| வாகனங்கள் | 15.1 | 68,451,255 | | | - | 68,451,256 |
| தளபாடங்களும் பொருத்தல்களும் | 15.2 | 4,815,145 | 436,650 | | - | 5,251,795 |
| பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 15.3 | 314,947 | 155,799 | | - | 470,746 |
| அலுவலக உபகரணங்கள் | 15.4 | 5,853,023 | 2,571,935 | | - | 8,424,958 |
| கணினிகள் மற்றும் பாகங்கள் | 15.5 | 20,812,347 | 6,569,909 | | - | 27,382,256 |
| நூலக புத்தகங்கள் | 15.6 | 852,215 | 49,177 | | - | 901,392 |
| பெயர்ப் பலகை | 15.7 | 519,290 | - | | - | 519,290 |
| கணினி மென்பாகம் | 15.8 | 6,944,979 | - | | - | 6,944,979 |
| | | 108,563,201 | 9,783,470 | | | 118,346,672 |
| பெறுமானத்தேய்வு | | | | | | |
| | % | 01.01.2016 | வருடத்திற்கான | | நீக்கல் | 12.31.2016 |
| வாகனங்கள் | 25% | 44,694,236 | 5,939,232 | | | 50,633,558 |
| தளபாடங்களும் பொருத்தல்களும் | 10% | 2,761,573 | 208,649 | | | 2,970,222 |
| பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 25% | 131,942 | 137,286 | | | 269,228 |
| அலுவலக உபகரணங்கள் | 25% | 4,091,260 | 625,646 | | | 4,716,906 |
| கணினிகள் மற்றும் பாகங்கள் | 33% | 15,285,298 | 3,154,261 | | | 18,439,559 |
| நூலக புத்தகங்கள் | 25% | 650,083 | 45,681 | | | 695,764 |
| பெயர்ப் பலகை | 25% | 388,961 | 32,582 | | | 421,543 |
| கணினி மென்பாகம் | 25% | 4,753,901 | 565,837 | | | 5,319,738 |
| | | 72,757,254 | 10,709,174 | | | 83,466,518 |
| | | 35,772,126 | | | | 34,880,154 |

| | உப குறிப்பு | 2016 (ரூ.) | 2015 (ரூ.) | 2014 (ரூ.) |
|---|---|---|---|---|
| **16. கடன்பட்டோர்** | | | | |
| தொழிற்பாட்டிலுள்ள கடன்பட்டோர் | 16.1 | 304,695 | 285,195 | 174,195 |
| அளிக்கப்பட்ட பதவியணிக் கடன் | 16.2 | 7,577,725 | 7,171,506 | 7,163,067 |
| | | 7,882,420 | 7,456,701 | 7,337,262 |
| **வைப்புகளும் பெறுகைகளும்** | | | | |
| "பதவியணி அலுவலர்கள் மற்றும் ஏனையோருக்கான முற்பணம்" | 17.1 | 488,527 | 481,287 | 520,180 |
| "வெளி நிறுவகங்களிலிருந்து பெறப்பட வேண்டியவை" | 17.2 | 2,988,766 | 2,680,769 | 1,851,903 |
| பதவியணிநரிமிருந்து பெற வேண்டியவை | | 444,679 | 236,179 | 48,394 |
| முற்கூட்டி செலுத்துகை | 17.3 | 74,092 | 11,169 | 46,218 |
| தனிப்பட்ட டயலொக் கட்டண மீட்பு | | 23,754 | 17,303 | 10,492 |
| திரும்பிப்பெறக் கூடிய NVQ சான்றிதழ் அச்சடிப்புச் செலவு | 17.4 | 1,067,213 | 500,352 | 500,352 |
| அரச துறை மானியங்களில் முற்பண செலுத்துகை | | | 126,500 | 322,152 |
| பாதிப்புற்றவர்களுக்கான மானியங்களில் முற்பண செலுத்துகை | | | - | 711,995 |
| | | 5,087,031 | 4,053,559 | 4,011,686 |

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய குறிப்புகள்

| | உப குறிப்பு | 2016 (ரூ.) | 2015 (ரூ.) | 2014 (ரூ.) |
|---|---|---|---|---|
| **18. கையிருப்பு** | | | | |
| கையிருப்பு - பதிவுப் புத்தகங்கள் | | 614,842 | 549,963 | 790,873 |
| கையிருப்பு - காகிதாதிகள் | | 704,258 | | |
| கையிருப்பு - சான்றிதழ் | | 797,900 | | |
| | | 1,319,100 | 549,963 | 790,873 |
| | | | | |
| **19. காசும் காசு நிகர்த்தவையும்** | | | | |
| மக்கள் வங்கி Y.M.B.A.கிளை A/c No-078-1001-722-66044 | | 5,247,176 | 4,364,813 | 334,756 |
| மக்கள் வங்கி Y.M.B.A.கிளை A/c No-078-1001-122-68324 | | 7,976,652 | 38,712 | 897,346 |
| மக்கள் வங்கி Y.M.B.A.கிளை A/c No-078-1001-422-66050 | | 180,789 | 365,062 | 353,015 |
| அழைப்பு வைப்பு | | 4,147,135 | 3,896,924 | 7,213,557 |
| | | 17,551,752 | 8,665,511 | 8,798,674 |
| | | | | |
| **20. மாற்ற ஒதுக்கம்** | | | | |
| மாற்ற ஒதுக்கம் - வருட ஆரம்பத்தில் | | -1,316,891 | 625,948 | (1,484,629) |
| ஆரம்ப மீதியில் சரிக்கட்டல் (TVET வழிகாட்டி வருமானம்) | | 33,731 | - | 20,000 |
| நிலையான வைப்பு வட்டி திருத்தம் | | 219,469 | - | - |
| வருடத்திற்கான தேறிய மேலதிகம்/ (போதாமை) | | -15,982 | (1,947,804) | 2,250,877 |
| ஆரம்ப மீதி சரிக்கட்டல் | | | (7) | 5 |
| முன்னைய வருட சரிக்கட்டல் | | 1,378,797 | 4,972 | (160,305) |
| | | 299,124 | (1,316,891) | 625,948 |
| | | | | |
| **21. பிற்போடப்பட்ட வருமானம்** | | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் - வருட ஆரம்பத்தில் | | 35,772,127 | 46,246,950 | 35,248,338 |
| | | | | |
மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை மிகை காணப்பட்டபோதும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. எனினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 41,489,597 தொகையான பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 39,198,869 வரை குறைவடைந்திருந்த போதிலும் மீண்டும் 2014 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக அதிகரிப்பு ஏற்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது அது ரூபா 71,844,533 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி முறைமையைத் திட்டமிடல், ஒருங்கிணைத்தல், அபிவிருத்தி செய்தல், தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்களை வழங்குவதற்காக தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் சகல மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சிக் கோட்பாட்டைப் பேணுதல் என்பன நிறுவனத்தை ஸ்தாபித்ததன் நோக்கமென குறிப்பிடப்பட்டிருந்தது. அந்நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 11 (4) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச ரீதியில் திட்டங்களைத் தயாரிக்கும் தேவை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 யூன் 30 ஆந் திகதி வரையும் மேல் மாகாணத்திற்காக தொழில்சார் கல்வி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஏனைய மாகாணங்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்த திட்டத்தின் பிரகாரம், அந்த மாகாணங்களில் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பின்தொடர் நடவடிக்கைகள், ஒருங்கிணைத்தல் அல்லது அபிவிருத்தி செய்தல் மற்றும் திட்டமிடல் என்பன ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் பத்திரத்தை வழங்குவதற்கான திட்டமொன்றாக தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் (NVQ) வழங்கும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், ஆணைக்குழுவினால் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அத்திட்டம் மேற்பார்வை மற்றும் பரீட்சிப்பதற்காக போதியளவான பதவியணியினர் நிறுவனத்தில் இல்லாதிருக்கும் போது மதிப்பீட்டாளர்களை நியமித்தல் மற்றும் கொடுப்பனவு செய்யும் நடவடிக்கைகள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டமையால் மதிப்பீட்டாளர்களை நியமித்தல், மதிப்பீடு செய்தல், மதிப்பீட்டாளருக்கு கொடுப்பனவு செய்தல் மற்றும் அந்த சான்றிதழ்களை விநியோகித்தல் போன்ற சகல நடவடிக்கைகளும் தாமதமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) அதிகாரச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கட்டளை அல்லது விதிகள், பயிற்சி நிறுவனம் மற்றும் பயிற்றுவிப்பாளர்களால் பின்பற்றப்படுவதாக நிறுவன ரீதியான பரீட்சிப்பின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான பதவியணியினர் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்படாதிருந்த போதிலும், அதிகாரச்சட்டத்தின் 50 மற்றும் 51 ஆம் பிரிவுகளின் மூலம் அந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சியளித்தல் அதிகாரசபைக்கு பரீட்சகர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அவர்களை வருவித்தேனும் அந்த பரீட்சிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) ஆணைக்குழுவின் கீழ் 400 அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் புதிதாக பதிவுசெய்வதற்காக மதிப்பீடு செய்வதற்காகவும் 370 நிறுவனங்கள் பதிவினை புதுப்பிப்பதற்காகவும் மதிப்பீடு செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக முறையே 259 நிறுவனங்களும், 339 நிறுவனங்களும் மாத்திரமே மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(உ) செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அரசாங்க துறைகளில் 503 பாடநெறிகளும், தனியார் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் 108 பாடநெறிகளும் தேசிய பயிற்சி மட்டத்தின் பிரகாரம் தரப்படுத்தலுக்காக மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்த போதிலும், உரிய மாதிரிகளைப் பூர்த்தி செய்த 392 பாடநெறிகள் மாத்திரம் தரப்பட்டிருந்தது. தரங்களைப் புதுப்பிப்பதற்காக அரச துறை, தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் 259 பாடநெறிகள் மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டு அதில் 177 பாடநெறிகளின் தரம் புதுப்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் இலக்கின் பிரகாரம் திறன் ஆணைக்குழுக்களில் தொழில் முயற்சித்திட்டத்தின் (Business Plan) பிரகாரம், அந்த ஆணைக்குழுவினால் ஆரம்ப ஆண்டிலிருந்து வருமானம் உழைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்காக திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 14,201,077 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(எ) திறன் பிரிவிற்காக அமுல்படுத்தப்பட்ட திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 79 மில்லியன்

ஒதுக்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது அதில் ரூபா 34.25 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பாடசாலையை விட்டுச் செல்கின்றவர்களுக்கு தொழில்சார் கல்வியில் ஈடுபடுத்துவதற்கான கையேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் ஊழியச் சந்தையின் தகவல்களை நாளதுவரையாக்குவதற்காக ரூபா 8.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், உரிய பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாமையினால் அதில் 88 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் வேலைவாய்ப்பை பெற்றுள்ள 10 வெளிநாட்டு நிறுவனங்களது அதிகாரிகளுடன் இணைந்து இலங்கையின் தேசிய தொழில்சார் தகைமை மட்டத்தை சர்வதேச நிலைமைக்கு ஒத்ததாக செய்வதற்கு உறுதிப்படுத்தப்படுதல், தொழில்சார் பயிற்சி பிரிவின் நடவடிக்கைகள் மற்றும் மாணவர்களின் செயற்பாடுகள் தொடர்பான கொள்கைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆரம்ப அடிப்படை மதிப்பாய்வு (Baseline Survey) மற்றும் திறன் இடைவெளி மதிப்பாய்வு (Skill Gap Survey) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பரிந்துரை மற்றும் முன்மொழிவுகளை வழங்குதல் என்ற பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iv) தொழில்சார் தொழில்நுட்ப துறைகளுக்காக பால் கொள்கையொன்றைத் தயாரித்தல் மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வித் துறைகளின் பிரதிபிம்பங்களை மேம்படுத்துவதற்காக தொழில்சார் மேம்பாட்டு வேலைத்திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்துதல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அதிகாரச்சட்டத்தின் 37(ஆ) பிரிவின் பிரகாரம் திறன்களை அங்கீகரித்து தயாரிக்கும் பொறுப்பு தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சியளித்தல் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதனை செல்லுபடியாக்குதல் ஆணைக்குழுவினால் செய்ய வேண்டியுள்ளது. எனினும்,

2016 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழுவினாலும் அங்கீகரிக்கப்பட்ட 14 புதிய திறக்னள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை அங்கீகரித்த திட்ட முறைமையின் பிரகாரம் கைத்தொழிலின் பங்களிப்பை பெற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தேசிய தொழிற்தகைமை மட்டங்கள் (NVQ) 1 முதல் 7 வரை இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது தரப்படுத்தப்பட்ட சகல தொழில்சார் நிறுவனங்களுக்காகவும் கையளிக்கப்பட்ட உயர் சான்றிதழ் தேசிய தொழிற் தகைமையின் 6 ஆம் மட்டத்தில் சான்றுறுதிப்படுத்தப்பட்டமை செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. எனினும், அந்த மட்டத்திற்காக 06 சான்றிதழ் பத்திரங்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் தேசிய தொழிற்தகைமையின் 05 ஆம் மட்டத்திற்காக 87 சான்றிதழ்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் தேசிய தொழிற் தகைமைகளில் ஆகக்கூடிய மட்டங்களில் தகைமையுள்ளவர்களை உருவாக்கல் குறைந்த மட்டத்தில் பேணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஒ) அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில்சார் பயிற்சி பாடநெறிகளை தரப்படுத்தப்பட்ட மட்டத்தில் கொண்டு செல்லும் நோக்கில் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நிதியுதவிகளை வழங்கும் வேலைத்திட்டமொன்று ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிறுவனங்களைத் தெரிவு செய்வதற்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய மாதிரிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அரச துறையில் பயிற்சி நிலையம், நிதி உதவிகளை வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது தெரிவு செய்யப்படாதிருந்ததுடன் தனியார் துறையில் 03 நிலையங்களில் 04 பாடநெறிகளுக்கு ரூபா 856,835 நிதி உதவி வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், தெரிவு செய்யும் செயற்பாடுகளின் தாமதத்தின் காரணமாக, 2016 ஆம் ஆண்டில் எந்த நிறுவனத்திற்கும் பணத்தை மீளளிப்புச் செய்ய முடியாதிருந்ததுடன் 2017 மார்ச் 30 வரையிலும் மீளளிப்புச் செய்யப்படாத பணம் ரூபா 336,910 ஆகும். மேலும், 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளில் ரூபா 35,652,780 தொகைகள் நிதி உதவி வழங்கப்பட்ட 20 நிலையங்களுக்குரிய பாடநெறிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், நோக்கமிடப்பட்ட பிரகாரம் தரப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்பயிற்சி நிறுவனங்களில் தேசிய தொழில்சார் தகைமைகளை வழங்கும் வகையில் திறன்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக மதிப்பீட்டாளர்களை நியமித்தல் மற்றும் அந்த மதிப்பீட்டிற்காக கொடுப்பனவு செய்தல், 2013 ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மதிப்பீட்டாளர்களின் தேவையினை சரியாக மதிப்பீடு செய்து கோரப்பட்ட பிரகாரம் போதியளவான நபர்களின் எண்ணிக்கையொன்றைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக மேலும் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ஆட்சேர்க்கப்பட்ட மொத்த மதிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 2,165 ஆக இருந்த போதிலும், அம்மதிப்பீட்டாளர்கள் செயற்படு சேவையில் ஈடுபட்டிருக்கின்றமையை உறுதிப்படுத்துவதற்காக காலரீதியில் அந்த தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையில் தேசிய திறன் மட்டத்தில் வழங்குவதற்காக பரிசோதனைகளை நடாத்துவதற்கு தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சியளித்தல் அதிகாரசபையில் 42 பாடநெறிகளுக்காக மதிப்பீட்டாளர்களை நியமிப்பதற்காக கோரப்பட்டு 02 மாதங்கள் முதல் 13 மாதங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும் ஆணைக்குழுவினால் அந்நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையில் தேசிய திறன் மட்டத்தை வழங்குவதற்காக பரிசோதனைகளை நடாத்துவதற்கு மதிப்பீட்டாளர்கள் நியமிக்கப்பட்டு 03 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரை கடந்திருந்த போதிலும், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சியளித்தல் அதிகாரசபையின் மதிப்பீட்டு செயற்பாடுகள் 111 சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்படவில்லை.

(iv) தேவைகளை சரியாக இணங்காமல் நிதிஏற்பாடு வழங்கப்பட்டமையின் காரணமாக செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் மதிப்பீட்டாளருக்கு கொடுப்பனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 14.45 மில்லியன் ஆக இருந்த போதிலும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் ரூபா 24,271 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆணைக்குழுவின் கணக்கு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட திபஸ் கணனி கணக்கீட்டு முறைமை 2017 மே மாதம் முதல் செயற்படாதிருந்தமையால் உள்ளடக்கப்பட்டிருந்த தரவுகள் முழுமையாக அழிவடைந்திருந்தது. ஆணைக்குழுவினால் கணனியிலிருந்து வெளியே தரவுகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு முறைமையும் பின்பற்றப்படாமையினால் அழிவடைந்திருந்த தரவு முறைமை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையும் முன்னைய நிலைக்கு கொண்டு வருவதற்கு முடியாதிருந்தது. மேலும், இது தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு தரவு முறைமை அழிவடைந்தமைக்கான காரணம் மற்றும் அதனுடன் தொடர்பான பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை கண்டறிவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தரவு முறைமை அழிவடைந்ததன் விளைவாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வு நடவடிக்கைகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டிய செலவினங்களுக்குரிய பட்டோலைகளைச் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது.

## 4.3 ஒப்பந்த நடைமுறைகள்

அமைச்சிற்கு சொந்தமான கட்டிடத்தின் 8 ஆவது மாடி மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் பயன்பாட்டிற்காக தயாரிப்பதற்கு 2016 நவம்பர் 24 ஆந் திகதி, ஒரு மாத ஒப்பந்த காலத்தின் கீழ் ரூபா 6,575,375 பெறுமதியில் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், மதிப்பீட்டில் அந்த மாடிக்குரிய தேவையான நீர், மலசலகூடம் போன்ற வசதிகளை வழங்குதல் உள்ளடக்கப்படாதிருந்தமையால் 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த மாடியை பயன்படுத்த முடியாதிருந்தது.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 116 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 96 ஆனமையால் வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை 20 ஆகக் காணப்பட்டதுடன் அத்தியாவசிய பதவியான நிர்வாக உத்தியோகத்தர் பதவியும் அந்த வெற்றிடத்தில் காணப்பட்டது.

(ஆ) ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவை மட்டத்தின் பதவிக்காக கோரப்பட்ட உள்ளக விண்ணப்பதாரர் கனிஷ்ட முகாமைத்துவ சேவை மட்டத்தின் 1 ஆம் தரத்தில் 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு சேவை அனுபவம் பூர்த்தி செய்யாத உள்ளக உத்தியோகத்தர்களில் ஆறு பேர் உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும், மேலதிக தகைமைகள் மற்றும் அனுபவங்களுக்காக ஒவ்வொரு நபருக்கும் தனிப்பட்ட புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன.

## 4.5 நிதியத்தின் பயன்பாடு

பல்வேறு பணிகளுக்காக மூன்று செயற்திட்டங்களிலிருந்து கிடைத்து சேமிக்கப்பட்ட ரூபா 3,155,817 தொகையான வெளிநாட்டு உதவியில் பணத்தைப் பயன்படுத்துவதற்காக முறையான திட்டமொன்று இன்றி நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 05 ஆக இருந்த போதிலும், அதில் 02 உதவிப் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக போதியளவான பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளைச் செய்வதற்கு தடையாக இருந்தது. மேலும், திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்ட செலவினம் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும், உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 25 சதவீதம் முதல் 149 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வவ்போது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | 2016 மே மாதத்தின் போது கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமை செயலிழந்திருந்ததுடன் முறையான பிரகாரம் தரவுகளை வெளியே களஞ்சியப்படுத்தாமையினால் (Back up) கணனி தரவுகள் அழிவடைந்தமை, தரவு முறைமை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டுவரப்படாமை, தரவு முறைமை அழிவடைந்தமை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அதற்காக பொறுப்புவாய்ந்த தரப்பினர் இனங்காணப்படாமை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டம் மூலம் செயற்திட்ட பயிற்சி பிரிவில் தீர்மானிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக நிறுவனத்திற்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், |

| | | |
|---|---|---|
| | | அதனைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | மனித வள முகாமைத்துவம் | மதிப்பீட்டாளர்களின் தேவையினை மதிப்பீடு செய்தல், ஆட்சேர்த்தல் மற்றும் கொடுப்பனவுகளுக்காக போதியளவான முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் அறிமுகப்படுத்தப்படாமை. |
| (ஈ) | உறுதிச்சீட்டுக்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு | கணக்காய்விற்காக உறுதிச்சீட்டுக்களை தயாரிக்கும் போது நிலுவை உறுதிச்சீட்டுடன் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரினால் பரீட்சிக்கப்படாமை, உறுதிச்சீட்டுக்களை பாதுகாப்பதற்காக முறையான நடவடிக்கை எடுக்காமை |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

17

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
பத்தரமுல்ல.

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2016 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14 (2) சீ பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயம் சம்பந்தமாக தங்களது இல. VTY/E/TVEC/1/16/21 மற்றும் 14 (2) சீ மற்றும் 2017.11.09 ஆம் திகதியிடப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்காக தற்போதைய நிலை மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்பனவற்றை இங்கு முன்வைக்கின்றோம்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.2.1 கணக்காய்வு குறைபாடுகள்**

(அ) இதற்கமைவாக ஒப்பந்த நடைமுறைகளை பூரணப்படுத்தி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி கணக்குகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா.3,153,000 பெறுமதியான சொத்துக்களுள் ரூபா 312,000 பெறுமதியான இரு பிரின்டர்களை தவிர்ந்த ஏனைய அனைத்து சொத்துக்களும் கிடைக்கப்பெற்றுள்ளதனை குறிப்பிட விரும்புகின்றேன்.

**(ஆ) 2016.12.31** ஆந் திகதியோடு முடிவடைந்த ஆண்டிற்கான தயாரிக்கப்பட்ட கணக்கீட்டுக்கூற்றுக்களுக்கு இணங்க மொத்தமாக காகிதாதிகள், மாணவர் தேர்ச்சி புத்தகம் மற்றும் சான்றிதழ்களின் பெறுமதி காட்டப்பட்டுள்ளது. தொழிற்கல்வி பயிற்சித் திட்டக் கையேட்டின் எண்ணிக்கையானது சிறு குறிப்பாக வெளியிடப்பட்டுள்ளதோடு எதிர்வரும் ஆண்டிலிருந்து கணக்கீடுகளை தயார்படுத்துகையில் இதன் பெறுமதியினையும் மொத்தக் கையிருப்பில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.

(இ) 2015 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட இறுதி கணக்குகளுக்கு அமைவாக அட்டுறு செலவுகள் கணக்கு கையிருப்பில் ரூபா 1,459,848 காணப்பட்டதோடு அது 2016 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் ஆரம்ப இருப்பாக உள்ளடக்கப்பட வேண்டும்.

அதனை அடிப்படையாகக் கொண்டு 2015 ஆம் ஆண்டின் அட்டுறு செலவுகள் அக்கணக்கிற்கு பற்றிடப்பட்டுள்ளது. மேலும் 2016 ஆம் ஆண்டில் அச்சுப்பதித்தலுக்கு செலவிடப்பட்ட தொகையானது இக்கணக்குகளில் சேர்க்கப்படவில்லை என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன்.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் கணக்கு அறிக்கைகளுக்கு அமைவாக 2015 ஆம் ஆண்டின் இறுதியில் அட்டுறு ஆராய்ச்சி செலவுக் கணக்கில் ரூபா 1,459,848 கையிருப்பில் காணப்படுவதனை குறிப்பிட விரும்புவதோடு இக்கணக்கிற்கு ரூபா 212,795 வரவிடப்பட்டுள்ளமையானது செலுத்த வேண்டிய அட்டுறு மற்றும் ஆராய்ச்சி கணக்கிற்கு வரவிடப்படவேண்டிய தொகை தவறுதலாக, செலுத்த வேண்டிய தனியார் துறை மூலதன பிரதான கணக்கிற்கு வரவிடப்பட்டிருந்தமையினால், அதனை சரி செய்வதற்காகவாகும்.

(உ) ஊழியர் பணிக்கொடை படிகள் சரியாக கணக்கிடப்பட்டுள்ள அதேவேளை அது அதிகமாக கணக்கிடப்பட்டுள்ளது என்பது தொடர்பாக தகவல்கள் வழங்கப்படின் அது தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய முடியும் என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன்.

(ஊ) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் வருடத்தின் இறுதியில் மொத்தமாக உள்ள சகல புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் மதிப்பிடப்பட்டு கணக்கு அறிக்கைகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுவேன்.

(எ) நிறுவகத்தின் கணக்குக் கொள்கைகளுக்கு அமைவாக மீதி கணக்கிடப்பட வேண்டியது குறித்த சொத்துக்களை கொள்வனவு செய்த தினத்திலிருந்தாகும். குறிப்பிடப்பட்டுள்ள 15 சொத்துக்களின் மீதி கணக்கிடுவதனை மீள் பரிசீலனை செய்து சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவேன்.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) இம்மாற்றத்திற்கு காரணமாக 2016.12.31 ஆந் திகதிக்கு கொள்வனவு செய்யும் நடைமுறைகளை பூரணப்படுத்திய சொத்துக்களின் பெறுமதியினை கணக்குகளுள் சேர்த்துக் கொண்டிருப்பினும் அச்சொத்துக்கள் 2016.12.31 ஆந் திகதிக்கு நிலையான சொத்துக்களின் ஆவணத்தினுள் சேர்த்துக் கொள்ளாமையினாலாகும்.

(ஆ) பரிமாற்று ஒதுக்கக் கணக்கின் வித்தியாசத்தினை கண்டறிந்து அதனை சரி செய்வதற்கு தேவையான குறிப்புக்களை எடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கடன் கொடுத்தோர் தொடர்பான காலப்பகுப்பாய்வு மற்றும் ஊழியர் முற்பணம் தொடர்பாக பராமரிக்கப்படுகின்ற நாட்குறிப்பானது கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய வேறு செலவுகள் மற்றும் வேறு நிறுவகங்களிலிருந்து கிடைக்க வேண்டிய நிதி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வினை 2017 ஆம் ஆண்டு தொடக்கம் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன். பிரதானமாக பட்டோலை குறிப்புக்கள் முற்பணக் கொடுப்பனவிற்கு பயனபடுத்தப்படுகின்றன. அக்கொடுப்பனவுகள் தொடர்பான சகல எழுத்து மூல சாட்சிகள் அப்பட்டோலை பற்றுச் சீட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இறுதிக் கணக்குகளை தயார்படுத்துகையில் பயன்படுத்தப்படுகின்ற பட்டோலை குறிப்புக்களுக்கு எழுத்து மூல சாட்சிகள் இணைக்கப்படவில்லை என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன்.

உதாரணமாக- மீதியைப் பரீட்சிப்பதற்கான பட்டோலை குறிப்பு (ரூபா 10,709,173.61)

திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் அறவிடப்பட வேண்டிய நிதி தொடர்பாக பயன்படுத்தப்பட்ட பட்டோலை குறிப்பு (ரூபா 1,841,761.41)

**2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) வரி அமைச்சின் மூலம் 2017 ஆம் ஆண்டிற்கான குறித்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளமையால் அதன் மூலம் கிடைக்க வேண்டிய தொகையினை மீளச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

(ஆ) ஊழியர் கடன் கணக்கில் பதவி விலக்கப்பட்ட ஊழியர்களுக்கு 2017.08.20 ஆந் திகதிக்கு முன்னர் குறித்த கடன் தொகையினை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு அவ்வாறு இல்லையெனில் பிணையாளிகளிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

(அ) பதிவு செய்யப்பாத நிறுவகங்களை பதிவு செய்வதற்காக போதுமான அதிகாரங்கள் 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டம் காணப்படாமையினால் பதிவு செய்யாமை தொடர்பாக தண்டனை வழங்க முடியாமை.

நிறுவகங்களின் பதிவு மற்றும் பதிவினை புதுப்பித்தலுக்காக நிறுவகங்கள் விண்ணப்பிக்காமை.

(ii) பதிவு செய்யப்பாத நிறுவகங்களை பதிவு செய்வதற்காக போதுமான அதிகாரங்கள் 1990 ஆம் ஆண்டின்

20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டம் காணப்படாமையினால் பதிவு செய்யாமை தொடர்பாக தண்டனை வழங்க முடியாமை.

நிறுவகங்களின் பதிவு மற்றும் பதிவினை புதுப்பித்தலுக்காக நிறுவகங்கள் விண்ணப்பிக்காமை.

தேசிய தொழிற் திறன் தகைமைகளுக்கு தேவையான அறிவுறுத்தல்களை பூர்த்தி செய்யாமை.

வியாபார பதிவு செயன்முறையில் தொழிற் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் TVECஇன் பதிவினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று "சமாகம் மெதுர" மற்றும் வியாபாரப் பதிவினை வழங்கும் மாகாண சபை நிறுவகங்கள் தொர்பாக அறிவுறுத்தல்.

(ஆ) (i) வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு குறித்த காலப்பகுதியில் தேர்ச்சிப்பெறாத காசோலைகள் தொடர்பாக விசாரிக்கப்பட்டு அதற்கமைவாக வங்கிக்கணக்கிணக்கக்கூற்றுக்களை புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

(ii) இவற்றினுள் ஒரு காசோலையானது Lanka Bell நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட காசோலையாதலால் அதனை செல்லுபடியற்றதாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமையானது அது தொடர்பான தகவல்கள் கேட்கப்பட்டுள்ளமையினாலாகும். மேலும், குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய காசோலைகள் கணிப்பீட்டுக் கட்டணமாகவும் கணிப்பீட்டாளர்களுக்கும் வழங்கப்பட்ட காசோலைகளாகும்.

இக்காசோலைகள் எப்போதும் திகதி பிற்போடலுக்கு உட்படுகின்றமையினால் செல்லுபடியற்றதாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**4.1 செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயல்திறன்**

(அ) பிரதேச ரீதியாக தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை தயார்படுத்துகையில் 2009 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்று வருவதோடு இதுவரை 8 மாகாணங்களுக்கான மாகாண தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டமானது தயாரிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்திற்கான திட்டத்தினை தயாரிப்பதற்கு களனிப் பல்கலைக்கழகமானது ஆலோசகராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்ஆலோசனைக்குழுவானது பிரச்சினைகள் மற்றும் ஏனைய மாகாணங்களை விட மேல் மாகாணத்தில் நிலவுகின்ற சிக்கல் நிலையின் காரணமாக களனிப் பல்கலைக்கழகம் இவ்வறிக்கையை தயாரிப்பதற்கு முடியாது என்று அறிவித்ததோடு, எமது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் 2016.01.13 ஆந் திகதி முதல் களனிப் பல்கலைக்கழகத்தோடு ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தமானது செல்லுபடியற்றதாக்கப்பட்டது. களனிப் பல்கலைக்கழகத்தின் மூலம் பாதியளவு தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை மற்றும் சேகரிக்கப்பட்ட தரவுகள் வழங்கப்பட்டன. இவற்றினைப் பயன்படுத்தி TVEC நிறுவகத்தின் மூலம் அறிக்கையை முடிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும் அலுவலக ஆளணியினர் போதியளவு காணப்படாமையினால் 2018 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி சிற்றறையின் மூலம் நடாத்தப்படுகின்ற ஆராய்ச்சிக் கற்கையாக இத்திட்டத்தினை தயாரிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது.

இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள 8 மாகாண தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களிலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அத்தியாயங்களில் தெளிவாக மனித வளத்தின் தேவைகள் இனங்காணப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| வட மத்திய மாகாணம் | - 5 ஆவது அத்தியாயம் |
| ஊவா மாகாணம் | - 5 ஆவது அத்தியாயம் |
| மத்திய மாகாணம் | - 5 ஆவது அத்தியாயம் |
| சப்ரகமுவா மாகாணம் | - 3 ஆவது அத்தியாயம் |
| கிழக்கு மாகாணம் | - 3 ஆவது அத்தியாயம் |
| வடமேல் மாகாணம் | - 3 ஆவது அத்தியாயம் |
| தென் மாகாணம் | - 3 ஆவது அத்தியாயம் |
| வட மாகாணம் | - 4 ஆவது அத்தியாயம் |

இவ்வனைத்து தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பானது சகல நிறுவகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதோடு ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கணிப்பீட்டுச் செயன்முறையை துரிதப்படுத்தும் பொருட்டு 2017.06.06 ஆந் திகதி முதல் எமது அமைச்சிற்குட்பட்ட VTA, NAITA மற்றும் DTET போன்ற நிறுவகங்களுக்கு கணிப்பீட்டாளர்களை நியமிப்பதற்கு TVECயின் அனுமதிக்கு கீழ்ப்படிந்து அனுமதி வழங்குவதன் மூலம் ஏற்படும் தாமதத்தினை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதுவரை மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவகங்கள் எங்களால் தயாரிக்கப்பட்டுள்ள அளவீடுகளுக்கு அமைவாக கணிப்பீட்டாளர்களை தெரிவு செய்தல் இடம்பெறுவதனால் கணிப்பீட்டுச் செயன்முறையானது துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) 2016/10 ஆம் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கணிப்பீட்டாளர்களை விசாரணை செய்யும் அலகின் மூலம் இதுவரையில் 76 கணிப்பீடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பல கணிப்பீடுகளானது வார இறுதி நாட்களில் இடம்பெறுவதனால் எமது துறையின் மற்றும் ஏனைய துறைகளின் நிர்வாக அதிகாரிகளை ஈடுபடுத்தல் பிரச்சினைக்குரிய விடயமாகவில்லை.

மேலும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை இச்செயற்பாட்டிற்காக ஈடுபடுத்த முடியாமைக்கான காரணியாக அந்நிறுவகமானது பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் நிறுவகமாக உள்ளதால் ஏனைய நிறுவகங்களின் கணிப்பீடுகளை மேற்பார்வை செய்வதற்காக அதனை ஆற்றுப்படுத்தல் கடினமான காரியமாவுள்ளது. இதனை TVEC போன்ற பயிற்சியாளர்களை பயிற்றுவிக்காத நிறுவகத்தின் மூலம் மேற்பார்வை செய்தல் பொருத்தம் என்பது எமது அபிப்ராயமாகும்.

(ஈ) புதிய பதிவுகளுக்காக 400 நிறுவகங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டிருப்பினும் உண்மையில் 259 வரையிலான நிறுவகங்களே கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதோடு அரச மற்றும் தனியார் நிறுவகங்களை கணிப்பீடு செய்தலின் இலக்காக 370 நிறுவகங்கள் நிர்ணயிக்கப்பட்டிருப்பினும் 339 நிறுவகங்களே கணிப்பீடு செய்யப்பட்டமைக்கான காரணிகளாக கீழுள்ள காரணங்களை குறிப்பிட முடியும்.

1. பதிவு செய்தல் மற்றும் பதிவினைப் புதுப்பித்தலுக்காக விண்ணப்பிக்காமை
2. விண்ணப்பித்திருப்பினும் அதற்குரிய கட்டணத்தினை செலுத்தாமை
3. Online மூலம் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் முழுமையற்றிருத்தல்

    1. நிறுவக பதிவு செய்தல் தொர்பாக தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். 2017 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரை 7 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
    2. கொடுப்பனவுகளை செலுத்தாத நிறுவகங்களுக்கு தொலைபேசி மூலம் அறிவித்தல்.
    3. இணையத்தின் மூலம் விண்ணப்பிக்கும் முறை தொடர்பாக நிகழ்ச்சித்திட்டங்களின் போது வெற்றிகரமான முறையில் தெளிவுபடுத்தல்.
    4. வியாபார பதிவு செயன்முறையில் தொழிற் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் TVEC பதிவினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று "சமாகம் மெதுர" மற்றும் வியாபாரப் பதிவினை வழங்கும் மாகாண சபை நிறுவகங்கள் தொர்பாக அறிவுறுத்தல்.

(உ) அரச துறையின் 503 பாடநெறிகள் மற்றும் தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் 108 பாடநெறிகள் தேசிய தொழிற் திறன் தகுதிகள் மட்டங்கள் தராதர அங்கீகாரத்திற்காக கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருப்பினும் வரிசைக்கிரமமாக தராதர அங்கீகாரத்திற்கு உட்படுத்தப்பட்ட பாடநெறிகள் முறையே 339 மற்றும் 53 ஆகும். இதற்கு காரணமாக 1. கணிப்பீடு செய்யப்பட்ட அரச துறையின் 503 பாடநெறிகளுள் 339 பாடநெறிகள் மற்றும் தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் 108 பாடநெறிகளுள் 53 பாடநெறிகள் தராதர அங்கீகாரத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ள சுட்டிகளை பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையை குறிப்பிட முடியும்.

1. பாடநெறி தராதர அங்கீகாரம் தொடர்பாக தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். 2017 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரை 7 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

2. அமைச்சிக் கீழுள்ள நிறுவகங்களின் தராதர அங்கீகார நடவடிக்கைகள் தொடர்பாக Online மூலம் தராதர அங்கீகாரத்திற்காக விண்ணப்படிவங்களை முன்வைத்தல் தொடர்பாக 02 விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி அறிவுறுத்தல்.

(ஊ) 2016 ஜுன் மாதம் 17 ஆந் திகதி திறன் துறை மன்றங்கள் கைத்தொழிற்துறைசார் உறவுகள் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படுகையில் 3 திறன் துறை மன்றங்கள் ஏலவே நிறுவப்பட்டிருந்தன. அதுவரை அத்திறன் துறை மன்றங்களின் செயற்பாட்டுக் குழுக்களின் கூட்டங்கள் நடைபெற்றிருப்பினும் அதனை நிறுவுவதற்குப் பொருத்தமான இடம், முகாமையாளர்கள் மற்றும் நிர்வாக உதவியாளர் போன்ற பதவிகள் சேர்த்துக் கொண்டிருக்கப்படவில்லை. ஆதலால் திறன் துறை மன்றங்களில் நிலையான ஊழியர்கள் காணப்படாமையினால் அவற்றின் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்ட விதத்தில் இடம்பெறவில்லை. தற்போது அத்திறன் துறை மன்றங்களுக்கு நிலையான ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவ்வனைத்து மன்றங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு அடிப்படை திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டமையால் வருமானமீட்டும் செயற்பாடுகளில் ஈடுபடாமையினால் அவ்வாறான வருமானமீட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுமாறு எங்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு தற்போது அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

(எ) (i) இங்கு தொழிற் சந்தை ஆய்வுப் பகுதி திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் நிருவகிக்கப்படுவதனால் குறிக்கப்பட்ட ரூபா 8.5 மில்லியன் தொகையானது தவறானதாகும். முகாமைத்துவ தகவல் முறைமைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை செலவழித்தல் தொடர்பாக அமைச்சின் திறன்கள் துறை அபிவிருத்தி வேலைத்திட்டத்திடம் (SSDP) அனுமதிக்காக முன்வைக்கப்பட்டபோதிலும் அவை அனுமதிக்கப்படாமையினால் செயற்படுத்த முடியாமல் போனது.

மேலும் தொழிற் சந்தை முறைமையினை மேம்படுத்தல் அவசியம் என்பது ஆணைக்குழுவின் தலைவரின் கருத்தாகவுள்ளதால் ஏனைய முறைமைகளை மேம்படுத்தல் மற்றும் அலுவலக ஆளணியினரை இணைத்துக்கொள்ளல் என்பனவற்றை நிறுத்த வேண்டி ஏற்பட்டது. அதன் விளைவாக ஏலவே அனுமதிக்கப்பட்ட பதவியான தொழிற் சந்தை பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குப் பதிலாக கைத்தொழிற்துறைசார் உறவுகள் பிரிவுக்கு பணிப்பாளர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட தீர்மானங்களின் காரணமாக அவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை செலவழிக்க முடியாமல் போனதோடு தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தொழிற் சந்தை தகவல் முறைமையினை மேம்படுத்துவதனை இடைநிறுத்த நேரிட்டது.

(ii) முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் தொழிற் சந்தை தகவல்களை புதுப்பித்தலானது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு எதிர்காலத்தில் திறன் மன்றங்களால் புதுப்பிக்கப்படுகின்ற மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல் முறைமைகள் குறித்த திறன் மன்றங்களின் வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்படுவதோடு அவ்வலைத்தளங்கள் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவின் வலைத்தளத்தோடு இணைப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

(iii) திறன் இடைவெளி மதிப்பீடானது கட்டுமானக் கைத்தொழிற்துறை திறன் துறை மன்றம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் திறன் துறை மன்றம் என்பனவற்றின் மூலம் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை திறன் துறை மன்றம் திறன் இடைவெளி மதிப்பீட்டினை நடாத்துவதனை ஆரம்பித்துள்ளது.

(iv) தொழில் தொழிநுட்பவியல் துறைக்காக பால்நிலை கொள்கையினை தயாரித்தல் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வித் துறையின் பிரதி பிம்பத்தினை அதிகரிப்பதற்கு தொழில்சார் வேலைத்திட்டத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவின் மூலம் 2017 ஆம் ஆண்டிற்கு நிகழ்த்துவதற்கு நியமிக்கப்பட்டுள்ளது.

(ஏ) 2016 ஆம் ஆண்டு வரை தேசிய தேர்ச்சித் தரங்களை தயாரித்தலானது தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இதுவரை அம்முறைமையினை பின்பற்றி தேசிய தேர்ச்சித் தரங்களை தயாரித்தல் இடம்பெறுகின்றது. தேர்ச்சித் திறன்களில் காணப்படுகின்ற சிக்கல் தன்மையின் காரணமாக அவற்றினை தயார் செய்வதற்கு அதிகளவு காலம் தேவைப்படுவதால் Industry Skill Sector Council மற்றும் துறை வல்லுநர்களை உள்ளடக்கிய குழுவொன்றினை உருவாக்கி அதன் மூலம் குறைந்த காலத்தினுள் தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்களை ஒன்றாக சேர்த்து ஒரு ஆவணமாக தயாரித்து தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு தலைவரினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவ் ஆலோசனைகளுக்கு அமைவாக புதிய முறைமையின் கீழ் 14 பாடவிதானங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. அவை இவ்வாணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளன.

(ஐ) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் மூலம் NVQ 6 மட்ட பாடநெறிகள் மிகக் குறைந்த அளவிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இவ்வாறான குறைந்தளவு சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரை 37 சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

(ஒ) பயிற்சி நிறுவகங்களுக்கு நிதி விருதளித்தலின் பிரதான நோக்காக பயிற்சி பாடநெறிகளை தராதர அங்கீகார மட்டத்திற்கு கொண்டு வருதலை குறிப்பிட முடியும். பாடநெறிகளை தராதர அங்கீகாரத்திற்கு உட்படுத்தும் போது அப்பாடநெறியினை நடாத்துவதற்கு தேவையான பயிற்சி உபகரணங்களின் எண்ணிக்கை தொடர்பாக கவனம் செலுத்தப்படும். இதற்கமைவாக, ஆணைக்குழுவிடம் நிதியளிப்பு விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த நிறுவகங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளால் முற்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். இங்கு பயிற்சி நிறுவகங்களால் கோரப்பட்டுள்ள பயிற்சி உபகரணங்கள் போதுமானதா என்பது தீர்மானிக்கப்படும். அரச மற்றும் தனியார் துறையில் நிதியுதவி விருதளிப்பிற்காக தெரிவு செய்யப்படும் நிறுவகங்கள் தராதர அங்கீகாரத்திற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு இயலுமான நிறுவகங்களாகவுள்ள அதேவேளை பாதிக்கப்பட்ட துறையானது பாடநெறி தராதர அங்கீகார நிபந்தனைக்கு உள்ளாகாது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவகங்களின் மூலம் அனுமதிக்கப்பட்ட உபகரணங்களுக்கு விலைமேற்கோள்கள் கோரப்படுவதோடு இவ்விலைமேற்கோள்கள் மற்றும் குறித்த கோப்புக்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் பரீட்சிக்கப்படும். உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பரிந்துரைகளுக்குப் பின் ஆணைக்குழுவின் அனுமதியினை பெற்றுக் கொள்ளும். பின் அமைச்சரின் அனுமதியினைப் பெற்று குறித்த பயிற்சி நிறுவகங்களோடு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படும். வருடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி மானியங்களுக்கிணங்க நிதி விருதளிக்கப்படுகின்ற நிறுவகங்களின் மற்றும் பாடநெறிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

2016 ஆம் ஆண்டிலும் திறன்கள் அபிவிருத்தி, தொழிற் பயிற்சி அமைச்சோடு தொடர்புடைய அரச துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதி விருதளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைவாக, அமைச்சோடு தொடர்புடைய மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட அரச துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதி விருதளிப்பதற்கு விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டன. இதற்கான பிரதிபலிப்புக்களின் விளைவாக கிடைக்கப்பெற்ற 14 விண்ணப்பப்படிவங்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண தொழிற் பயிற்சி நிறுவகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். எவ்வாறாயினும் இந்நிறுவகங்களின் மூலம் நடாத்தப்படுகின்ற பாடநெறிகள் தராதர அங்கீகார நிலையை அடைய முடியாது என்று முன் மதிப்பீட்டில் நிரூபனமானது. ஆகையால் அந்நிறுவகங்களுக்கு நிதி விருதளிக்காமலிருக்க முடிவு செய்யப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் நிதி விருதளிப்பிற்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவகங்கள்

| நிறுவகம் | நிதியுதவித் தொகை (ரூபா) | நிகழ்கால நிலைமை |
|---|---|---|
| I Soft College of ICT Education | 238,000.00<br>35,560.00 | நிதியுதவித் தொகையினை நிராகிப்பதாக அறிவித்துள்ளது. |
| Job Care Techncal Training Institute (JCTTI) | 63,350.00 | நிதியுதவித் தொகையினை நிராகிப்பதாக எழுத்து மூலம் அறிவித்துள்ளது.<br>புறக்கணிக்கப்பட்ட நிதி தொடர்பாக எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக பிரதிப் பணிப்பாளரிடம் (நிதி) எழுத்து மூலம் வினவப்பட்டுள்ளது. |
| Agio Sirilak Sahana Sewa Vocational Training Centre | 519,925.00 | நிதி மீள ஈடு செய்யப்பட்டுள்ளதோடு நிதி விருதளிக்கப்பட்ட குளிர்சாதன மற்றும் வாயுச் சீராக்கி பாடநெறியானது தற்போது தராதர அங்கீகாரப்படுத்தப்பட்டுள்ளது. |

நிதி விருதளிப்பு 2012-2016

| | நிறுவகம் | எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் / நிகழ்கால நிலைமை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ சோபித தொழிற் பயிற்சி நிலையம் | சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 2. | சமாதி பிரஜைகள் அபிவிருத்தி நிறுவனம் | சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 3. | சணச தகவல் தொழிநுட்பவியல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிறுவகம் | பாடநெறி தராதர அங்கீகாரத்திற்காக மீள் விண்ணப்பித்ததன் பின்னர் கணிப்பீடு நடாத்தப்படுகையில் ஆலோசகர் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்யாமையால் பாடநெறி தராதர அங்கீகாரப்படுத்தப்படவில்லை. முன் அறி-வினைப் பரீட்சிக்கும் முறையின் (RPL) ஊடாக தேவையான தகைமைகளை பூர்த்தி செய்து கொள்ளுமாறு ஆலோசகர் அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு அதன் பின் மீளக் கணிப்பீடு செய்வதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது. |
| 4. | | இணக்க சபையோடு ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் நிதி விருதளிக்கப்பட்ட மோட்டார் வாகன மின்சார தொழிநுட்பவியல் பாடநெறி தற்போது நடைபெ-றாமையினால் அதற்காக வழங்கப்பட்ட மின்கல மின்னூ ட்டி (Battery Charger), தராதர அங்கீகாரம் பெற்றுள்ள மோட்டார் வாகன மின்சார தொழிநுட்பவியல் பாடநெறிக்கும் அவசியப்படுவதனால் அப்பாடநெறிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 5. | புனித ஜோசப் தொழிநுட்ப நிறுவகம் | இணக்க சபையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்பாட்டின்படி நிதி விருதளிக்கப்பட்ட பாடநெறியினை தராதர அங்கீகாரப்படுத்துவதற்கு உடன்பட்டதோடு, இதற்காக ஆணைக்குழுவின் பாடநெறி அங்கீகாரத் துறையின் மூலம் கணிப்பீடு செய்யப்பட்டு தராதர அங்கீகாரப்படுத்துவதற்கான பரிந்துரைகள் செய்யப்பட்டன. |
| 6. | புதிய ஏ.சீ.எஸ். தொழிநுட்ப பயற்சி நி-றுவகம் | இணக்க சபையில் பங்கு கொண்டு பாடநெறியினை தராதர அங்கீகாரப்படுத்துவதற்கான உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது. இதற்கமைவாக, ஆணைக்குழுவின் பாடநெறி அங்கீகாரத் துறையின் மூலம் பாடநெறி தராதர அங்கீகாரத்திற்கான கணிப்பீடு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 7. | தொழிநுட்ப பயிற்சி நிறுவகம் (தச்சுத் தொழிநுட்பம்) மத்திய மாகாண சபை கஹவத்த, கம்பளை | கஹவத்த மர வேலை தொழிநுட்பவியல் நிறுவகத்தினை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதால் அந்நிலையத்திற்கு நிதியுதவியின் மூலம் வழங்கப்பட்ட Wood Turning Lathe Machine மற்றும் Jig Saw போன்ற இயந்திரங்கள் உடகமை அடபாகே மர வேலை தொழிநுட்பவியல் நிறுவகத்திற்கு வழங்குவதற்கு எமது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி வழங்கப்பட்டது. |
| 8. | தச்சுத் தொழிநுட்ப பயிற்சி பாடசாலை, நயாபாமுல, பத்தேகம | நிதி விருதளிப்பின் பிரதான நோக்காக பாடநெறி-களை தராதர அங்கீகார மட்டத்திற்கு கொண்டு வருதல-ாகும். நிதி விருதளிக்கப்பட்ட பாடநெறிகளை தராதர அங்கீகாரப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பாட-நெறிகள் தராதர அங்கீகாரப்படுத்தப்படாவிடின் நிதியுதவிக-ளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட உபகரணங்கள் மீளப் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 9. | மனித மற்றும் பொருளாதார அபிவிருத்தி பயிற்சி நிலையம், நக்கலகொடை, மெதகம, பிபிலை | |
| 10. | ........... ஒளி பொறியியல் பயிற்சி நிறுவ-கம், நக்கலகொடை, மெதகம | |
| 11. | சர்வதேச ஹோட்டல் பாடசாலை இல.48, புகையிரத நிலைய வீதி, கல்கிஸ்ஸ | 2017.06.03 ஆந் திகதி தராதர அங்கீகாரத்திற்கான கணிப்பீடு செய்யப்பட்டது. தராதர அங்கீகாரத்திற்கான ஆவணங்களில் குறைபாடுகள் நிலவுகின்றமையால் அக்குறைபாடுகளை திருத்தி மீளத் தயாரித்து தராதர அங்கீககாரத்திற்கு விண்ணப்பிப்பதற்கு ஒரு மாத காலம் வழங்கப்பட்டது.<br><br>இப்பாடநெறி தற்போது நடைபெறுவதனால் NVQ பெற்றுக் கொள்ளல் எமது நோக்காகும். |
| 12. | டெக் விதானிகா, குருணாகலை வீதி, சிலாபம் | தராதர அங்கீகாரத்திற்கான கணிப்பீடு செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளது.<br><br>இப்பாடநெறி தற்போது நடைபெறுவதனால் NVQ பெற்றுக் கொள்ளல் எமது நோக்காகும். |
| 13. | நவோதா கணினி கல்வி நிறுவகம், மஹரகமை | தராதர அங்கீகாரத்திற்கான கணிப்பீடு செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளது.<br><br>இப்பாடநெறி தற்போது நடைபெறுவதனால் NVQ பெற்றுக் கொள்ளல் எமது நோக்காகும். |
| 14. | தொழில்நுட்ப பயிற்சி நிலையம் மத்திய மாகாண சபை பிடியகெதர, வத்தேகமை | நிதியுதவிகளால் பெற்றுக் கொள்ளப்பட்ட உபகரணங்களை ஆணைக்குழுவிற்கு மீளக் கையளிக்குமாறு 2017.03.24 ஆந் திகதி மாகாண பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதோடு, அதற்கு சரியான விதத்தில் பதிலளிக்காமையால் 2017.07.31 ஆந் திகதி அது தொடர்பாக மீள நினைவுப்படுத்தப்பட்டதோடு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக விசாரிக்கப்பட்டது. |
| 15. | தொழிநுட்ப பயிற்சி நிலையம் (மரத் தொழிநுட்பம்) மத்திய மாகாண சபை கடுகன்னாவை | |
| 16. | தொழிநுட்ப பயிற்சி நிலையம் (மரத் தொழிநுட்பம்) மத்திய மாகாண சபை கலேவலை | |
| 17. | தொழிநுட்ப பயிற்சி நிலையம் (உலோக வேலை) மத்திய மாகாண சபை பொரலெஸ்ஸ வீதி, ஹங்குரன்கொத்தை | |

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

(i). எங்களால் கணிப்பீட்டாளர்கள் இணைக்கப்படுவதானது வழங்கப்பட்ட அலுவல்களுக்கு மாத்திரம் என்ற அடிப்படையில் மற்றும் அவர்கள் நிரந்தர சேவையில் இருந்தவாறு அலுவல்களில் ஈடுபடுவதனால் கணிப்பீட்டாளர்கள் அனைவரும் ஒரே மாதிரியில் சுறுசுறுப்பாக சேவையில் ஈடுபடாத சந்தர்ப்பங்கள் உள்ளன. அது அவர்களது அலுவல்களோடு கணிப்பீட்டினை திட்டமிடுவதற்குள்ள சிரமத்தினாலாகும்.

எமது கணிப்பீடுகள் வார இறுதியில் இடம்பெறுவதனால் இவ்வாறான நிலைமைகளை குறைத்துக் கொள்வதற்கு பயிற்சி நிறுவகத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ii) பாடநெறிகள் தராதர அங்கீகாரப்படுத்தப்படாமல் அல்லது தராதர அங்கீகாரத்தினை புதுப்பிக்காமல் கணிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில் எங்களால் கணிப்பீட்டிற்காக கணிப்பீட்டாளர்கள் நியமிக்கப்படமாட்டார்கள் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் மூலம் கணிப்பீட்டாளர்களை பெயரிட்டு அனுமதிக்காக TVEC நிறுவகத்திற்கு அனுப்பப்படுவதனால் நிகழ்காலத்தில் அவர்கள் தாமாகவே தாமதங்களை குறைத்துக்கொண்டு கணிப்பீடுகளை துரிதப்படுத்தல் இடம்பெற்றுள்ளது.

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்ட விடைகள் இதற்கும் பொருந்துகின்றது.

(iv) எங்களால் கணிப்பீட்டாளர்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகளுக்காக ரூபா 30 மில்லியன் கேட்கப்பட்டாலும், ரூபா 15 மில்லியன் மாத்திரமே திறைசேரியால் எமக்கு ஒதுக்கப்பட்டது. அமைச்சு மட்டத்தில் மீண்டும் ஒரு தடவை ரூபா 18.8 மில்லியன் திறைசேரியிடம் கோரப்பட்டதோடு இதுவரை ரூபா 10 மில்லியன் மானியமாக கிடைக்கப்பெற்றுள்ளது.

கணிப்பீட்டாளர்களின் கொடுப்பனவுகள் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் TVECஇற்கு சாற்றப்பட்டுள்ளது. கணிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவுகளுக்கு தேவையான மானியங்கள் 2014 ஆம் ஆண்டில் ஒதுக்கப்படாமையினால் அத்தினத்திலிருந்து கொடுப்பனவுகளில் பற்றாக்குறை நிலவுகின்றது. 2016 ஆம் ஆண்டில் அமைச்சின் தலையீட்டினால் மேலதிக மானியமாக ரூபா 15 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டதனால் இம்மேலதிக கொடுப்பனவுகளை வழங்க முடிந்தது.

(ஆ) கணினி கணக்கீட்டு பெக்கேஜ் 2017 ஆம் ஆண்டு மே மாதம் முதல் செயற்படாதிருந்தமையினால் அத்தரவுகளை மீள ஸ்தாபிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அம்முயற்சிகள் தோல்வியடைந்தன. அதற்கமைவாக ஆவணப்படுத்தப்பட்டிருந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை நாளதுவரையாக்குவதற்காக செயற்பட்டபோதும் புதிய கணக்கீட்டு பெக்கேஜ்ஜினை ஸ்தாபிப்பதற்காக 2017.10.20 ஆந் திகதி டென்டர் குழுவினால் அனுமதி வழங்கப்பட்டது. இதற்கமைவாக புதிய பெக்கேஜ்ஜிற்கு 2017 ஆம் ஆண்டில் ஆரம்ப குறிப்புக்களை உட்செலுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டவண்ணமுள்ளன.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

(அ) 10 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 05 உதவிப் பணிப்பாளர் பதவிகள் மற்றும் 01 தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களுள் முறையே அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு 774 விண்ணப்பப்படிவங்களும் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு 52 விண்ணப்பப்படிவங்களும் தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு 67 விண்ணப்பப்படிவங்களும் திறந்த போட்டிப் பரீட்சையொன்றினை நடாத்துவதற்காக தொழிநுட்பக்கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் பரீட்சை பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதற்கமைவாக ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சைகளை நடாத்தி பெற்றுக்கொள்ளப்படுகின்ற அதிக புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் அப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒக்டோபர் மாத இறுதியில் ஆட்சேர்ப்பினை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக 2017.06.07 ஆந் திகதி இரண்டாவது நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டுள்ளது.

(ஆ) ஆட்சேர்ப்பினில் உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வெளிவாரி தகைமைகள் காணப்படின் அவற்றினை கருத்திற் கொள்வதோடு அவர்கள் தற்போதும் பணியிலுள்ளதனால் அதற்கான முன்னுரிமையை வழங்கி மொத்த பதவித் தொகையில் 1/3 பங்கினை உள்வாரியாக இணைத்துக் கொண்டு அதன் மூலமாக எமது நிறுவனத்தின் அனைத்து உத்தியோகத்தர்களினதும் உற்சாகத்தினை அதிகரிப்பதற்கான ஒரு வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக் கொள்வதோடு வெளிவாரியாக 9 விண்ணப்பதாரிகளும் உள்வாரியாக 6 விண்ணப்பதாரிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இங்கு வெளிவாரி விண்ணப்பதாரிகளுள் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட 09 பேரும் உள்ளக விண்ணப்பதாரிகளுள் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட 06 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் (2016.06.08 மற்றும் 2016.09.13 ஆகிய இரு தினங்களிலும் ஆணைக்குழு ஆவணத்தினூடாக ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டது.)

### 4.5 நிதியத்தின் பயன்பாடு

இங்கு தேவை ஏற்படின் திரும்ப செலுத்துவதற்காக இப்பணத்தினை நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யாமல் நிலையான வைப்பினில் முதலீடு செய்யப்பட்டது. அதன் மூலமாக நிறுவகத்திற்கு வட்டி வருமானம்

கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதோடு ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அப்பணத்தினை செலுத்துமாறு குறித்த நிறுவகம் வேண்டுகையில் அக்கொடுப்பனவுகளை செய்வதற்கு முடியும்.

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர் உதவிப் பணிப்பாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்காக அலுவலர்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

**5.2 பாதீட்டு ஆவணக் கட்டுப்பாடு**

பாதீட்டுச் செலவுகள் மற்றும் உண்மைச் செலவுகளுக்கிடையிலான வேறுபாடானது குறைத்துக்கொள்ளும் விதமாக பாதீட்டு ஆவணத்தினை பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் காரணியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

**6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

(அ) எவ்வாறிருப்பினும் 2017 ஆம் ஆண்டு மே மாதத்தில் இக்கணக்கீட்டு முறைமை செயலிழந்தமையால் அத்தரவுகளை மீளக் களஞ்சியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு புதிய கணினி முறைமையொன்றினை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளவாறு தரவுகளை வெளியே களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன்.

(ஆ) இதுவரையில் தேசிய தொழிற் தகைமைகளுக்கான தொழிற்பாட்டுக் கையேட்டினை தயாரித்து ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை நடவடிக்கைகள் அதற்கமைவாக இடம்பெறுகின்றன.

(இ) தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் பிரிவினால் கணிப்பீடு செய்யப்பட்டு ஒரு மாதத்திற்குள் குறித்த உறுதிச்சீட்டுக்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து கொடுப்பனவுகளும் தனி நபர்களின் பெயர்களில் மற்றும் கணிப்பீட்டுக் கொடுப்பனவு ஆவணத்தில் குறிக்கப்பட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மல்காந்நி ஜயவர்த்தனா
பணிப்பாளர் நாயகம்

பிரதிகள் - செயலாளர் - திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு (அ.கொ.பொ)
கணக்காய்வாளர் - அரச கணக்காய்வுப் பிரிவு (அ.கொ.பொ)
பிரதிப் பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு மற்றும் விசாரணை) - மூன்றாம் நிலைக்கல்வி,தொழிற்கல்வி ஆணைக்குழு (அ.கொ.பொ)